535

# அகஸ்தியர் தமிழ் வாசகம்

ஐந்தாம் புத்தகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
NOV 1955
MADRAS

535
4-55



…யர் புத்தக சாலை

………… திருச்சி

TB
O31(5)
N55
131992

# முகவுரை

இப்புத்தகம் ' அகஸ்தியர் தமிழ் வாசகம் ' என்ற புத்தக வரிசையில் ஐந்தாவதாகும். இது அரசாங்கப் பாடத்திட்டத்தையும் முற்புத்தகங் களையும் தழுவி எழுதப்பட்டிருக்கின்றது.

நமது தமிழை வளர்த்தவர் அகஸ்தியர். ஆதலின் அவரது பெயரையும் நோக்கத்தை யுமே பெரிதும் கொண்ட இப்புத்தக சாலையா ருடையவும் எங்களுடையவுமான சிறந்த கருத்தை, இப்புத்தக வரிசைகளை ஆதரிக்கும் ஆசிரியர்களும், அதிகார்ரிகளும் நன்கறிந்து, எங்களை மேன்மேலும் தமிழ்த்தொண்டாற்ற ஊக்குவார்களாக.

அகஸ்தியரது குருவும், நம் தமிழ்த் தெய் வமுமாகிய முருகப் பெருமானது திருவரு ளால் இப்புத்தக வரிசையும், இனி வெளிவரும் புத்தகங்களும் தமிழ்ப் பணி புரிந்து இவ்வுலகில் என்றும் நின்று வாழ்க !

ஆசிரியர்கள்

# பொருளடக்கம்


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பாரத தேசம் | ... | 1 |
| 2. | பாரத நாடு (பாட்டு) | ... | 6 |
| 3. | அகஸ்தியர் | ... | 7 |
| 4. | இரும்பு | ... | 11 |
| 5. | கிராமத் தொழிலாளர் | ... | 15 |
| 6. | மேட்டூர் அணை | ... | 20 |
| 7. | மௌன வாசிப்பு—I | ... | 24 |
| 8. | வேளாளரும் அவர் மகளும் | ... | 28 |
| 9. | தமிழ் வள்ளல் அண்ணாமலைச் செட்டியார் | ... | 33 |
| 10. | ஏழைச்சிறுமியர் மனப் புழுக்கம் (பாட்டு) | ... | 38 |
| 11. | ரயில் பிரயாணம் | ... | 39 |
| 12. | கடிதம் வரைதல்—I | ... | 45 |
| 13. | தீமை செய்தவர்க்கும் நன்மையே செய்தல் (கதை) | ... | 46 |
| 14. | தென்னை | ... | 49 |
| 15. | ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் | ... | 54 |
| 16. | கம்பர் (பாட்டு) | ... | 59 |
| 17. | பொதுவிடங்களுக்குரிய ஒழுக்கம் | ... | 60 |
| 18. | கடிதம் வரைதல்—II | ... | 64 |
| 19. | புலவர்களின் இயல்பு (கதை) | ... | 65 |
| 20. | தமிழ் (பாட்டு) | ... | 70 |
| 21. | ஏசுநாதரின் நற்போதனை | ... | 71 |
| 22. | மௌன வாசிப்பு—II | ... | 74 |
| 23. | தமிழ்த் தாத்தா | ... | 77 |
| 24. | யானை | ... | 83 |
| 25. | பழமொழிகள் | ... | 88 |

| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 26. | பழையதும் காப்பியும் | ... | 89 |
| 27. | யானையின் கண்ணீர் (கதை) | ... | 94 |
| 28. | நபி நாயகம் | ... | 100 |
| 29. | மூடச் சீடர்கள் | ... | 104 |

**செய்யுள் பகுதி—I**

| | | | |
|---|---|---|---|
| | குமரேச சதகம் | ... | 114 |

**செய்யுள் பகுதி—II**

| | | | |
|---|---|---|---|
| | விவேகசிந்தாமணி | ... | 115 |

**செய்யுள் பகுதி—III**

| | | | |
|---|---|---|---|
| 1. | நல்வழி | ... | 117 |
| 2. | வாக்குண்டாம் | ... | 119 |

# ஐந்தாம் வகுப்பு



## 1. பாரத தேசம்

நாம் வசிக்கும் தேசத்திற்குத் தற்காலம் வழங்கும் பெயர் இந்தியா. இதனுடைய பழங்காலப் பெயர் பாரத தேசம். இதைப் பரதகண்ட மென்றும் அழைப்பார்கள்.

வெகு காலத்திற்கு முன்னிருந்த துஷ்யந்தன் என்னும் அரசனுக்கும் சகுந்தலை என்பவளுக்கும் பிறந்த பிள்ளை பரதன். அப்பரதன் ஒருவனே

முதன் முதலில் இப்பாரத தேசம் முழுவதையும் ஒரு குடையின் கீழ் வைத்து ஆண்டான். அதனுல் இதற்குப் 'பரத கண்டம்' என்ற பெயரும் வந்தது என்று சொல்லுகின்ருர்கள்.

நான்கு புறமும் கடலால் சூழப்பட்ட சிறு நிலப் பகுதியைத் 'தீவு' என்றும், மிகப் பெரிய நிலப் பகுதியைக் 'கண்டம்' என்றும் சொல்வார்கள். அதனுல் நம் பரத கண்டம் ஒரு காலத்தில் நான்கு புறமும் கடலால் சூழப்பட்டிருக்க வேண்டும் என்பது இதன் பெயரிலிருந்து தெரிகிறது.

ஒரு தேசத்திற்கு நீர் அரண், மலையரண் முதலியவை இயற்கையிலேயே அமைந்திருப்பது சிறந்ததாகும். நம் பாரத தேசத்திற்கு வடக்கில் உலகிலேயே மிகப் பெரிய மலையாகிய இமயம், மலையரணுக இருக்கிறது. இது பகைவர்களை வடக்கிலிருந்து உள்ளே வரவிடாமல் தடுக்கிறது. மற்ற மூன்று புறமும் நீர்அரணுக கடல்கள் அமைந்திருக்கின்றன. இதனுல் நம் தேசம் இயற்கைப் பாதுகாப்புடையதாகும்.

இமயமலையைத் தவிர நம் தேசத்தில் சுலைமான் மலைகள், விந்தியமலை, மேற்குத் தொடர்ச்சி மலை, கிழக்குத்தொடர்ச்சி மலை முதலிய மலைகளும் இருக்கின்றன. இதனுல் மலைவளம் நிறைந்தது நம் தேசம் என்பதை நாம் அறியலாம்.

உலகத்திலேயே மிகப் புனிதமான தண்ணீரையுடைய கங்கை நதியும், ஸிந்து, யமுனை, கோதாவரி, கிருஷ்ணு, காவேரி, வைகை, தாமிரபரணி முதலிய பல நதிகளும் நம் தேசத்தில் பாய்கின்றன. இதனுல் நம் தேசத்திற்கு நீர் வளத்தால்

எவ்விதக் குறைவுமில்லை என்பதையும் நாம் அறியலாம். இந்த ஆறுகள் பாய்வதனுலும் நிலத்தின் வளத்தினுலும் நெல் கோதுமை முதலிய பலவிதமான தானியங்கள், பல வகைப் பழங்கள், கிழங்கு வகைகள், பலவித மரங்கள் முதலியனவும் இங்குப் பயிராகின்றன.

நம் தேசத்தில் காசி, ராமேச்சுவரம், சிதம்பரம், திருப்பதி, மதுரை முதலிய சிறந்த க்ஷேத்திரங்களும், தாஜ்மஹால், திருமலை நாயக்கர் மஹால் முதலிய சிற்பத் தொழிலில் சிறந்த, கண்களைக் கவரும் கட்டிடங்களும் விளங்குகின்றன.

ஆத்ம ஞானத்தில் சிறந்தவர்களாகிய புத்தர், சங்கரர், இராமானுஜர், மத்வர், ஞானசம்பந்தர், வள்ளுவர் முதலிய மகான்கள் அவதாரம் செய்ததும் நம் தேசமே. இதனுல் தான் உலகத்திற்கே ஆத்ம ஞானத்தை அள்ளிக் கொடுத்தது நம் பாரத தேசமே என்று எல்லோரும் புகழ்கின்ருர்கள். சமீப காலத்தில் இருந்த விவேகானந்தரும் நம் தேசத்தின் ஆத்ம ஞானத்தை அமெரிக்கா முதலிய மேல் நாடுகளிலும் பரவச் செய்தார் என்பதை யாவரும் அறிவர்.

உலகமெல்லாம் போற்றும் கவியாகிய காளிதாசர், கம்பர் முதலிய முற்காலக் கவிகளும், தாகூர், சரோஜினி நாயுடு, பாரதியார் முதலிய சமீபக் காலக் கவிகளும் நம்தேசத்தின் கவிக் கலையை வளர்த்தவராவர். மேலும் ஜே. ஸி. போஸ், ஸி. வி. ராமன், பி. ஸி. ரே போன்ற பல விஞ்ஞானிகளையும் கணிதத்தில் தேர்ந்த இராமானுஜம் முதலியவர்களையும் நம் பாரதத் தாய் பெற்றிருக்கிருள். தேச விடுதலைக்காக உழைத்த திலகர்,

ஸி. ஆர். தாஸ், வ. உ. சிதம்பரம் பிள்ளை முதலிய வர்களையும் பெற்றெடுத்தவள் நம் பாரத அன்னையே. மேலும் உலக சமாதானத்திற்காகவே உழைத்து உயிரைவிட்ட காந்தி மகானையும் பெற்றவள் நம் பாரதத் தாயே. இன்னும், பல மதங்களையும், பல மொழிகளையும், பலவித மக்களையும் பெற்று வளர்ப்பதும் நம் தேசமே.

தங்கம், இரும்பு, நிலக்கரி முதலிய கனிப் பொருள்களும், நம் தேசத்தில் கிடைக்கின்றன. இப்படிப்பட்ட பல காரணங்களால்தான் நம் பாரத தேசத்தைப் புண்ணிய பூமி என்று உலகம் என்றும் போற்றுகின்றது.

வாழ்க வாழ்க பாரத சமுதாயம் வாழ்கவே!

## அருஞ்பதம்

| | | |
|---|---|---|
| ஒரு குடையின் கீழ் | புனிதம் | கவிக்கலை |
| கண்டம் | க்ஷேத்திரம் | விஞ்ஞானி |
| அரண் | சிற்பம் | கனிப்பொருள் |
| நீரரண் | ஆத்மஞானம் | புண்ணிய பூமி |
| மலையரண் | அவதாரம் | |

## கேள்விகள்

1. இந்தியாவின் பழைய பெயர்கள் எவை?
2. பரத கண்டம் என்று இதற்கு ஏன் பெயர் வந்தது?
3. பாரத தேசம் இயற்கை அரணையுடையது என்பது எப்படி?
4. நம் தேசத்தின் நீர்வள, நிலவளங்களைச் சொல்.
5. ஆத்மஞானத்திற் சிறந்தது நம் தேசம்—எப்படி?
6. நம் தேசத்தின் கவிகளில் நால்வரைச் சொல்.

### பயிற்சி

1. எதிர்ப்பதம் கூறு :—

பழங்காலம் ; தற்காலம் ; இயற்கை ; பெரிய; புண்ணியம்.

2. ஒரு பொருளைப் பற்றிச் சொல்லப்படும் வாக்கியங்களை ஒரு பாராவில் எழுத வேண்டும். பல பொருள்களைப் பற்றி வரும் செய்திகளை ஒரே பாராவில் எழுதக் கூடாது. செய்திகளுக்குத் தக்கப்படி பாராக்களைப் பிரித்துக்கொள்ள வேண்டும். பாராவை 'பத்தி' என்று சொல்லலாம்.

(உ - ம்.) யானையைப் பற்றி எழுதும் ஒரு கட்டுரையில் அதன் உருவம், உணவு, செயல் முதலிய பல செய்திகளில் ஒவ்வொன்றையும் தனித் தனிப் பாராவில் எழுத வேண்டும்.

இந்தப் பாடத்தில் என்னென்ன விஷயங்களைப் பற்றி எத்தனைப் பாராக்கள் இருக்கின்றன ? கவனித்துச் சொல்.

# 2. பாரதநாடு

### பல்லவி

பாருக்குளே நல்ல நாடு—எங்கள்
பாரத நாடு.

### சரணங்கள்

1. ஞானத்திலே பர மோனத்திலே—உயர்
மானத்திலே அன்ன தானத்திலே
கானத்திலே அமுதாக நிறைந்த
கவிதையிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

2. தீரத்திலே படை வீரத்திலே—நெஞ்சில்
ஈரத்திலே உப காரத்திலே
சாரத்திலே மிகு சாத்திரங் கண்டு
தருவதிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

3. நன்மையிலே யுடல் வன்மையிலே—செல்வப்
பன்மையிலே மறத் தன்மையிலே
பொன்மயி லொத்திடு மாதர்தங் கற்பின்
புகழினிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

4. ஆக்கத்திலே தொழிலூக்கத்திலே—புய
வீக்கத்திலே யுயர் நோக்கத்திலே
காக்கத் திறல் கொண்ட மல்லர்தஞ் சேனைக்
கடலிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

5. வண்மையிலே யுளத் திண்மையிலே—மனத்
தண்மையிலே மதி நுண்மையிலே
உண்மையிலே தவறுத புலவர்
உணர்வினிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

6. தோட்டத்திலே மரக்கூட்டத்திலே—கனி
யீட்டத்திலே பயிரூட்டத்திலே
தேட்டத்திலே யடங்காத நிதியின்
சிறப்பினிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

—பாரதியார்



## 3. அகஸ்தியர்

"முனிக்கரசு கையால் முகந்து முழுங்கும் பனிக் கடலும் உண்ணப்படும்" என்ற பாடலின் அடியை நீங்கள் படித்திருக்கலாம். இதனால் அகஸ்தியரே முனிவர்களுக்குள் அரசராவர் என்பதை அறியலாம். அகஸ்தியரைப் பற்றிப் புகழ்ந்து சொல்லாத நூல்களே இல்லையென்று சொல்லலாம். இவ்வளவு பெருமையுள்ள அவர் மிகக் குறுகிய வடிவம் உள்ளவர் என்று சொல்லுகிறார்கள். அதனால் அவருக்குக் 'குறுமுனி' என்ற ஒரு பெயரும்உண்டு. நம் தமிழுக்கு முதன் முதலில் இலக்கணம் எழுதிய காரணத்தால் இவருக்குத் 'தமிழ் முனி', ஆசிரி

யர்' என்ற பெயர்களும் உண்டு. இவர் பொதிகை மலையில் எப்பொழுதும் இருப்பதாகச் சொல்லப்படு வதால் இவருக்குப் 'பொதிகை முனி' என்ற பெய ரும் வழங்குகிறது.

இராமர் தண்டகாவனத்தில் புகுந்தபொழுது அங்கிருந்த முனிவர்களெல்லாம் இராமரைச் சென்று தரிசித்தார்கள். ஆனால் அகஸ்திய முனிவரோ இராமரைச் சென்று தரிசிக்கவில்லை. இராமரே அவரது ஆசிரமத்திற்குச் சென்று முனிவரது அனுமதி பெற்று அவரைத் தரிசித்தார் என்று வால்மீகி இராமாயணத்தில் சொல்லப்பட்டி ருக்கிறது. இதனாலும் அகஸ்தியர் மற்ற முனிவர் களைக் காட்டிலும் மிகச் சிறந்தவர் என்பது தெரிகிறது.

ஒரு காலத்தில் எல்லா முனிவர்களும், தேவர் களும், மேரு மலையில் கூடினார்கள். அப்பொழுது மேருமலை தாழ்ந்தது. தென்திசை உயர்ந்து விட் டது. அதனால் இரண்டையும் சமநிலைக்கு கொண்டு வருவதற்காகத் தேவர்கள் அகஸ்தியரை வேண்டி னார்கள். அவர் தென் திசை வந்து சமப்படுத் தினார் என்று பாரதத்தில் வியாச முனிவர் கூறி யிருக்கின்றார் என்று தெரிகிறது. இதனால் அகஸ் திய முனிவர் ஒருவருக்கு எல்லாத் தேவர்களும் முனிவர்களும் ஒன்று கூடினால்தான் சமமாவர் என்பதும் தெரிகிறது. இன்னும் அகஸ்தியருடைய பெருமையைப் பற்றி நூல்களில் பல காணப்படு கின்றன. அகஸ்தியருடைய மனைவியின் பெயர் "லோபா முத்திரை" என்பதாகும்.

இத்தகைய சிறந்த அகஸ்திய முனிவர் செய்த 'அகத்தியம்' என்னும் இலக்கண நூல் தற்போது

முழுவதும் கிடைக்கவில்லை. சிற்சில சூத்திரங்களே பழைய இலக்கண உரைகளில் காணப்படுகின்றன. அது நமக்குக் கிடைக்காதது நம் தமிழ்நாடு செய்த தவக்குறைவே என்று எண்ண வேண்டியிருக்கிறது. ஆயினும் அக்குறை ஒரு வகையில் நிறைவாயிற்று என்பதைக் கீழ்வரும் செய்தியால் அறியலாம்.

அகஸ்திய முனிவரிடம் தமிழ் கற்ற மாணவர் பன்னிருவர் ஆவர். அவர்களில் தொல்காப்பியரே சிறந்தவர். அவர் எழுதிய இலக்கண நூல் நமக்கு முழுவதும் கிடைத்திருக்கிறது. அவர் அகஸ்தியரது மாணவராதலால் ஆசிரியருடைய உள்ளத்தை நன்கு அறிந்தவராவர். ஆதலால் அவர் செய்த இலக்கணம் அகஸ்தியரது இலக்கணத்தைத் தழுவியே இருக்கும் என்று நாம் நினைக்கலாம். ஆனால் அகஸ்தியர் இசைத் தமிழ், நாடகத் தமிழ் இவைகளுக்கும் இலக்கணம் செய்தார் என்று தெரிகிறது. தொல்காப்பியரோ அவற்றிற்கு இலக்கணம் செய்யவில்லை; இயல் தமிழுக்கு மட்டும்தான் இலக்கணம் செய்திருக்கிறார்.

இப்பொழுதுள்ள இலக்கணங்களில் தொல்காப்பியம் தான் மிகப்பழமையும் பெருமையும் வாய்ந்தது. உங்களுக்குத் தக்க வயது வந்த காலத்தில் நீங்கள் தொல்காப்பிய இலக்கணத்தைப் படித்து, நமது தமிழ் நாட்டின் பழம் பெருமையையும் தமிழ் மொழியின் சிறப்பையும் உணர வேண்டும்; உண்மைத் தமிழராக வாழவேண்டும்.

### அரும்பதம்

| | | |
|---|---|---|
| நூல் | ஆசிரியர் | பன்னிருவர் |
| குறுமுனி | தண்டகாவனம் | அனுமதி |
| தமிழ்முனி | தரிசித்தார்கள் | சூத்திரம் |
| இசைத்தமிழ் | நாடகத்தமிழ் | நிறைவாயிற்று |
| | | உள்ளம் |

### கேள்விகள்

1. அகஸ்தியருக்கு வழங்கும் பெயர்களைக் காரணத்துடன் சொல்.

2. வால்மீகி இராமாயணத்தில் அகஸ்தியருடைய பெருமை எவ்விதம் சொல்லப்பட்டிருக்கிறது?

3. எல்லாத் தேவரும் முனிவரும் ஒன்று கூடினால் தான் ஒரு அகஸ்தியருக்கு சமமாவர் என்பது எப்படி?

4. அகஸ்தியர் தமிழுக்குச் செய்த நன்மை என்ன?

5. தொல்காப்பியரைப் பற்றி நான்கு வாக்கியங்கள் சொல்லு.

6. எதிர்ப்பதம் கூறு:—குறை; புகழ்ந்து; பெருமை; குறுகிய ; பல ; கீழ்.

7. வாக்கியங்களில் அமைத்துச் சொல் :—

ஆசிரியர் ; சமம் ; ஒருவகை ; அனுமதி; சிற்சில ; தரிசித்தார்.

# 4. இரும்பு

பொன், வெள்ளி, இரும்பு, செம்பு (தாமிரம்), ஈயம் இந்த ஐந்தும் ‘பஞ்ச உலோகங்கள்’ எனப் படும். இவை பூமியிலிருந்து வெட்டியெடுக்கப்படு கின்றன. ஆதலால் இவற்றைத் ‘தாதுப்பொருள் கள்’ அல்லது ‘கனிப்பொருள்கள்’ என்று சொல் வார்கள். இவற்றுள் இரும்பே நமது வாழ்க்கைக்கு மிகவும் உபயோகமானது.

இரும்பு பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்படும் பொழுது அது தனிப் பொருளாக இருப்பதில்லை. கல், மண், கந்தகம் முதலிய பொருள்களுடன் சேர்ந்தே கட்டியாக இது காணப்படும். முதலில் இந்த இரும்புக் கட்டியை உடைத்துப் பொடியாக்க வேண்டும். பின்னர் கொஞ்சம் சுண்ணும்பையும் கரியையும் அதனுடன் கலந்து பெரிய உலேயில் வைத்து உருக்கினுல் அதனுடன் இருந்த அசுத்தப் பொருள்கள் நீங்கிவிடும். பிறகு உருகியுள்ள அவ் விரும்புக்குழம்பை அச்சுக்களில் வார்த்து ஆறவிடு வார்கள். இந்த இரும்புக்கு ‘வார்ப்பிரும்பு’ என்று பெயர். வார்ப்பிரும்பு உடையும் தன்மையுடையது. அதனுல் இதைத் தகடுகளாக அடிக்க முடியாது.

வார்ப்பிரும்பைக் காய்ச்சி அதிலுள்ள கரியை நீக்கிவிட்டால் அது தேனிரும்பாகும். இதை எளி தில் உருக்க முடியாது.

தேனிரும்புடன் நூற்றுக்கு ஒரு பங்கு கரியைச் சேர்த்து உருக்கினுல் அது எஃகிரும் பாகும். எஃகிரும்பு மிகவும் உறுதியானது. வார்ப் பிரும்பைப் போல இதுவும் உடையும் தன்மை யுடையதே.

நம் பாரத தேசத்தில் மேற்கு வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா முதலிய இடங்களிலும், மைசூரிலும் இரும்பு வெட்டி எடுக்கப்படுகின்றது. ஆயினும் நமக்குப் போதுமான இரும்பு இன்னும் நம் தேசத்தில் கிடைக்கவில்லை.

வார்ப்பிரும்பினுல் குழாய், பெரிய உத்தரம், சிறிய விட்டம், கெட்டில், இரும்புச் சட்டி, கும்மட்டி முதலியன செய்யப்படுகின்றன. தேனிரும்பைப் பழுக்கக் காய்ச்சி அடித்து, பூட்டு, சாவி, இலாடம், ஆணி முதலியன செய்யலாம். எஃகிரும்பினுல் கத்தி, கத்தரிக்கோல், உளி முதலியன செய்கின்றுர்கள்.

இரும்பில்லையானுல் நமது தினசரி வாழ்க்கையே நடைபெருது என்னலாம். நாகரிகமும் வளராது. இரும்பு உண்டான காலத்திலிருந்து தான் நாகரிகம் வளர ஆரம்பித்தது என்று சொல்லுகிருர்கள். நமது உணவைச் சமைக்க, அடுப்பு, இரும்புச்சட்டி, கரண்டி, துடுப்பு, சல்லிக்கரண்டி முதலியன இரும்பு இல்லையானுல் கிடைக்காமற் போய்விடும்.

உழவுத் தொழிலுக்கு வேண்டிய கொழு, சால், அரிவாள், மண்வெட்டி, களைக்கட்டு முதலியனவும் கிடைக்க மாட்டா. மருத்துவத்திற்கு வேண்டிய பலவகைக் கருவிகளும் கிடைப்பது அரிதாகும். வீட்டின் பாதுகாப்புக்கு வேண்டிய தாழ்ப்பாள், பூட்டு, சங்கிலி முதலியனவும் இல்லாமல் துன்பப் படுவோம்.

மேலும் வண்டிகளுக்கு வேண்டிய அச்சு, கட்டு, கடையாணி முதலியனவும், போருக்கு வேண்டிய ஆயுத வகைகளும், ரயில், மோட்டார், ஆகாய

விமானம் முதலிய போக்குவரவுச் சாதனங்களுக்கு வேண்டிய மூலப்பொருளும் இல்லாமற் போய் விடும்.

ஆதலால் மனிதர் வாழ்க்கைக்குப் பஞ்ச உலோகங்களில் இரும்பே அதிகப் பயனைத் தரு கின்றது. அதனால் மற்ற உலோகங்களைக் காட்டி லும் இரும்பையே கடவுள் அதிகமாகக் கிடைக்கச் செய்கின்றார் என்று தோன்றுகிறது.

தமிழில் பொன்னுக்குச் 'செம்பொன்' என்றும் வெள்ளிக்கு 'வெண்பொன்' என்றும் இரும்புக்குக் 'கரும்பொன்' என்றும் பெயர். தங்கம், வெள்ளி இல்லாமல் உலக வாழ்க்கை நடக்கலாம். ஆனால் இரும்பில்லாமற் போனால் தற்காலத்தில் ஒரு நிமி டம்கூட உலக வாழ்க்கை நடைபெறாது. ஆதலால் இரும்புக்குக் கரும்பொன் என்று நம் முன்னோர்கள் இட்ட பெயர் மிகவும் பொருத்தமானதே.

### அரும்பதம்

| | | |
|---|---|---|
| பஞ்ச உலோகங்கள் | எஃகிரும்பு | நாகரிகம் |
| தாதுப்பொருள் | உத்தரம் | சல்லிக்கரண்டி |
| கனிப்பொருள் | விட்டம் | போர் |
| வார்ப்பிரும்பு | கரும்பொன் | மூலப்பொருள் |
| தேனிரும்பு | | |

### கேள்விகள்

1. பஞ்ச உலோகங்கள் எவை?

2. பூமியிலிருந்து எடுக்கப்படும்பொழுது இரும்பு எப்படி யிருக்கும்?

3. குறிப்பெழுது :—1. வார்ப்பிரும்பு. 2. தேனி ரும்பு. 3. எஃகிரும்பு. 4. கரும்பொன்.

4. இரும்பினால் விவசாயத்திற்கு ஆகும் பொருள் கள் எவை?

5. இரும்பில்லையானல் தற்காலத்தில் சமையல் செய்ய முடியாது—எப்படி?

6. தினசரி வாழ்க்கைக்கு இரும்பு மிகவும் முக்கிய மானது என்பதற்கு நான்கு காரணங்கள் சொல்லு.

## பயிற்சி

மனிதரையும், தேவரையும் "உயர்திணை" என்று சொல்வார்கள். இந்த இருவரைத் தவிர மற்ற எல்லாப் பொருள்களையும் "அஃறிணை" என்று சொல்வார்கள். அல் + திணை = அஃறிணை.

உயர்திணை (உ-ம்.) அரசன், கோவலன், கண்ணகி, வள்ளி, வேலன், இந்திரன், குபேரன், வருணன், இயமன்.

அஃறிணை (உ-ம்.) யானை, குதிரை, கிளி, குருவி, மீன், வாத்து, மரம், மலை, கல்.

பின்வரும் பெயர்களில் உள்ள உயர்திணை, அஃறிணைகளை எடுத்தெழுது.

மக்கள், செடி, பசு, ராமன், சீதை, காக்கை, ஆடு, புல், சோழன், பொன்னி.

# 5. கிராமத் தொழிலாளர்

நமது பாரத தேசம் மிகப் பெரிய தேசம். இதில் ஏழு லட்சம் கிராமங்கள் இருக்கின்றன என்பது உங்களுக்கு முன்னமேயே தெரியும். நமது தேசத்தை ஒரு பெரிய தேனடையாகவும் அதிலுள்ள கிராமங்களை அவ்வடையிலுள்ள சிற்றறைகளாகவும் சொல்லுவார்கள். வேரில் தண்ணீர் ஊற்றினால்தான் கிளைகள் தளிர் விடும். அதுபோல கிராமங்கள் செழித்தால்தான் நகரங்கள் செழிக்கும். எனவே நகரங்களுக்குக் கிராமங்களே வேர்களாகும். கிராமங்களின் செழிப்பு அங்குள்ள விவசாயிகளையும் அவர்களுக் குதவியான தொழிலாளர்களையும் சார்ந்ததாகும். ஆதலால், கிராமத்தொழிலாளர் சிலரைப் பற்றி இங்குக் கவனிப்போம்.

விவசாயி கிராமத்தில் நிலத்தை உழுகிறான். காலமறிந்து பயிர் செய்கிறான். விளையும் தானியங்களில் தனக்கு வேண்டியவற்றை வைத்துக் கொள்ளுகிறான். மீதியை, தான் நேராகவோ அல்லது வியாபாரிகளின் மூலமாகவோ நகரங்களுக்குக் கொடுத்துவிடுகிறான். இப்படி விவசாயி தானியங்களை நகரத்தில் வாழ்பவர்களுக்குக் கொடுக்காவிட்டால் நகர மக்கள் பட்டினியாகத்தான் கிடக்க வேண்டும்.

விவசாயி நிலத்தை உழுவதற்குக் கலப்பை வேண்டும். அந்தக் கலப்பையைச் செய்துகொடுப்பவன் தச்சன். சில இடங்களில் பயிர்களுக்குக் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்கவேண்டியிருக்கும். அதற்குரிய ஏற்றத்தையும் தச்சனே செய்கிறான். உழுத வயலைச் சமப்படுத்தப் பரம்படிக்க

வேண்டும். அந்தப் பரம்புப் பலகையைச் செய்ப வனும் அத்தச்சனே. நிலத்திற்கு எரு முதலிய வற்றைக் கொண்டு போவதற்கும், விளைந்த தானி யங்களை வீட்டிற் கொண்டுவந்து சேர்க்கவும் வண்டி வேண்டும். அவ்வண்டியைச் செய்வதற்கும் தச்சனே வேண்டும். கிராமத்திற்குப் பொதுவான தேரைச் செய்பவனும் தச்சனே.

தச்சன் செய்த கலப்பைக்குக் கொழு கட்ட வேண்டும். அக்கொழுவையும், நெல் அறுப்பதற் குரிய அரிவாளையும், நீரிறைக்கும் சால், ஆலைக் கொப்பரை, மண்வெட்டி, களைக்கட்டு, வெட்டுக் கத்தி முதலியவைகளையும் செய்துகொடுப்பவன் கருமான். தச்சன் செய்துகொடுத்த வண்டிக்கு வேண்டிய அச்சுத்திரட்டல், கடையாணி செய்தல், சக்கரத்திற்குக் கட்டுவிடுதல் முதலியனவும் கருமா னாலேயே செய்யப்படுகின்றன. விவசாயியின் வீடுகளுக்கு வேண்டிய இரும்புச் சாமான்களையும், கிராமத் தேருக்கு வேண்டிய இரும்புச் சாமான் களையும் செய்து தருபவன் கருமானே.

விவசாயியினுடைய மாடுகளுக்குத் தண்ணீர் வைப்பதற்கு வேண்டிய தொட்டி, தானியங்களைச் சேமித்து வைப்பதற்குத் தகுந்த குதிர்கள் (தொம் பைகள்), வீடுகளுக்கு வேண்டிய ஓடுகள், சமைப் பதற்கும், தண்ணீர் எடுப்பதற்கும் வேண்டிய பாண்டங்கள் முதலியவற்றை செய்து தருபவன் குயவனாவான்.

தண்ணீர் இறைக்கும் கவலைகளுக்கு வேண்டிய தோற்பை (தொண்டான்) முதலியவைகளையும், ஏருக்கு வேண்டிய பூட்டாங்கயிறு, ஏற்றத்திற்கு வேண்டிய வடம், விவசாயிக்கு வேண்டிய பாத

ரட்சை முதலியவைகளையும், கிராமக்கோயில்களில் அடிக்கப்படும் பறை முதலியவற்றிற்கு வேண்டிய தோல் வேலைகளையும் செய்பவர்கள் செம்மார் (சக்கிலியர்) எனப்படுவர்.

மற்றும், மருத்துவன், வண்ணான், நிலக்காவற்காரன் முதலியவர்களும் விவசாயிக்கு உதவுகின்ற கிராமத் தொழிலாளர்கள் ஆவார்கள்.

பல வளையங்கள் சேர்ந்தே ஒரு சங்கிலியாவது போல இவ்வளவு தொழிலாளர்களும் ஒருவர்க் கொருவர் உதவியாக ஒன்று சேர்ந்து உழைத்தால் தான் பயிர்த்தொழில் முன்னேற்றம் அடையும். கிராமமும் செழிக்கும். கிராமங்கள் செழிப்பதற்குத் தக்கபடிதான் நகரங்களும், நாடும், தேசமும் முன்னேற்ற மடையும்.

மேற்சொன்ன தொழிலாளர்களுக்கெல்லாம் முற்காலத்தில் மான்யங்கள் விட்டிருந்தார்கள். இப் பொழுதும் சில கிராமங்களில் மான்யங்கள் இருக் கின்றன. மற்றும் அவர்களுக்குக் கண்டுமுதல் செய்யுங்காலத்தில் களங்களில். நெல் முதலிய தானியங்களையும் விவசாயிகள் கொடுத்து உதவு வார்கள். இவ்வருவாயால் அத்தொழிலாளர்களும் கவலையின்றி வாழ்வார்கள்.

### அரும்பதம்

| | | |
|---|---|---|
| தேனடை | கொழு | அச்சுத்திரட்டல் |
| சிற்றறை | சால் | சேமித்து |
| தளிர் | ஆலைக்கொப்பரை | தொம்பை |
| பரம்பு | களைக்கட்டு | தொண்டான் |
| வடம் | செம்மார் | மருத்துவன் |
| மான்யங்கள் | கண்டுமுதல் | வருவாய் |

## கேள்விகள்

1. தேனடையும் சிற்றறையும் எவற்றிற்கு உபமானம்?

2. கிராமங்கள் செழித்தால்தான் நகரங்கள் செழிக்கும் என்பதற்கு ஒரு உதாரணம் கொடு.

3. விவசாயிக்குத் தச்சன் செய்யும் உதவிகளில் ஐந்தைச் சொல்.

4. குயவன் தொழில் விவசாயிக்கு எவ்வகையில் உபயோகப்படுகிறது?

5. செம்மார் பயிர்த்தொழில் செய்பவருக்கு எவ்வாறு உதவுகின்றனர்?

6. 'பல வளையங்கள் சேர்ந்தே ஒரு சங்கிலியாகிறது'—இந்த உதாரணம் எதைத் தெரிவிக்க வந்தது?

7. வாக்கியங்களில் உபயோகப்படுத்தி எழுது :—
சேமித்து ; வடம் ; வருவாய் ; மான்யம் ; மருத்துவர்.

## பயிற்சி

**முருகன் :** இது ஒரு ஆணைக் குறிக்கிறது. அதனால் இதை 'ஆண்பால்' என்று சொல்வார்கள்.

**வள்ளி :** இது ஒரு பெண்ணைக் குறிக்கிறது. இதனால் இதைப் 'பெண்பால்' என்பார்கள்.

**ஆசிரியர்கள் :** இது பலபேர்களைக் குறிக்கிறது. இதனால் இதைப் 'பலர்பால்' என்பார்கள்.

இந்த மூன்றும் உயர்திணையைச் சேர்ந்த பால்கள். ஆகவே உயர்திணையில் 'ஆண்பால்', 'பெண்பால்', 'பலர்பால்' என்ற மூன்று பால்கள் உண்டு.

**யானை :** இது ஒரு பொருளைக் குறிக்கிறது. ஆதலால் இது ஒன்றன் பாலாகும்.

**யானைகள் :** இது பல பொருள்களைக் குறிக்கின்றது. ஆதலால் இது பலவின்பால் ஆகும்.

இந்த இரண்டும் அஃறிணையைச் சேர்ந்த பால்கள். ஆகவே அஃறிணையில் ஒன்றன்பால், பலவின்பால் என இருபால்கள் உண்டு. (பால்=பிரிவு)

தமிழில் உயர்திணையில் மூன்று பால்களும், அஃறிணையில் இரண்டு பால்களும் ஆக ஐந்து பால்கள் உண்டு. பின்வரும் வாக்கியங்களில் உள்ள பால்களைப் பொருக்கிக் கட்டத்தில் எழுது :—

1. கோவலன் மாதவியுடன் கடற்கரையில் பலரைப் பார்த்தான்.

2. கந்தன் சில ஆடுகளையும் ஒரு பசுவையும் சந்தைக்கு ஓட்டிச் சென்றான்.

3. நாய் முயல்களை வேட்டை யாடிற்று.

4. அண்ணன் அண்ணியுடன் குழந்தைகளை அழைத்துக்கொண்டு, சில பொம்மைகளையும் வாங்கிக் கொண்டு ஒரு வண்டியில் வந்தான்.

# 6. மேட்டூர் அணை



எந்த உயிரும் உணவின்றி வாழ முடியாது. அந்த உணவு பூமியிலிருந்துதான் உண்டாக வேண்டும். அது உண்டாகத் தண்ணீர் மிக முக்கியமாகும். அத்தண்ணீர் மழையினுல்தான் கிடைக்கின்றது என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. ஆனுல் நாம் வேண்டும் பொழுதெல்லாம் மழை பெய்யாது. ஆதலால், மழை பெய்கிற காலத்திலேயே நீரைத் தேக்கிவைத்துக் கொள்ள வேண்டும்.

மலைகளில் பெய்கிற மழைநீர் ஆருக ஓடிவரும் என்பதை நீங்கள் அறிவீர்கள். அப்படி வரும் நீர் வீணுய்க் கடலில்போய் விழுந்துவிடுகிறது. அவ்வாறு விழாதபடி அந்நீரைத் தேக்கி வேண்டும் பொழுது உபயோகித்துக்கொள்ள ஆற்றின் குறுக்கே அணைகள் கட்டுகிருர்கள்.

நம் சோழநாட்டிற்குச் செழிப்பைத் தருவது 'காவிரியாறு'. இது மைசூர் இராஜ்யத்திலுள்ள குடகுமலையில் உற்பத்தியாகின்றது. சேலம், கோயம்புத்தூர், திருச்சி, தஞ்சை ஜில்லாக்களின் வழியாக ஓடி வங்காளக் குடாக்கடலில் போய் விழுகிறது. இவ்வாறு விழுந்து வீணுகாதபடி இந்த ஆற்றின் குறுக்கே பல அணைகள் கட்டப் பட்டிருக்கின்றன. இவற்றுள் மேட்டூர் அணையே மிகச் சிறந்தது. இது உலகத்திலுள்ள மிகப் பெரிய அணைகளுள் ஒன்று என்று சொல்லு கிருர்கள்.

இவ்வணை சேலம் ஜில்லாவிலுள்ள மேட்டூர் என்னும் சிற்றூரில் கட்டப்பட்டிருப்பதால் இதற்கு 'மேட்டூர் அணை' என்ற பெயர் வந்தது. இங்குக் காவிரியாறு இரண்டு குன்றுகளுக்கு இடையில் ஓடி வருகிறது. இவற்றை இணைத்தே இவ்வணை கட்டப் பட்டிருக்கிறது. இதை 1925-ம் வருஷம் ஆரம் பித்து 1934-ம் வருஷம் கட்டி முடித்தார்கள். இதைக் கட்டி முடிக்கச் சுமார் ஆறேமுக்கால் கோடி ரூபாய் செலவாயிற்று. இதன் நீளம் சுமார் ஒரு மைலுக்கு மேலிருக்கிறது. இவ்வணையின் உயரம் 216 அடி. இவ்வணைச் சுவர் ஆற்றின்கீழ் 40 அடி வரையில் சென்றிருக்கிறது. ஆற்றின் தரை மட்டத்திற்கு மேல் இவ்வணை 176 அடி இருக் கிறது. தேக்கப்பட்டுள்ள நீரின் ஆழம் 165 அடி. நீளம் 33 மைல். தேக்கத்தின் பரப்பு 60 சதுரமைல். இந்த அணைச்சுவரின் அடியின் அகலம் 120 அடி. சுவரின் மேலகலம் $20\frac{1}{2}$ அடி. அணையின்மேல் ஒரு பாதை போகிறது. அதன் அகலம் $16\frac{1}{2}$ அடி. பாதையின் இருபுறங்களிலும் கைப்பிடிச் சுவர்கள்

இருக்கின்றன. ஒவ்வொன்றும் இரண்டடி அகல முள்ளது.

இவ்வணையில் வெவ்வேருன உயரங்களில் 14 மதகுகள் அமைந்திருக்கின்றன. அம்மதகுகளின் கதவுகளை மின்சார சக்தியினுல்தான் திறக்கவும் மூடவும் முடியும். வேண்டும்பொழுது கதவுகளைத் திறந்து வேண்டிய அளவு நீரை ஆற்றில் விடுவார்கள்.

இவ்வணையின் நீர் மூன்றரை லட்சம் ஏகர் நிலங்களுக்குப் பாய்கிறது. இதன் நீரின் உதவியால் மின்சாரம் எடுக்கிருர்கள். இதைக்கொண்டு மேட்டூரில் பல இயந்திரசாலைகளை ஏற்படுத்தியிருக்கிருர்கள். இத்தேக்கத்தில் அதிகமான மீன்கள் உண்டாகின்றன. சிலர் பொழுது போக்குக்காகப் படகுகளில் செல்கிருர்கள். இவ்வணையை நம் நாட்டாரும் பிறநாட்டாரும் சென்று கண்டு மகிழ்கிருர்கள். புகைப் படங்களும் எடுத்து வருகிருர்கள். இவ்வணையாலும் அங்குள்ள இயந்திர சாதனங்களாலும் மேட்டூர் ஒரு பெரிய நகரமாகி விட்டது. இவைகளை எல்லாம் நீங்களும் சென்று பார்க்கவேண்டும். நீர் நிறைந்திருக்கும் மழைக் காலத்தில் சென்று பார்ப்பதுதான் மிகவும் நல்லது.

### அருும்பதம்

| | | |
|---|---|---|
| நீர் | பரப்பு | இயந்திரசாதனம் |
| | மதகு | |

### கேள்விகள்

1. ஆற்றின் குறுக்கே அணைகள் கட்டுவதேன்?
2. மேட்டூர் அணைக்கு அப்பெயர் ஏன் வந்தது?

3. இந்த அணையை மேட்டூரில் கட்டக் காரண மென்ன?

4. மேட்டூர் அணையைப்பற்றிக் குறைந்தது ஐந் தாறு வாக்கியங்கள் சொல்லு.

5. அணையின் நீரினால் என்ன நன்மைகள் உண்டா கின்றன?

## பயிற்சி

பொன்னன், பொன்னி, மரம், பறவை, பெட்டி—இப்பெயர்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளையே குறிக்கின்றது. ஆகையினால் இவைகளை 'ஒருமை எண்' என்று சொல்வார்கள்.

பிள்ளைகள், பெண்கள், ஆடுகள், மலைகள், ஆறுகள்—இப்பெயர்களில் ஒவ்வொன்றும் பல பொருள்களைக் குறிக்கின்றது. ஆகையினால் இவைகளைப் 'பன்மை எண்' என்று சொல்வார்கள்.

முன் பாடத்தில் கற்றுக்கொண்ட ஆண்பால், பெண் பால், ஒன்றன்பால் இம்மூன்றும் ஒருமை எண்ணுக்குரிய பால்கள். பலர்பாலும், பலவின்பாலும் பன்மை எண் ணுக்குரிய பால்கள்.

பின் வரும் வாக்கியங்களில் உள்ள ஒருமை, பன் மைப் பெயர்களை எடுத்தெழுது.

1. பொன்னன் மாடுகளுக்குத் தண்ணீர் வைத் தான்.

2. பொன்னி கடைக்குச் சென்று பாத்திரங்கள் வாங்கினாள்.

3. ஆசிரியர்களுக்குப் பிள்ளைகள் மரியாதை செய் கிறார்கள்.

# 7. மௌன வாசிப்பு—I

## (ராஜாஜி உவமைகள்)

**சீட்டுக்கட்டு**

காங்கிரஸ் சபையின் ஆதரவில் ஒரு சமயம் சில இளைஞர்கள் சில அபூர்வமான தேகப்பயிற்சி வித்தைகள் செய்து காட்டினார்கள். ஆணியைப் பல்லால் வளைத்தல், சங்கிலியை இடுப்பினால் முறித்தல் முதலிய வேலைகள் நடந்தன. ஒருவர் சீட்டுக்கட்டு ஒன்றைக் கையினாலேயே கிழித்தார். மேற்படி அபூர்வ வேலைப்பாட்டைப் பார்த்த ராஜாஜி கூறியதாவது :

"நமது நண்பர் அந்தப் பழைய சீட்டுக் கட்டைக் கிழிப்பதற்கு எவ்வளவு கஷ்டப்பட்டார் என்பதைப் பார்த்தீர்களா? இரும்புச் சங்கிலியை ஒரு நொடியில் 'தம்' பிடித்து முறித்துவிட முடிந்தது. ஆனால், சீட்டுக் கட்டைக் கிழிப்பதற்கு ரொம்ப சிரமப்பட வேண்டியிருந்தது. இத்தனைக்கும் அந்தச் சீட்டுகளைத் தனித்தனியே எடுத்தால் ஒரு நொடியில் ஒரு குழந்தைகூடக் கிழித்துவிடும். ராஜா சீட்டு ஆகட்டும், ராணி சீட்டாகட்டும், ஆஸ் ஆகட்டும், தனியாக வெளியே தலையை நீட்டினால் போதும்; உடனே கிழிந்துபோகும். இதைப்போல் தான் சமூகமும். நம்மில் எவ்வளவு புத்திசாலிகளானாலும் பலசாலிகளானாலும் தனித்தனியே பிரிந்து நின்றால் அழிந்து போவோம். ஆனால் நாம் எவ்வளவு பலவீனர்களாயிருந்த போதிலும் ஒற்றுமையுடன் ஒன்று சேர்ந்து விட்டோமானால் நம்மை யாராலும் ஜயிக்க முடியாது."

### காரமும் தித்திப்பும்

"தித்திப்புப் பண்டங்களைச் சாப்பிடும்போது சிறிது காரமும் சேர்த்துக் கொண்டால் இன்னும் அதிகமான தித்திப்புப் பண்டங்களைச் சாப்பிட முடியும். அதுபோல் ஜனங்கள் தங்களுடைய வாழ்க்கையில் சந்தோஷத்தோடு சிறிது கஷ்டத்தையும் அனுபவித்தால் தான் இன்னும் அதிக சந்தோஷத்தை அடைய முடியும்."

### சர்க்கார் எருமை

"சர்க்கார் ஒரு எருமை. அது மக்களாகிய குடியானவர்களுக்குப் பால் தருகிறது. தனக்கென்று ஒன்றும் வைத்துக் கொள்ளுவதில்லை. தனக்குப் போடும் தீனியை நமக்குப் பாலாகவே திருப்பித் தந்து விடுகிறது. குடியானவன் எருமைக்குத் தீனி போடாமல் பாலைமட்டும் கறந்து சாப்பிட வேண்டும் என்று நினைத்தால் அவனை முட்டாள் என்று தான் சொல்ல வேண்டும். பட்டினி கிடக்கும் எருமை பால் கொடுக்காது. சர்க்காரிடம் நன்மையை எதிர்பார்த்தால் அதற்கும் நல்ல தீனி போடவேண்டும். இல்லாவிட்டால் எவ்வளவு உயர்ந்த நோக்கங்களையும், கொள்கைகளையும் உடைய சர்க்காராயிருந்த போதிலும் மக்களுக்கு நன்மை செய்ய முடியாது."

### மகான்கள் சுபாவம்

மகாகவி பாரதியார் தம்முடைய வாழ்நாளில் பட்ட கஷ்டங்களைப் பற்றிச் சிலர் அடிக்கடி பேசுவதைக் குறித்து ராஜாஜி சொன்னதாவது :

"அடர்த்தியான ஆலமரம், மக்களுக்குக் குளிர்ச்சியையும் நிழலையும் தருகிறது. ஆனால், தான் மட்டும் வெய்யிலில் காய்கிறது. இந்த ஆல மரத்தின் சுபாவம் தான் மகான்களின் சுபாவமும். பிறர் சுகப்படுவதற்காக அவர்கள் கஷ்டப்படு கிறார்கள். ஆலமரம் வெய்யிலில் நிற்கிறதே என்று நாம் புலம்புவதால் என்ன பயன்?"

### பயிற்சி

I கீழ்வரும் சொற்களுக்கு இருபொருள்பட வாக்கியங் கள் எழுது :—

தும்பி, தந்தி, போர், படை, பிடி.

II 1. நான் பேசினேன்; நாங்கள் வந்தோம். இந்த இரண்டு வாக்கியங்களும் பேசுகின்ற தன்னையும் தங்களை யுமே குறிக்கின்றன. ஆதலால் இவைகளைத் தன்மை இடப் பெயர்கள் என்று சொல்வார்கள்.

2. நீ எழுதுகிறாய்; நீங்கள் படிக்கின்றீர்கள். இது முன்னாலிருப்பவனையும் இருப்பவர்களையும் குறிக் கின்றது. அதனால் இவைகள் முன்னிலை இடப்பெயர்க ளாகும்.

3. அவன் பாடுவான்; அவள் ஆடுவாள்; அவர்கள் பார்ப்பார்கள்; அது ஓடும்; அவைகள் பறக்கும். இவ் வாக்கியங்களிலுள்ள பெயர்கள் படர்க்கை இடப் பெயர் களாகும்.

ஆகவே இடம், தன்மை, முன்னிலை, படர்க்கை என மூன்று வகைப்படும்.

(குறிப்பு) தன்மை, முன்னிலையல்லாத மற்ற எல்லாப் பெயர்களும் படர்க்கைப் பெயர்களாம்.

கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்களை அவை களுக்குரிய கட்டத்தில் எழுது.

1. நான் அவனை ராமனிடம் அழைத்துச் சென் றேன்.

2. நீங்கள் நாளைக் காலையில் அவனையும் அழைத்துச் செல்லுங்கள்.

3. என்னை உன்னிடம் அவர்கள்தாம் அனுப்பினார்கள்.

| தன்மை | முன்னிலை | படர்க்கை |
| --- | --- | --- |
| | | |

# 8. வேளாளரும் அவர் மகளும்

வயலூர் என்பது ஓர் ஊர். அவ்வூரில் வைத்தி லிங்கனுர் என்று ஒரு வேளாளர் இருந்தார். அவர் ஒரு நாள் தம் வயல்களில் நடக்கும் வேலேகளேக் கவனிக்கச் செல்லும்பொழுது தம் மகள் மீனுவை யும் உடன் அழைத்துக் கொண்டு போனுர். அப் பொழுது மீனுவிற்கு வயது பத்திருக்கும்.

ஒரு வயலில் நான்கு உழவர்கள் உழுது கொண்டிருந்தனர். மற்ருெரு வயலில் சிலர் தழை களேப் போட்டு மிதித்துக் கொண்டிருந்தனர். வேறு சிலர் உழுத வயலே ஒழுங்கு படுத்திக் கொண்டிருந் தனர். நாலேந்துபேர் வாய்க்கால்களேச் சீர்திருத் தினர். சிலர் நாற்றைப் பறித்தனர். மற்றும் பலர் பலவிதமான பயிர்த் தொழில்களுக்குரிய வேலே களேச் செய்து கொண்டிருந்தனர்.

வைத்திலிங்கனுர் வேலேகளேக் கவனித்துக் கொண்டிருந்தார். மீனுவும் அந்த வேலேகளே யெல் லாம் மிகவும் கவனத்துடன் பார்த்தாள். அவள் மனத்தில் ஓர் எண்ணம் தோன்றியது. அதனுல் அவள் தன் தகப்பனுரைப் பார்த்து பின் வருமாறு கேட்டாள் :

**மீனு** :—அப்பா! நமக்கு நெல் விளேய இவ் வளவு பேருமா வேலே செய்ய வேண்டியிருக் கின்றது? இவ்வளவு பேரும் நமக்காகவே வேலே செய்கின்ருர்களா?

**வைத்திலிங்கனுர்** :—மீனு! உன் கேள்வி மிகச் சிறந்ததே. நான் கேட்பதற்கு நீ பதில்

சொல். அப்பொழுது உன் கேள்விக்குப் பதில் தானே வந்துவிடும்.

மீனு :—நல்லது அப்பா ! கேளுங்கள். எனக்குத் தெரிந்தவரை பதில் சொல்லுகின்றேன்.

வைத்திலிங்கனுர் :—மீனு ! நீ உடுத்திக் கொண்டிருக்கும் பாவாடையும் சட்டையும் சென்ற வாரம் எங்கே வாங்கினேம் ?

மீனு :—கடையில் வாங்கினேம்.

வைத்திலிங்கனுர் :—கடைக்காரருக்கு அது எங்கிருந்து கிடைத்திருக்கும் ?

மீனு :—அவர்கள் நெய்கிறவர்களிடமிருந்து வாங்கியிருப்பார்கள்.

வைத்திலிங்கனுர் :—நெய்கின்றவர்கள் துணிகளை எதனுல் நெய்கின்ருர்கள் ?

மீனு :—நூலினுல்.

வைத்திலிங்கனுர் :—நூல் எதனுல் உண்டாகின்றது ?

மீனு :—பஞ்சினுல்.

வைத்திலிங்கனுர் :—பஞ்சு எதில் உண்டாகிறது?

மீனு :—செடியில்.

வைத்திலிங்கனுர் :—செடி எப்படி உண்டாகிறது?

மீனு :—சிலர் பயிரிடுவதால் உண்டாகிறது.

வைத்திலிங்கனுர் :—சட்டைகளை உனக்குத் தைத்துக் கொடுத்தது யார் ?

மீனு :—தையற்காரர்.

வைத்திலிங்கனுர் :—மீனு ! இன்னும் இதைப் பற்றி எவ்வளவோ கேள்விகள் கேட்கலாம். அவைகளை யெல்லாம் கேட்டுக் கொண்டே போனுல்

முடிவில்லாமல் போகும். ஆதலால் அவைகள் இப்பொழுது வேண்டா.

சரி, உன் பாவாடை சட்டைகளுக்காக எத்தனைபேர் உழைத்திருக்கின்றார்கள் என்பது இப்பொழுது உனக்குத் தெரிகின்றதல்லவா! நீ பாவாடை சட்டைகளுக்காகக் கடைக்காரரிடம் கொடுத்த பணம் இத்தனை பேருக்கும் அவரவர் உழைப்புக்குத் தக்கபடி அவரவரிடம் போய்ச் சேருகின்றது. இத்தனை பேரும் தங்களுக்குக் கிடைத்த பணத்தைக் கொண்டு என்ன செய்கின்றார்கள் தெரியுமா?

மீனா :—தெரியுமப்பா! அவர்கள் சாப்பாட்டிற்கு நெல் முதலியவை வாங்குவார்கள்.

வைத்திலிங்கனார் :–அந்த நெல் அவர்களுக்கு எப்படிக் கிடைக்கின்றது?

மீனா :—நம்மைப்போல் பயிர் செய்பவர்களிடமிருந்துதான் கிடைக்கின்றது.

வைத்திலிங்கனார் :— ஆதலால், அவர்களுடைய உழைப்பு நமக்கும், நம்முடைய உழைப்பு அவர்களுக்கும் பயன்படுகிறது அல்லவா? ஆகவே, ஒருவர் உலகில் உயிர் வாழ்வதற்குத் தேவையான பொருள்களை யெல்லாம் தம் சொந்த உழைப்பினாலேயே தேடிக்கொள்ள முடியாது. ஒவ்வொருவருக்கும் பிறர் உழைப்பும் வேண்டும். எனவே உலகிலுள்ள மக்களனைவருக்கும் மற்றவர்கள் உழைப்பும் வேண்டியிருப்பதால் பிறரைத் தம் சகோதரர் போல எண்ணித் தத்தம் கடமைகளைச் சரிவரச் செய்தல் வேண்டும். இல்லையானால் உலகில் உயிர் வாழ முடியாது.

மீனு :—அப்பா ! நீங்கள் சொல்வது உண்மையே. இந்த அருமையான செய்தியை எனக்குத் தெரிவித்ததற்காக உங்களுக்கு வணக்கம்.

### அரும்பதம்

சீர்திருத்தினர் — தத்தம்

### கேள்விகள்

1. வயலில் மீனு கவனித்த செய்திகள் யாவை ?
2. தகப்பனுரைப் பார்த்து மீனு கேட்டது என்ன ?
3. மீனுவுக்கு அவள் தகப்பனுர் விளக்கியதைச் சுருக்கிச் சொல்.
4. "மக்கள் ஒவ்வொருவருக்கும் பிறர் உழைப்பும் வேண்டும்"—விளக்கு.

### பயிற்சி

1. கந்தன் வந்தான் ; பிள்ளைகள் படித்தார்கள் ; செடி வளர்ந்தது. இவ்வாக்கியங்களிலுள்ள கந்தன், பிள்ளைகள், செடி என்னும் பெயர்கள் இவ்வாக்கியங்களுக்கு எழுவாய்களாக இருக்கின்றன என்பது உங்களுக்கு முன்னமேயே தெரியும். இப்படி எழுவாயாக வரும் பெயர்களை முதல் வேற்றுமை என்பார்கள். ஆகையால் முதல் வேற்றுமையை எழுவாய் வேற்றுமை என்றும் சொல்லலாம்.

2. நான் கண்ணனைக் கண்டேன் : இதில் 'கண்ணன்' என்ற சொல்லோடு 'ஐ' என்பதும் சேர்ந்திருக்கிறது. இந்த 'ஐ'-யை இரண்டாம் வேற்றுமை உருபு என்று சொல்வார்கள். இந்த இரண்டாம் வேற்றுமையில் வரும் பெயர்கள் செயப்படு பொருளாக வரும்.

3. கண்களால் பார்க்கிறோம்; அவரோடு வந்தான்; தாயுடன் மகள் வந்தாள். இவ்வாக்கியங்களில் உள்ள பெயர்களுடன் வருகிற ‘ஆல்’, ‘ஒடு’, ‘உடன்’ இம் மூன்றும் மூன்றாம் வேற்றுமை உருபுகளாம்.

4. தாத்தா பேரனுக்கு ஒரு புத்தகம் கொடுத்தார். இதில் ‘பேரனுக்கு’ என்ற சொல்லிலுள்ள ‘கு’ என்பது நான்காம் வேற்றுமை உருபாகும்.

5. மேற்சொன்ன உருபுகள் ஒவ்வொன்றையும் வைத்து ஒவ்வொரு வாக்கியம் சொல்லு.

# 9. தமிழ் வள்ளல் அண்ணுமலைச் செட்டியார்

உலகில் செல்வத்தைப் பெறும் அதிர்ஷ்டம் சில ருக்குத்தான் இருக்கின்றது. ஆனல் தாங்கள் பெற்ற செல்வத்தை வளர்க்கவும் அதைத் தாமும் அனுபவித்து நல்லவழியில் செலவு செய்யவும் அறிந் தவர்கள் மிகச் சிலரே. பலர் இரவு பகலாக உழைப் பர்; பொருளைத் தேடுவர்; ஆனல் தாமும் அனுப விக்க மாட்டார்; பிறருக்கும் கொடார்; நாட்டிற்கும் நன்மை செய்யார். அவர்களுடைய உழைப்பும் வீண். அவர்களது மிகுந்த செல்வமும், கடல் நீர் மிகுதியாக இருந்தும் ஒருவருக்கும் குடிப்பதற்குப் பயன்படாதது போல வீணேயாகும். வருந்தித் தேடிய செல்வத்தைக் கொண்டு பல நல்ல தருமங் களைச் செய்யவேண்டும். இதை,

புண்ணிய வசத்தினல் செல்வமது வரவேண்டும்.
பொருளை ரக்ஷிக்க வேண்டும்; புத்தியுடன் அது
ஒன்று நூருகவே செய்து போதவும் வளர்க்கவேண்டும்.
உண்ணவேண்டும்; பின்பு நல்ல வஸ்திராபரணம்
உடலில் தரிக்கவேண்டும். உற்ற பெரியோர்,
கவிஞர், தமர், ஆதுலர்க்கு உதவி ஓங்கு புகழ்தேட
வேண்டும்''

என்று அம்பலவாணக் கவிராயர் 'அறப்பளீசுர சதக'த் தில் பாடியிருக்கிருர்.

இவ்வுண்மையை அறிந்தவர்களில் அண்ணு மலைச் செட்டியாரே மிகச் சிறந்தவராவார். இவர் செய்த பல தருமங்களுள் கல்விக்காகவும், நம் தமிழுக்காகவும் செய்துள்ள தருமங்களை இங்குக் கவனிப்போம்.

இவர் பிறந்த ஊர் கானுடுகாத்தான். இவருடைய தந்தையார் முத்தைய செட்டியார்; தாயார் மீனுட்சியம்மை. அவர்களுக்கு மூன்ருவது குமாரராகப் பிறந்தவரே நம் ராஜா ஸர் அண்ணுமலைச் செட்டியார். இவர்களது குடும்பம் பரம்பரையாகவே சிதம்பரம் நடராஜப் பெருமானிடம் மிகுந்த பக்தி கொண்டது. அண்ணுமலைச் செட்டியாருக்கு அங்குள்ள கோவிந்தராஜப் பெருமானிடமும் பக்தி அதிகம். அதனுல் சிதம்பரத்தில் ஸ்ரீ மீனுட்சி கல்லூரியை முதலில் ஏற்படுத்தினுர். நாளடைவில் அக் கல்லூரி பெரிதாயிற்று. அதில் ஆங்கிலம், வடமொழி, தமிழ், சரித்திரம் முதலியவை கற்பிக்க வேண்டி வந்தன. அவ்வகுப்புகளுக்கு நகரத்தின் நடுவிலிருந்த கல்லூரியில் இடம் போதவில்லை. கல்லூரியை வேறிடத்திற்கு மாற்றவேண்டிய அவசியம் நேர்ந்தது. அதனுல் சிதம்பரத்திற்குக் கிழக்கே சுமார் ஒன்றரை மைல் தூரத்திலுள்ள 'திருவேட்களம்' என்ற இடத்தில் கல்லூரியை அமைக்கத் தொடங்கினுர். ஒரு பெரும் கல்லூரியை அங்கு அமைத்தார். அதன் நீளம் முந்நூற்றறுபது அடி. அகலம் அறுபது அடி. அக்கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு அங்கு விடுதிகளையும் அமைத்துத் தந்தார்.

பிறகு விஞ்ஞானக் கலையையும் மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டுமென்று எண்ணினுர். உடனே அதற்குரிய கட்டிடங்களையும் அமைத்தார். அக்கலைக்குரிய கருவிகளை யெல்லாம் குறைவர வரவழைத்துத் தந்தார். ஒவ்வொரு கலையிலும் வல்ல, தக்க புலவர்களை அமைத்து மாணவர்களுக்குப் போதிக்கச் செய்தார். ஆசிரியர்க்கு நல்ல ஊதிய

மும் கொடுத்துதவினர். தமிழுக்கும், வடமொழிக்கும் கல்லூரிகள் அமைத்தார். வடமொழி, தமிழ் இவற்றைப் போதிக்கும் ஆசிரியர்களுக்குப் போதனமுறைக் கல்லூரியையும் நிறுவினர். பிறகு இசைக் கல்லூரியையும் அமைத்து நம் தென்னட்டுச் சங்கீதக் கலையையும் வளர்க்கலானர்.

பின்னர், அம்மீனட்சிக் கல்லூரியை ஓர் பல்கலைக் கழகமாக்க வேண்டுமென்று எண்ணங் கொண்டார். அரசாங்கமும் அவரது எண்ணத்திற்கு இணங்கியது. சுமார் ஐம்பது லட்சம் ரூபாய் செலவில் 'அண்ணமலைப் பல்கலைக் கழகம்' என்ற பெயருடன் அக்கல்லூரி எழுந்து விளங்கத் தொடங்கியது. அது முதல் அவ்விடம் 'திருவேட்களம்' என்ற பெயர் மறைந்து 'அண்ணமலை நகர்' என்ற பெயருடன் விளங்குகிறது.

இச்சர்வ கலாசாலையில் நம் தமிழ் தனிச் சிறப்புடன் வளர்கின்றது. தமிழிசை பிறந்து வளர்ந்ததும் இச்சர்வகலாசாலையிலேயே. மேனட்டு விஞ்ஞானக் கலைகள் பலவற்றைத் தமிழில் மொழி பெயர்த்து நம் தமிழருக்கு அளித்ததும் இக்கலாசாலையே.

அமெரிக்காவில் 'ராக்பெல்லர்' என்ற ஒரு கெரோஸின் வியாபாரி இருந்தார். அவர் அவ் வியாபாரத்தால் ஏராளமான செல்வத்தைத் தேடினர். அவர் தம் நாட்டின் கல்வி வளர்ச்சிக்காக "ஒன்பது கோடி டாலர்" கொடுத்தார். அதைப் போல நம் தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சிக்காகப் பெருஞ் செல்வத்தைச் செலவு செய்தவர் நமது ராஜா ஸர் அண்ணமலைச் செட்டியாரே. ஆதலால்

இவரை 'தமிழ் நாட்டு ராக்பெல்லர்' என்று அழைக்கலாமல்லவா?

செட்டியார் இப்பொழுது உயிருடன் இல்லை. ஆனால் அவருடைய உழைப்பும், பல்கலைக் கழகமும், புகழும் உலகில் தமிழ் நாடும், தமிழும் உள்ள வரையில் நிலைத்திருக்குமன்றோ!

### அரும்பதம்

| | | |
|---|---|---|
| பரம்பரை | பயிலும் | ஊதியம் |
| கல்லூரி | விடுதி | போதனுமுறை |
| திருவேட்களம் | விஞ்ஞானக்கலை | நிறுவினர் |
| பல்கலைக்கழகம் | கருவி | இசை |
| இணங்கியது | அளித்தது | டாலர் |
| மொழிபெயர்த்தது | | |

### கேள்விகள்

1. எவர்களுடைய செல்வம் வீண்?
2. வீணாகும் செல்வத்திற்கு எது உபமானமாகும்?
3. கலைக்கோயிலை எங்கே ஏன் அமைத்தார்?
4. மீனாட்சி கல்லூரியை என்ன ஆக்கவேண்டுமென்று செட்டியார் எண்ணினர்? அதற்கு எவ்வளவு செலவு செய்தார்?
5. அண்ணுமலை சர்வகலாசாலையில் என்னென்ன கற்பிக்கப்படுகின்றன?
6. அண்ணுமலைச் செட்டியாருக்கு யாரை, எதனால் ஒப்பிடலாம்?

### பயிற்சி

1. வேலன் ஊரிலிருந்து வந்தான்.
   பழங்கள் மரத்தினின்று உதிர்ந்தன.

'ஊரிலிருந்து' 'மரத்தினின்று' என்ற பெயர்களிலுள்ள 'இலிருந்து' 'இனின்று' என்ற இரண்டும் ஐந்தாம் வேற்றுமை உருபுகளாகும்.

2. அது கந்தனது வீடு.
அவை கந்தனுடைய புத்தகங்கள்.

இவைகளில் கந்தனது, கந்தனுடைய என்ற பெயர்களில் வந்துள்ள 'அது', 'உடைய' என்ற இரண்டும் ஆறும் வேற்றுமை உருபுகள் ஆகும்.

3. மணியன் வீட்டிலிருந்தான்.
பையன் பலகையின் கண் உட்கார்ந்தான்.

இவைகளில் 'வீட்டில்' 'பலகையின்கண்' என்ற பெயர்களில் உள்ள 'இல்' 'கண்' என்பவை ஏழாம் வேற்றுமை உருபுகளாகும்.

4. அண்ணு! வா. தம்பீ! போ.
கிளியே! பேசு.

இவைகளில் அண்ணு! தம்பீ! கிளியே! என்ற பெயர்கள் எட்டாம் வேற்றுமை அல்லது விளிவேற்றுமையாகும். எட்டாம் வேற்றுமைக்குத் தனியே உருபு இல்லை. அப் பெயர்களின் கடைசியில் எழுத்துக்கள் கூடியோ, குறைந்தோ திரிந்தோ வரும். அப்படி வருபவைதாம் எட்டாம் வேற்றுமை உருபுகளாகும்.

முதல் வேற்றுமைக்கும் உருபு இல்லை. வாக்கியத்தினுல் அது முதல் வேற்றுமை அல்லது எழுவாய் வேற்றுமை என்று தெரிந்துகொள்ள வேண்டும்.

மேற் சொன்ன உருபுகளை வைத்து ஒவ்வொரு வாக்கியம் சொல்லு.

## 10. ஏழைச் சிறுமியர் மனப்புழுக்கம்

நல்லபண் டங்களைக் கண்டறியோம்—ஒரு
நாளும் வயிருர உண்டறியோம்
அல்லும் பகலும் அலைந்திடுவோம்—பசி
ஆற வழியின்றி வாடிடுவோம். 1

அன்னப்பால் காணுத ஏழைகட்கு—நல்ல
ஆவின்பால் எங்கே கிடைக்குமம்மா
என்னப்பா யாம்படும் பாட்டையெல்லாம்—சென்று
யாரிடம் சொல்லி அழுவோமம்மா. 2

இட்டலி ஐந்தாறு தின்ருேமென்பீர்—நீங்கள்
ஏதும் கருணை யிலீரோ அம்மா
பட்டினி யாக இறந்திடினும்—நாங்கள்
பாவம் பழிசெய்ய மாட்டோமம்மா. 3

காப்பி காப்பி என்று கத்துவீரே—அதைக்
கண்ணுலே கண்டது மில்லையம்மா
சாப்பிடற் கேற்ற உணவிதுவோ—அன்றிச்
சட்டையோ தொப்பியோ கூறுமம்மா. 4

ஆனைக் கொம்பன்சாதம் உண்டோமென்பீர்—இதை
ஆரே உலகினில் நம்பிடுவார்
தேனைப் பழித்த மொழியுடையீர்—எம்மைத்
தேராத பித்தரென் றெண்ணி னீரோ. 5

சோப்புச் சோப்பென்று புகழ்ந்திடுவீர்—அது
சுட்டுங் கடிக்குங் கிழங்கதுவோ
காப்புக் கைவீசி நடப்பவரே—அதன்
காரியம் சற்றே உரைப்பீரே. 6

—சி. தேசிக விநாயகம் பிள்ளை



# 11. ரயில் பிரயாணம்

இக்காலத்தில் நாம் ஓர் ஊரிலேயே இருந்து வாழமுடிவதில்லை. பல ஊர்களுக்கும், பல நாடுகளுக்கும் சென்று வரவேண்டியிருக்கிறது. அப்படிச் சென்று வருவதற்குரிய போக்குவரவுச் சாதனங்கள் இப்பொழுது நிரம்ப இருக்கின்றன. அவைகளில் ரயில் ஒன்றுகும். அதில் பிரயாணம் செய்யும்பொழுது அதற்கு வேண்டிய முன்னேற்பாடுகளைச் செய்துகொண்டு பிரயாணம் செய்ய வேண்டும். அவ்வேற்பாடுகளைப் பற்றி இங்குக் கவனிப்போம்.

ரயில்கள் புறப்படும் நேரம், அவை நிற்கக் கூடிய நிலையங்கள், எந்தெந்த நிலையங்களில் எவ்வளவு நேரம் நிற்கும் என்பவற்றை யெல்லாம் குறித்துள்ள ''கால அட்டவணைப் புத்தகம்'' ரயில் வேக்காரரால் ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளி

யிடப்படுகின்றன. அந்த அட்டவணையில் நமக்கு விருப்பமானதை வாங்கவேண்டும். நாம் ஏறக் கூடிய நிலயத்திற்கு வண்டிவரும் நேரம், அது நிற்கும் நேரம் முதலியவற்றை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். அட்டவணை இல்லாமற் போனுல் சரியாகத் தெரிந்தவர்களிடமாவது கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்.

நாம் ஊருக்குக் கொண்டுபோக வேண்டிய பொருள்களை நன்கு மூட்டைகளாகக் கட்டவேண்டும். அவற்றின்மேல் நம் விலாசத்தைச் சரியாக எழுதி வைக்கவேண்டும். அப்பொழுதுதான் நாம் ரயிலில் ஏறும்பொழுதோ இறங்கும்பொழுதோ மூட்டைகளை வைத்து மறந்துவிட்டால் ரயில்வே அதிகாரிகளிடம் தெரிவித்து நாம் அவற்றைத் திரும்பப் பெறமுடியும். மூட்டைகள் அதிகமாகவும் கனமுள்ளவைகளாகவும் இருந்தால் அவைகளை நிறுத்து எடைக்குத் தக்க பணம் கொடுத்து 'லக்கேஜ் டிக்கட்' வாங்கவேண்டும். ஆதலால் அதிகமான மூட்டைகள் இருக்கும்பொழுது வண்டி வருவதற்கு அரைமணி நேரத்திற்கு முன்பே நிலயத்திற்குப் போகவேண்டும். அதிக மூட்டைகள் இல்லாதிருந்தால் சுமார் கால்மணி நேரத்திற்கு முன்பு நிலயத்திற்குச் சென்றுல் போதும்.

ரயில்வே நிலயத்திற்குச் சென்ற பிறகு அங்குள்ள விதிகளின்படி நாம் போகின்ற ஊருக்கு டிக்கட் வாங்கவேண்டும். நாம் கொடுத்த பணமும் டிக்கட்டில் குறித்திருக்கும் பணமும் சரிதானு என்றும், மீதிச் சில்லறை வாங்கியிருந்தால் அதுவும் சரியாக இருக்கிறதா என்றும் பார்க்க வேண்டும். நாம் போகவேண்டிய ஊர் சிறியதாக

இருந்தால் அதற்கு டிக்கட் இருக்காது. அப்பொழுது 'பிளாங்க் கார்ட்' என்ற தனி டிக்கட்டை எழுதி வாங்கிக்கொள்ள வேண்டும். அத்தகைய காலத்தில் இருபது நிமிஷங்களுக்கு முன்பே நிலையத்திற்குப் போவது நல்லது.

டிக்கட் வாங்கினபிறகு மூட்டைகளை எண்ணி ரயில் மேடையில் (ப்ளாட்பாரத்தில்) கொண்டு போய் வைத்துக்கொள்ள வேண்டும். டிக்கட்டினுடைய 'நம்பரைக்' குறித்து வைத்துக்கொள்வது நல்லது. ரயில் வந்தவுடன் தகுந்த இடத்தைப் பார்த்து ஏறிக்கொள்ள வேண்டும். ஏறிய பிறகும் மூட்டைகள் சரியாக இருக்கின்றனவா என்று கவனிக்கவேண்டும்.

சில சமயங்களில் இடையிலுள்ள சந்திப்புக்களில் இறங்கி வண்டி மாறவேண்டியிருக்கும். அதற்குத் தக்கபடி வண்டிகளின் நேரம், நிற்கும் மேடை முதலியவற்றைச் சரியாகத் தெரிந்து கொண்டு மூட்டைகளையும் கவனமாக எடுத்துக் கொண்டு வண்டியில் ஏறவேண்டும். இறங்க வேண்டிய நிலையத்தை வண்டி அடைவதற்கு முன்பே இறங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொள்ள வேண்டும். இறங்கும் நிலையத்தில் வண்டி நிற்கும் நேரத்தைத் தெரிந்துகொண்டு அதற்குத் தக்கபடி இறங்கவேண்டும்.

ரயில் வண்டியிலுள்ள பெட்டிகளெல்லாம் பொதுவாக ஒரேமாதிரி இருக்கும். ஆதலால் சந்திப்புக்களில் கீழே இறங்கித் தண்ணீர் முதலியன எடுத்துச் செல்லவேண்டியிருந்தால், நாம் இறங்கின வண்டியை நன்ருக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு பெட்டியிலும் சில

எழுத்துக்களும் எண்களும் இருக்கும். அவற்றைக் குறித்துக்கொள்வது நல்லது.

பிரயாண காலத்தில் பணத்தைச் சட்டையில் வெளியிலிருக்கும் பைகளில் வைக்கக்கூடாது. பத்திரமாக வைத்துக்கொள்ள வேண்டும். டிக்கட்டையும் பத்திரமாக வைத்திருக்க வேண்டும். நாம் போகும் ஊருக்குச் செலவாகும் பணத்தைவிட எப்பொழுதும் பணம் கொஞ்சம் அதிகமாகக் கையில் இருப்பதே நல்லது.

ரயில் ஓடும்பொழுது ஏறவும், இறங்கவும் கூடாது. படியிலோ, கதவைத்திறந்து வைத்துக் கொண்டு ஓரத்திலோ நிற்கக்கூடாது. ஜன்னலின் மீது உட்காரக்கூடாது. ஜன்னலின் வழியாக வண்டியில் ஏறுதலோ, இறங்குதலோ கூடாது. கூடியவரையில் பிரயாண காலத்தில் தூங்காமலிருப்பது நல்லது. இடமிருக்கும்பொழுது பிறர் ஏறுவதைத் தடுக்கக் கூடாது. பெண்கள் வந்தால் இடமில்லாமற்போனால் அவர்களை நிற்கவிடாமல் நாம் எழுந்து நின்று அவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டும். ஜன்னல் வழியாகத் தலையை வெளியே நீட்டி 'என்ஜின்' பக்கம் பார்க்கக்கூடாது. அப்படிச் செய்தால் நிலக்கரித்தூள் கண்களில் வந்து விழுந்துவிடும். ரயிலில் பிரயாணம் செய்பவர்கள் மேற்சொல்லிய விதிகளை மேற்கொள்வது நல்லது.

### அருஞ்பதம்

| | |
|---|---|
| போக்குவரவுச் சாதனம் | பிளாங்க் கார்ட் |
| நிலையங்கள் | ரயில் மேடை |
| கால அட்டவணை | சந்திப்பு |
| லக்கேஜ் டிக்கட் | என்ஜின் |

## கேள்விகள்

1. தற்காலத்திலுள்ள போக்குவரவுச் சாதனங்களில் நான்கு சொல்.

2. ரயில்வே கால அட்டவணையிலிருந்து நாம் என்னென்ன தெரிந்து கொள்ளலாம்?

3. மூட்டைகளின்மேல் நம் விலாசத்தை எழுதுவதனால் என்ன நன்மை?

4. இறங்கி ஏறவேண்டிய சந்திப்புக்களில் நாம் எவைகளைத் தெரிந்துகொள்ளவேண்டும்?

5. ரயில் பிரயாணத்தின்பொழுது நாம் செய்யக் கூடாதவை எவை?

## பயிற்சி

1. மனிதன்; மரம்; பசு; ஏற்றம்; கலப்பை; ஏர்—இப்பெயர்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளைக் குறிக்கின்றன. இவ்வாறு பொருள்களைக் குறிக்கும் பெயர்களைப் 'பொருட்பெயர்' என்று சொல்வார்கள்.

2. சென்னை; திருச்சி; தஞ்சை; மதுரை—இவை இடங்களைக் குறிக்கின்ற பெயர்கள். ஆதலால் இவைகள் 'இடப்பெயர்'களாகும்.

3. காலை; மாலை; பகல்; இரவு; வாரம்; மாதம்; வருஷம்—இப்பெயர்கள் காலங்களைக் காட்டுகின்றன ஆதலால் இவை 'காலப்பெயர்'களாகும்.

4. தலை; கை; கால்; வேர்; கிளை; இலை; அலகு; இறகு—இப்பெயர்கள் பொருள்களின் உறுப்புக்களை அல்லது அவயவங்களைக் குறிக்கின்றன. ஆதலால் இவைகளைச் 'சினைப் பெயர்' என்று சொல்வார்கள். (சினை = உறுப்பு; அவயவம்.)

5. வெண்மை; கருமை; அழகு; அன்பு; நன்மை; தீமை—இப்பெயர்கள் பொருள்களின் குணங்களைக்

குறிக்கின்றன. ஆதலால் இவைகள் 'குணப்பெயர்' அல்லது 'பண்புப்பெயர்' ஆகும். (பண்பு=குணம்).

6. ஓடுதல்; ஆடுதல்; படித்தல்; உழவு; நெசவு— இப்பெயர்கள் தொழில்களைக் குறிக்கின்றன. ஆதலால் இவைகள் 'தொழிற்பெயர்'களாகும்.

பின்வரும் வாக்கியங்களில் வரும் பெயர்களின் வகைகளைக் கொடுத்திருக்கும் கட்டத்தில் எழுது:—

1. ராமன், 'காலையில் உலாவுதல் கால்களுக்கு நன்மையைத் தரும்' என்று சொன்னான்.

2. சென்னையிலுள்ள கடற்கரைக்குப் பலர் மாலையில் காற்று வாங்க வருவார்கள்.

3. கந்தன் நகைக்கடைக்குச் சென்று மோதிரத்தை வாங்கி விரலில் அணிந்துகொண்டான்.

| 1<br>பொருட் பெயர் | 2<br>இடப் பெயர் | 3<br>காலப் பெயர் | 4<br>சினைப் பெயர் | 5<br>குணப் பெயர் | 6<br>தொழில் பெயர் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

# 12. கடிதம் வரைதல்—I

## கம்பெனிக் கடிதம்

18, இளமையாக்கினர் கோயில் தெரு,
சிதம்பரம்,
25–6–'51.

புத்தகக் கம்பெனி நிர்வாகி அவர்களுக்கு,

அன்புள்ள ஐயா,

தங்கள் கம்பெனியின் பெயரால் பதித்துள்ள தமிழ் வாசக புத்தகங்களில் வகைக்கு ஒன்ருக, ஒன்று முதல் ஐந்து புத்தகங்களை அனுப்ப வேண்டுகின்றேன். தங்கள் கம்பெனிப் புத்தகப் பட்டியல் ஒன்றும் அனுப்ப வேண்டுகிறேன்.

தங்கள் உண்மையுள்ள,
**பொன்னம்பலம்.**

### பயிற்சி

1. அவன், அவள், அவர்கள், அது, அவை என்னும் பெயர்களைச் 'சுட்டுப்பெயர்கள்' என்று சொல்வார்கள்.
2. எவன், எவள், எவர், எது, எவை, யார், யாது, யாவை என்னும் இப்பெயர்களை 'விளுப்பெயர்கள்' என்று சொல்வார்கள்.
3. மேற்சொன்ன சுட்டுப்பெயர்களையும் விளுப் பெயர்களையும் வைத்து ஒவ்வொரு வாக்கியம் சொல்.
4. நீர், அவ்வாறு என்ற சொற்களுக்கு இரு பொருள்பட இரண்டிரண்டு வாக்கியங்கள் எழுது.

## 13. தீமை செய்தவர்க்கும் நன்மையே செய்தல்

குளத்தூர் என்ற ஊரில் ஒரு பெரிய குளம் இருந்தது. அக்குளத்தின் கரையில் பலவிதமான மரங்களிருந்தன. அந்த மரங்களில் ஒரு பெரிய வேப்ப மரம் குளத்தின் கரையோரத்தில் இருந்தது. அதன் இலைகள் குளத்தில் விழுந்து தண்ணீரைக் கெடுத்தன. அதனால் சுகாதார அதிகாரி அம் மரத்தை வெட்டும்படி உத்தரவிட்டார். நான்கு கூலியாட்கள் அதை வெட்டத் தொடங்கினர்.

மரம் மிகப் பெரியதாயிருந்தது. அதனால் முதலில் கிளைகளை வெட்டி விட்டுப் பின் அடி மரத்தை வெட்ட எண்ணினார்கள். அதன்படியே அக்கூலியாட்கள் சில கிளைகளை வெட்டினார்கள். அதற்குள் நடுப்பகல் வந்துவிட்டது. வெய்யிலும் அதிகமாக இருந்தது. கூலியாட்களும் களைப் படைந்து விட்டனர். அவர்களுக்குப் பசியும் அதி கரித்தது. அதனால் அவர்கள், கையில் கொண்டு வந்திருக்கும் உணவை உண்டுவிட்டுச் சிறிது இளைப்பாறுவோம்; பிறகு வெட்டலாம் என்று தங்களுக்குள்ளே பேசிக் கொண்டார்கள். உடனே குளத்தில் இறங்கிக் கை கால்களைக் கழுவிக் கொண்டு உணவை உண்டனர். பிறகு, தாங்கள் வெட்டிய மரத்தில் வெட்டப்படாத கிளைகள் தரும் நிழலிலேயே படுத்துக்கொண்டனர். வேப்ப மரத் தின் நிழல் உடம்புக்கு நல்லதென்று சொல்வார்கள். அதனால் அந்த நிழல் அவர்களுக்கு மிக்க ஆனந்த மாக இருந்தது.

அப்பொழுது தற்செயலாக ஒருத்தி, தன் மகள் லீலாவதியுடன் தண்ணீர் எடுக்க வந்தாள். லீலாவதி, மரத்தின் கிளைகளில் சில வெட்டப்பட்டிருப்பதைப் பார்த்தாள். வெட்டப்படாத கிளைகளின் நிழலிலேயே அதை வெட்டியவர்கள் இளைப்பாறுவதையும் கண்டாள்.

அவள் ‘அம்மா! இந்த வேப்ப மரம், தனக்குத் தீமை செய்கின்றவர்களுக்கும் நிழலைத் தந்து கொண்டிருக்கின்றதே! இதென்ன ஆச்சரியம் பாருங்கள். தீமை செய்கின்றவர்களுக்குத் தீமையன்றோ செய்ய வேண்டும்’ என்றாள்.

அதற்குத் தாய், ‘லீலா! உலகில் நன்மை செய்கின்றவர்களுக்கு நன்மை செய்வது இயற்கை. உனக்கு ஒருவர் ஓர் உதவி செய்தால் அவர்களுக்கு நீ திரும்ப உதவி செய்கின்றாய். அது அவ்வளவு சிறந்ததன்று. தாய் என்ற முறையில் நான் உனக்கு உதவி செய்கின்றேன். மகள் என்ற முறையில் நீ எனக்கு உதவி செய்கின்றாய். இவையும் உலகில் இயற்கையே. தீமை செய்கின்றவர்களுக்கும் நன்மை செய்வது தான் சிறந்த செயலாகும். புத்தர், திருநாவுக்கரசர் முதலிய மகான்களெல்லாம் தீமை செய்தவர்களுக்கும் நன்மையே செய்திருக்கின்றார்கள் என்று நீ படித்திருக்கின்றாயே.’

‘பழங்காலத்திற்குப் போவானேன்? நம் காலத்திலேயே இருந்த காந்தி மகானை உனக்குத் தெரியுமே. அவர் தென்னாப்பிரிக்காவில் தமக்கு எவ்வளவோ தீமை செய்தவர்களுக்கும் நன்மையே செய்திருக்கின்றார் என்பது உனக்குத் தெரியாதா? இந்த உயர்ந்த மனித குணம் எல்லாரிடத்திலும் அமைந்திருப்பதில்லை. சிலரிடந் தானிருக்கிறது.

இவ்வுயர்ந்த குணத்தைக் குறித்து நம் தமிழில் இருக்கும் ஒரு பாட்டை நீ படித்திருப்பாயே. அது உனக்கு நினைவில் இல்லையா?' என்று கேட்டாள்.

லீலாவதி:—ஆமாம் ஆம்மா! அது இப்பொழுதான் நினைவிற்கு வருகின்றது. சொல்லுகின்றேன் கேளுங்கள்.

"சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாமவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையும் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்."

தாய்:—இனி இப்படிப் படித்ததை மறந்துவிடாதே. போகலாம் வா.

## அரும்பதம்

| | |
|---|---|
| சுகாதார அதிகாரி | தீமை |
| இளைப்பாறுவோம் | நன்மை |
| நடுப்பகல் | இயற்கை |
| ஆனந்தமாக | |

## கேள்விகள்

1. மரத்தை வெட்டச் சொன்னது யார்? ஏன்?
2. மரம் வெட்டியவர்கள் இளைப்பாறியது எங்கே?
3. லீலாவதி தாயைப் பார்த்து என்ன கேட்டாள்?
4. தாய் லீலாவதிக்குச் சொன்ன பதிலைச் சுருக்கி எழுது.
5. இப்பாடத்தின் நீதியைக் குறிக்கும் செய்யுளொன்று சொல்.
6. கீழ்வரும் பதங்களை வைத்து ஒவ்வொரு வாக்கியம் எழுது:—தலை; தழை; இலை; இளை; இழை; வலை; வளை; கலை; களை; மலை; மழை; வால்; வாழ்; வாள்.



# 14. தென்னை

கிளைகள் இல்லாத மரங்கள் சில. அவற்றுள் தென்னை ஒன்று. இது நம் தென்னாட்டில் அதிகம். இது மணற்பாங்கான இடங்களில் நன்றாக வளரும். இதன் வளர்ச்சிக்கு உப்பும், உப்பங் காற்றும் வேண்டும். அதனால் தென்னை கடற்கரையோரங்களில் செழிப்பாக வளர்கின்றது. திருவாங்கூர், கொச்சி, மலையாளம் முதலிய கடற்கரை பிரதேசங்களிலும், இலங்கைத் தீவிலும் இது அதிகமாக வளருகின்றது.

தென்னை சுமார் அறுபது அடி உயரத்திற்கு மேலும் வளரும். இதன் மரம் உருண்டிருக்கும். இதன் மேற்புறம்தான் வைரமாக இருக்கும். உட்புறத்தில் இருப்பதற்குச் சோறு என்று பெயர். உட்

புறத்தில் வைரமில்லாமல் வெளிப் புறத்தில் மட்டும் வைரமுள்ள மரங்களுக் கெல்லாம் தமிழில் புல் என்று பெயர். பனை, ஈந்து, கமுகு, மூங்கில் முதலி யவை இப்புல்லினத்தைச் சேர்ந்தவையே. ஆத லால் தென்னையும் புல்லினத்தைச் சேர்ந்ததே.

தென்னை மரத்திற்குக் கிளைகள் இல்லை. இதன் தலையில் மட்டைகள்தான் நாற்புறமும் இருக்கும். அம்மட்டைகளே தென்னைக்குக் கிளைகள் ஆகும். ஒரு மரத்தில் சுமார் பன்னிரண்டு மட்டைகள் வரை இருக்கும். மட்டைகளின் அடிப்புறத்தை நாரால் பின்னப்பட்ட வலைபோல் ஒன்று மூடிக் கொண்டிருக்கும். அதற்குப் 'பன்னாடை' என்று பெயர். அதைக் கொண்டு முற்காலத்தில் தேன், நெய் முதலியவற்றை வடிக்கட்டுவார்கள்.

மட்டைகளுக்கு இடையில் தென்னம் பாளை யுண்டாகும். பாளை வெடிக்க அதிலிருந்து தென் னங் குரும்பைகள் தோன்றும். இக் குரும்பைகளே வளர்ந்து இள நீர்களாகவும் பிறகு முற்றித் தேங் காய்களாகவும் ஆகின்றன. தேங்காயின் மேற்புறம் தோல்போல் கெட்டியாக மூடப்பட்டிருக்கும். அத னுட் புறத்தில் பஞ்சுடன் கூடிய நார் நிரம்ப இருக் கும். அதற்குள்ளே கெட்டியான கொட்டங்கச்சு இருக்கும். அதற்குள்ளே பருப்பிருக்கும். பருப் புக்கு உட்புறம் இனிப்பான நீரிருக்கும்.

மட்டையின் இருபுறங்களிலும் நீண்ட ஓலைகள் உண்டு. அவற்றின் நடுவே ஈர்க்கு இருக்கும். ஓலைகளைக் கீற்றுக முடைவார்கள். கீற்றுகளால் வீடு வேய்வார்கள். அவற்றைப் படல்களாகவும் உபயோகிப்பார்கள். ஈர்க் குச்சிகளைக் கிழித் தெடுத்து அவற்றைத் துடைப்பமாகச் செய்து

கொள்வார்கள். ஓலைகளையும் மட்டைகளையும் கொண்டு அடுப்பும் எரிக்கலாம். குருத்தோலைகளால் சித்திர வேலைகளும் செய்வார்கள். கீழே உதிர்கின்ற குரும்பைகளை ஊற வைத்து அடித்துப் பஞ்சாகச் செய்து கொள்வார்கள். அப் பஞ்சை வண்டி மெத்தைகளுக்கு உபயோகிப்பார்கள்.

இளந்தேங்காய்க்கு இளநீர் என்று பெயர். அதன் நீரைக் கோடைக்காலத்தில் தாகத்திற்குச் சாப்பிடுவார்கள். தைலம் முதலிய மருந்துகளுக்கும் உபயோகிப்பார்கள். இளநீரில் முற்ருத பருப்பிருக்கும். அதற்கு 'வழுக்கை' என்று பெயர். அதையும் உண்பார்கள். இந்துக்கள் முற்றின தேங்காயை உடைத்துக் கடவுளுக்குப் படைப்பார்கள். தேங்காய்ப் பருப்பு உருசியாக இருக்கும். அதைத் துருவிச் சமையலுக்கு உபயோகிப்பார்கள். பருப்பை உலர்த்திச் செக்கிலிட்டு ஆட்டி எண்ணெய் எடுப்பார்கள். தேங்காய் எண்ணெய் விளக்கு எரிக்கவும், சமையல் செய்யவும், தேய்த்துக் குளிக்கவும் உபயோகப்படும். மருந்துகளுக்கும் உபயோகப்படுகிறது. அதைக் கொண்டு சோப்பு மெழுகுவர்த்தி முதலியனவும் செய்கிருர்கள்.

பாளையை ஊறவைத்து மெல்லியதாகக் கிழித்துக் கட்டுவதற்குச் சிறு நார்களாக உபயோகிக்கிருர்கள். கொட்டங்கச்சு அகப்பையாகவும், நீர் குடிக்கும் பாத்திரமாகவும் உபயோகப்படுகிறது; அதைக்கொண்டு அடுப்பும் எரிக்கிருர்கள். பொத்தான்களும் செய்கிருர்கள். கொட்டங்கச்சின் மேல் மூடியிருக்கும் நாரால் கயிறு திரிப்பார்கள். அந்தக் கயிற்றைப் பந்தல்கள் படகுகள் முதலிய வற்றைக் கட்டுவதற்கு உபயோகிக்கிருர்கள்.

கிணறுகளிலிருந்து தண்ணீர் இறைக்கவும் உபயோகிக்கிறார்கள். பெரிய வடமாக அக்கயிறுகளை திரித்துத் தேரும் இழுக்கிறார்கள்.

தென்னைமரம் தூண்களாக உபயோகப்படுகின்றது. சில இடங்களில் நீர் இறைக்க ஏற்றமாகவும் பயன்படுகிறது. அதைப் பிளந்து வீடுகளுக்கு விட்டங்களாகவும் போடுகிறார்கள். தென்னை மரத்தின் வேர் மருந்துக்கு உபயோகப்படுகிறது. இவைகளால் தென்னை மரத்தில் உபயோகப்படாத பாகமே இல்லை என்பதை நாம் நன்கு அறியலாம்.

நன்றாக முற்றிய தேங்காய் நெற்றுக்களை நாற்று விடுவார்கள். அந்நாற்றுக்களுக்குத் தென்னம் பிள்ளைகள் என்று பெயர். அப்பிள்ளைகளை ஆழமும் அகலமும் உள்ள குழிகளில் மணலும் உப்பும் கொட்டி அவற்றில் நடுவார்கள். குழிகள் ஒவ்வொன்றுக்கும் இடையில் சுமார் பதினைந்தடிக்கு மேல் இடைவெளி இருப்பது நல்லது. தென்னைக்கு வேண்டிய அளவு தண்ணீர் ஊற்றிப் பாதுகாத்து வளர்த்தால் சுமார் ஐந்து வருஷங்களில் காய்த்துப் பலன் தரும்.

தென்னைமரம் உண்ண உணவும், குடிக்க நீரும், படுக்கப்பாயும், கட்டக் கயிறும், எரிக்க விறகும் தந்து பலவகையிலும் மனிதருக்கு உதவுகின்றது. அதனால் இதை, ‘ நினைத்ததைத் தரும் கற்பக விருட்சம் ’ என்றும் சொல்வார்கள்.

அரும்பதம்

| | | |
|---|---|---|
| வைரம் | கொட்டங்கச்சு | வழுக்கை |
| புல் | வேய்வார்கள் | படை |
| இளம் | சித்திரவேலைகள் | நாற்று |
| இடைவெளி | கற்பகவிருட்சம் | கமுகு |
| பன்னாடை | | |

## கேள்விகள்

1. கிளைகள் இல்லாத மரங்கள் நான்கு சொல்.
2. எப்படிப்பட்ட மரங்கள் புல்லினமாகும்?
3. தென்னை எவ்விடங்களில் அதிகமாக வளர்கின்றது?
4. 'பன்னாடை' என்று எதற்குப் பெயர்? அதன் உபயோகம் என்ன?
5. குரும்பை எவ்வாறு உபயோகப்படுகிறது?
6. தேங்காயின் பருப்பை எந்தெந்த வகைகளில் உபயோகிக்கிறார்கள்?
7. தேங்காயின் நார் எவ்வாறு உபயோகப்படுகிறது?
8. கொட்டங்கச்சை என்னென்ன செய்யலாம்?
9. தேங்காயின் கயிறு எவ்வாறு உபயோகப்படுகிறது?
10. தென்னைமரம் எவைகளுக்குப் பயன்படுகிறது?
11. தென்னை மரம் பயிரிடும் வகையைச் சொல்.
12. தென்னை மரத்தை ஏன் கற்பகவிருட்சம் என்று சொல்லுகிறார்கள்?

## பயிற்சி

1. அ; இ; உ; எ; ஒ—இந்த ஐந்து எழுத்துக்களும் குறுகிய ஓசையை உடையன ஆதலால் இவற்றிற்குக் 'குறில்' அல்லது 'குற்றெழுத்து' என்று பெயர்.

2. ஆ; ஈ; ஊ; ஏ; ஓ; ஔ—இந்த ஏழு எழுத்துக்களும் நீண்ட ஓசையை உடையன. ஆதலால் இவற்றிற்கு 'நெடில்' அல்லது 'நெட்டெழுத்து' என்று பெயர்.

அது இங்கே ஏன் வந்தது? ஆடு ஒன்று ஓடிற்று. ஊர் ஓரம் ஐவர் ஓடி ஒளிந்தனர். இவ்வாக்கியங்களிலுள்ள குற்றெழுத்துக்களையும், நெட்டெழுத்துக்களையும் எடுத்துச் சொல்.



## 15. ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள்

ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளை அறியாதவர்கள் நம் தமிழ் நாட்டில் ஒருவருமே இரார் என்றே சொல்லலாம். இவர்கள் நம் தமிழ், வடமொழி, தெலுங்கு, ஆங்கிலம் முதலிய பல மொழிகளைக் கற்றவர். இவற்றுள் தமிழிலும், வடமொழியிலும் அதிகத் தேர்ச்சி பெற்றவர். இவரைத் தமிழே ஓர் உருவெடுத்து வந்தவர் என்றும் சொல்லலாம். இவர்கள் விளங்கி நின்ற மடம் திருப்பாதிரிப்புலியூர் சந்நிதி வீதியில் இருக்கின்றது.

பெரியோர்களால் தான் ஓர் ஊருக்குப் பெருமை உண்டாகின்றது என்பார்கள். சைவசமயாசாரியார் நால்வருள் ஒருவரான ஸ்ரீ அப்பர் சுவாமிகள்

கடலிலிருந்து கரையேறிய பெருமையைப் பெற்றது திருப்பாதிரிப்புலியூர். அப்பெருமை ஞானியார் சுவாமிகள் அங்கு விளங்கியிருந்தபடியால் அதிகமாக வளரலாயிற்று. திருப்பாதிரிப்புலியூரைப்பற்றி முன் அறியாதவர்கள்கூட ஞானியார் சுவாமிகளது பெருமையால் அதை நன்கு அறிந்து கொள்ளத் தொடங்கினுர்கள்.

சுவாமிகளது நெற்றியிலும் திருமேனியிலும் திருநீறு விளங்கும். கழுத்தில் அணிந்த தங்கச் சங்கிலியில் கோக்கப்பட்ட தங்கச் செச்சை, ருத்திராட்ச மாலையுடன் மார்பில் அழகாக விளங்கும். அவரது திருவாய் 'ஷண்முகா ! ஷண்முகா!' என்று எப்பொழுதும் முருகனை அழைத்த வண்ணமிருக்கும். வருபவர்கள் எவர்களாக இருந்தாலும் அவர்களை 'வாருங்கள்' 'இருங்கள்' என்று இனிய முகத்துடன் அழைப்பார்கள்.

சுவாமிகள் தினமும் அதிகாலையில் எழுந்து விடுவார்கள். முருகனை வணங்குவார்கள். தாம் பாடுபட்டுத் தேடிய தமிழாகிய செல்வத்தைத் தம்மிடம் வருபவர்களுக்கெல்லாம் வேண்டிய மட்டில் அள்ளிக் கொடுக்க வேண்டுமென்ற பெரு விருப்பம் உடையவர்கள். ஆதலால் மாணவர்கள் வருவதற்கு முன்பே ஆசனத்தில் வந்து அமர்ந்து விடுவார்கள். பிறகு ஏழு மணிக்கெல்லாம் மாணவர்கள் வருவார்கள். சுவாமிகள் அவர்களுக்குச் சுமார் ஒன்பது மணி வரையில் பாடம் கற்பிப்பார்கள். உயர்ந்த நூல்களைப் படிப்பவர்க்கு ஒன்பது மணிக்குமேல் தனியே பாடம் சொல்வார்கள். சில காலங்களில் ஒரு மணிக்கு மேல் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு இலக்கணப் பாடம் கற்பிப்பார்கள். மாலை ஐந்து

மணியிலிருந்து ஆறு மணி வரைக்கும் பத்தாவது வகுப்பு மாணவர்களுக்கு அவர்களுக்குள்ள தமிழ்ப் பாடங்களைக் கற்பிப்பார்கள். மாலை ஆறரை மணிக்குமேல் எட்டு மணி வரையில் பெரியவர் களுக்கு மத சம்பந்தமான நூல்களைக் கற்றுக் கொடுப்பார்கள். ஒழிந்த நேரங்களில் தாம் படித்த நூல்களில் உள்ள சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளப் பலர் வருவார்கள். சிறிதும் தாமதமின்றித் தமது சிரமத்தையும் பாராமல் சுவாமிகள் அவர்களது சந்தேகங்களை அவ்வப் போது நீக்கி அனுப்புவார்கள்.

சுவாமிகளிடம் யாரும் எந்தப் பாடத்தையும் எப்பொழுது வேண்டுமானாலும் கற்கலாம். சுவாமி கள் முருகனை வணங்குபவர். ஆயினும், அவரிடம் ஜாதி பேதமோ மதபேதமோ இல்லை. ஆண்களும் படிக்க வருவார்கள். பெண்களும்வந்து கற்பார்கள். சுவாமிகளைப்போல் ஒய்வின்றிச் சலிக்காமல் மாண வர்களிடம் உண்மையான அன்புடன் பாடங்கற் றுக் கொடுத்தவர்கள் ஒருவருமில்லை யென்றே சொல்லலாம்.

இவ்வளவு பாடுபட்டு மாணவர்களுக்காக உழைத்த சுவாமிகள் அவர்களிடமிருந்து ஒன்றை யும் எதிர்பார்ப்பதில்லை. பல மாணவர்களுக்குச் சுவாமிகளே பொருளும் கொடுத்து உதவி இருக்கின் றார். அவர்களுக்கு வேலையும் வாங்கிக் கொடுத்திருக் கின்றார். சுவாமிகளிடம் கற்ற மாணவர்களில் பலர் இன்று பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் சிறந்த தமிழாசிரியர்களாக விளங்குகின்றார்கள்.

ஞானியார் சுவாமிகள் மாணவர்களுக்குத் தமிழைக் கற்பித்தது மட்டுமன்றித் தமிழ்நாடு

முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்திருக்கிறார். ஆங்காங்கு உயர்ந்த கருத்துக்களைச் சிறு குழந்தைகளும் அறிந்து கொள்ளும்படி மிக எளிய நடையில் பிரசங்கங்கள் செய்திருக்கின்றார். சில சமயம் காலையில் ஓர் ஊரிலும், மாலையில் ஓர் ஊரிலும் பிரசங்கம் செய்வார்கள். சுவாமிகளுடைய பிரசங்கத்தைக் கேட்க ஜனங்கள் பெரிய தேர் திருவிழாக்களுக்கு வருவது போல் பெருங்கூட்டமாக வருவார்கள். நான்குமணி நேரத்திற்குக் குறையாமல் பிரசங்கம் நடைபெறும். கேட்பவருக்குச் சிறிதும் சலிப்பு உண்டாகாது. பேசும் திறமையில் சுவாமிகளுக்குச் சமமானவர் ஒருவருமில்லை.

இவ்வாறு, பிறர் உதவியை எதிர்பாராமல் கற்பித்தும், பிரசங்கம் செய்தும் தமிழை வளர்த்தவர்கள் தமிழ் நாட்டில் வேறு ஒருவருமில்லை. சுவாமிகளது முழுப்பெயர் 'ஸ்ரீலஸ்ரீ சிவஷண்முக மெய்ஞ்ஞான சிவாசார்ய சுவாமிகள்' என்பதாகும்.

இப்பொழுது சுவாமிகள் நம்மிடையே இல்லை. மறைந்துவிட்டார். ஆயினும் அவர் வளர்த்த தமிழ் அவர்களது புகழைப்போல் நம் தமிழ் நாட்டில் என்றும் நிலைத்திருக்கும்.

### அரும்பதம்

உருவெடுத்து
திருமேனி
திருநீறு
செச்சை
திருவாய்
அமர்ந்து
சலிக்காமல்

### கேள்விகள்

1. ஞானியார் சுவாமிகள் கற்ற மொழிகள் எவை?
2. திருப்பாதிரிப்புலியூருக்குள்ள பெருமை யாது?
3. அப்பெருமை எப்படி வளரலாயிற்று?

4. சுவாமிகள் தமிழ் வளர்ச்சிக்காக தினந்தோறும் செய்தது என்ன?

5. சுவாமிகளுக்கு ஜாதி மத பேதம் இல்லை—விளக்கு.

6. சுவாமிகளுடைய பிரசங்கத் திறமையைப் பற்றிச் சொல்.

7. சுவாமிகளது முழுப்பெயர் என்ன?

## பயிற்சி

1. 'படித்தான்', வருகின்றான்' இந்த வினைச் சொற்கள் முடிந்துவிட்டன. இப்படி முடிந்த வினைச் சொற்களை வினைமுற்று அல்லது முற்றுவினை என்பார்கள்.

3. 'படித்த', 'வருகின்ற' இவ்வினைச் சொற்கள் முடியவில்லை. இவ்விதம் முடியாத வினைச் சொற்களை 'எச்ச வினை' என்பார்கள்.

(எச்சம்=முடியாதது; குறைந்திருப்பது).

'படித்த பையன்' 'வருகின்ற பசு' இவைகளில் 'படித்த', 'வருகின்ற' என்ற எச்சங்கள் பையன், பசு என்ற பெயர்களைத்தான் கொண்டு முடியும். பெயர்களைத் தவிர வேறு சொற்களைக் கொண்டு முடியா.

இவ்விதம் பெயரைக் கொண்டு முடிகிற எச்சங்களுக்குப் 'பெயரெச்சம்' என்று பெயர்.

பின்வரும் வாக்கியங்களிலுள்ள வினைமுற்றுக்களையும், பெயரெச்சங்களையும் எடுத்துச் சொல்லு.

1. படிக்கிற பையன் பரீட்சையில் தேறுவான்.
2. அழுத பிள்ளை பால் குடிக்கும்.
3. துள்ளிய மாடு பொதி சுமக்கும்.
4. ஓடுகிற எலியைப் பூனை பிடித்தது.
5. பாடின பாட்டைத் திருப்பிப் பாடு.
6. விளையும் பயிர் முளையில் தெரியும்.
7. உழைத்த மனிதன் கூலி பெறுவான்.
8. எரியும் விளக்கில் எண்ணெய் ஊற்று.

# 16. கம்பர்

ஆரியம் நன்குணர்ந்தோன்—தமிழின்
ஆழம் அளந்து கண்டோன்
மாரி மழை போலக்—கவியின்
மழைபொ ழிந்திடு வான். 1

அயன்ப டைப்பினையும்—திருத்தி
அழகு செய்திடு வான்
நயம்தெ ரிந்துகதை—நடத்தும்
நாட கக்கவிஞன். 2

பண்டைத் தமிழ்மொழியைப்—படித்துப்
பக்குவம் செய்து வைத்தான்
கண்டின் சுவையெல்லாம்—சொல்லில்
கனியக் காட்டிடுவான். 3

எவரும் போற்றிடவே—தமிழில்
இராம கதை புனைந்தோன்
புவனம் உள்ளளவும்—அழியாப்
புகழ் பரந்திடு வோன். 4

விருத்தப் பாவினிலே—கருத்தை
விளங்கச் செய்தளித் தோன்
திருத்தம் பெற்றநடை—தமிழில்
தெரியக் காட்டி நின்றோன். 5

பண்ணுக் கிசைவாக—விருத்தம்
பாடி அளித்திடு வான்
எண்ணும் கருத்துடனே—சந்தம்
இசையச் செய்திடு வான். 6

—சி. தேசிக விநாயகம் பிள்ளை

## 17. பொதுவிடங்களுக்குரிய ஒழுக்கம்

மிருகங்களுக்குத் தாம் இருக்கும் இடத்திற்கும் காலத்திற்கும் தக்கபடி நடந்துகொள்ளத் தெரியாது. ஏனெனில் அவைகளுக்குப் பகுத்தறிவு இல்லை. மனிதனுக்கோ பகுத்தறிவு இருப்பதால் அவன், தான் இருக்கும் இடம், காலம் முதலியவற்றிற்குத் தக்கபடி நடந்து கொள்ளவேண்டும். இல்லையானல் மக்கள் அவனை இகழ்வார்கள். ஒருவன் தன்னல் யாருக்கும் எக்காலத்திலும் எவ்விதத் தீங்கும் உண்டாகாமல் நடந்து கொள்ளும் திறமையே பகுத்தறிவாகும். இவ்விதம் பகுத்தறிவுள்ள மனிதன் பொதுவிடங்கள் எவை யென்பதையும், அவ்விடங்களில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் அறிந்துகொள்வது முக்கியமாகும்.

பள்ளிக்கூடம், தபால்நிலையம், ரயில்வே நிலையம், கோயில், பாதை முதலியவைகள் பொதுவிடங்களாகும். இவைகளில், வீடுகளில் நாம்நடந்து கொள்ளும் முறையைக் காட்டிலும் அதிக கவனத்துடன் நடந்துகொள்ளவேண்டும். வீடோ தனிப்பட்ட ஓரிடம். அங்கு நாமும் நம்மைச் சேர்ந்த சிலரும் தான் வசிப்போம். அங்கு ஒரு சமயம் நாம் சிறிது தவறுதலாக நடந்து விட்டாலும் அது சிலருக்குத் தான் இடையூருக இருக்கும். அன்பின் மிகுதியால் நம் வீட்டவர்கள் அக்குற்றங்களைப் பொருட்படுத்தாமலும் இருக்கலாம். ஆனல், பொதுவிடங்களில் நாம் ஒரு சிறு தவறு செய்து விட்டாலும் அது பல பொதுமக்களுக்கு இடையூருகும்.

பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் கருத்துடன் பாடம் நடத்திக் கொண்டிருக்கிருர். பிள்ளைகளும் அதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருக்கிருர்கள். அப்பொழுது ஒரு பையன் பாடத்தைக் கவனிக்காமல் திடீரென்று சிரித்தல், பேசுதல் முதலிய ஒழுங்கீனமான செயல்களைச் செய்தால், அவை வகுப்பிலுள்ள அவ்வளவு பிள்ளைகளின் கவனத்தையும் கெடுத்து விடுகின்றன. ஆசிரியருக்கும் பாடத்தை நடத்த முடியாமல் தொந்தரையை உண்டாக்குகின்றன. மேலும் அப் பையனும் தன் பாடத்தை இழந்து விடுகிருன். இப்படி ஒருவன் செய்யும் ஒழுங்கீனத்தால் பலருக்கு இடையூறும் நஷ்டமும் உண்டாகின்றன.

தபால், ரயில்வே நிலையங்களுக்குச் சென்ருல் அவ்விடங்களுக்குரிய விதிகளை அனுசரித்துச் சென்று வேலைகளை முடித்து வரவேண்டும். இல்லையாஞல் அந்நிலையத்தில் வேலை செய்பவர்களுக்கும் நம்மைப் போல் வந்துள்ள மற்றவர்களுக்கும் துன்பமுண்டாகும். நமக்கும் அங்கு மதிப்புக் குறைவு உண்டாகும். மேலும் தண்டனைக்கும் உள்ளாவோம்.

பாதையில் செல்லும்பொழுது அதற்குரிய விதிகளை மேற்கொண்டு செல்லவேண்டும். இரண்டு மூன்று பேராகக் கைகளைக் கோத்துக் கொண்டு சுவர் வைத்தது போல் செல்லுதல் கூடாது. அடிக்கடி பாதைகளின் குறுக்கே செல்லுதல் தகாது. பாதைகளில் வலது கைப்புறமாகவே போவது நல்லது. மேடையுள்ள பாதைகளில் மேடையின் மீது தான் நடந்து செல்லவேண்டும். பாதைகளில் விளையாடுதல் கூடாது. சிறு குழந்தைகளை

அழைத்துச் சென்றால் அவர்களைத் தனியே விடக் கூடாது. கையில் பிடித்துக் கொண்டுதான் செல்ல வேண்டும். சைக்கிள் முதலிய வாகனங்களில் செல்லும்பொழுது அவற்றிற்குரிய விதிகளை அனு சரித்தே செல்லவேண்டும்.

ஒருவர் பேசிக்கொண்டிருக்கும் பொதுக் கூட் டத்திற்குச் சென்றால் பேசுபவர்க்கும் கேட்பவர் களுக்கும் இடையூறுண்டாகாவண்ணம் அமைதி யாக இருந்து கேட்கவேண்டும். பேசுவது திருப்தி யில்லையென்றால் அமைதியாகவே எழுந்து வந்து விட வேண்டும். பேசுபவரிடம் ஏதேனும் கேட்க வேண்டுமென்றால் அவருடைய அனுமதி பெற்றே கேட்கவேண்டும். இடையிடையே கேட்கக் கூடாது. கேட்கும் கேள்வியும் பொருத்தமுடையதாகவே இருக்கவேண்டும்.

பொதுவிடங்களில் உள்ள பொருள்களைச் சேதப்படுத்தக் கூடாது. நம் சொந்தப் பொருள் களைக் காட்டிலும் அவற்றைப் பெரிதாக மதிக்க வேண்டும். கண்ணாடித்துண்டு, ஆணி, வாழைப் பழத்தோல் முதலியவைகளைப் பொதுவிடங்களில் போடக் கூடாது. யாரேனும் தெரியாமல் அங்குப் போட்டிருந்தால் அவைகளை எடுத்துக் குப்பைத் தொட்டிகளில் போடவேண்டும். மூக்குச் சிந்தல், எச்சில் துப்பல், மலஜலம் கழித்தல் முதலியவை களை அவற்றிற்கென்றுள்ள இடங்களுக்குச் சென்று தான் செய்யவேண்டும். கண்ட இடங்களில் செய்யக் கூடாது.

மேற்சொன்ன விதிகளைக் கடைப்பிடித்து நடப் பவன்தான் நாகரிகமுள்ளவன், பகுத்தறிவுடைய வன் என்று மதிக்கப்படுவான். நீங்களும் உங்கள்

பகுத்தறிவை உபயோகித்து நாகரிகமுள்ளவர்களாக விளங்குங்கள். பிறர் மதிப்பையும் பெறுங்கள். நாட்டுக்கும் பெருமையை உண்டாக்குங்கள்.

## அரும்பதம்

| | | |
|---|---|---|
| மக்கள் | ஒழுங்கீனமான | கடைப்பிடித்து |
| பகுத்தறிவு | விதிகள் | நாகரிகம் |
| இகழ்வார்கள் | அமைதி | |
| இடையூறு | அனுமதி | |

## கேள்விகள்

1. மனிதன் எவைகளுக்குத் தக்கபடி நடந்து கொள்ளவேண்டும்?
2. பகுத்தறிவு என்பது யாது?
3. வீட்டைக்காட்டிலும் பொதுவிடங்களில் மிகக் கவனமாய் நடந்துகொள்ள வேண்டும். ஏன்?
4. வகுப்பறையில் ஒரு பையனுடைய ஒழுங்கீனத்தால் உண்டாகும் தீமைகள் என்ன?
5. பாதையில் செல்லும் பொழுது அனுசரிக்க வேண்டிய விதிகள் யாவை?
6. ஒரு பொதுகூட்டத்திற்குச் சென்றால் அங்கு எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்?

## பயிற்சி

பின்வரும் பதங்களைப் பிரித்து எழுது :—

பொதுவிடங்களுக்குரிய
இல்லையானல்
முறையைக் காட்டிலும்
பொருட்படுத்தாமல்

பதங்களைச் சேர்த்தெழுது :—

கேட்டு + கொண்டு.
பாடத்தை + கவனி.
ஒழுங்கு + ஈனம் + ஆன.
உண்டு + ஆகின்றன.

# 18. கடிதம் வரைதல்–II

## லீவுக் கடிதம்

திருச்சிராப்பள்ளி,
26–5–'51.

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

என் அக்காளுக்கு நாளைய தினம் குணசீலத்தில் திருமணம் நடக்க இருக்கின்றது. அதற்கு நாங்கள் குடும்பத்தோடு போகப் போகிறோம். ஆதலால் தயவு செய்து 27, 28 ஆகிய இரண்டு தினங்கள் எனக்கு லீவு கொடுக்கும்படி வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,
தங்கள் கீழ்ப்படிதலுள்ள மாணவன்,
**தி. சி. மணவாளன்.**

**விலாசம் :—**

திருவாளர் S. K. சாமி அவர்கள்,
ஆசிரியர், 5-வது வகுப்பு,
ஸரஸ்வதி ஆரம்பப் பாடசாலை,
திருச்சிராப்பள்ளி.

# 19. புலவர்களின் இயல்பு

எப்பொழுதும் படித்துக் கொண்டிருப்பதும், தம்மிடம் வரும் மாணவர்களுக்கு இலவசமாகப் பாடம் கற்றுக் கொடுப்பதும் முற்காலப் புலவர்களின் வழக்கம். அதனுல் அவர்களுக்குப் பணம் சம்பாதிப்பதற்கு நேரம் இருப்பதில்லை. அழியாச் செல்வமாகிய கல்வியிலுள்ள விருப்பம், அழியும் செல்வமாகிய பொருள் மீது செல்லுமோ? ஆதலால் பொருள் கிடைத்தாலும் அதை வைத்துக் காப்பாற்றி விருத்தி செய்வதுமில்லை. இக்குணம் எல்லாத் தேசப் புலவர்களுக்கும் உடன் பிறப்பாகும். வறுமையென்னும் தீ வந்து வாட்டும்பொழுது தான் பொருளென்னும் நீரைத்தேடுவர். அச்சமயம் அரசர்களிடமோ, வள்ளல்களிடமோ செல்வார்கள். தங்கள் துன்பங்களைக் கவிகள் மூலம் அவர்களுக்குத் தெரிவிப்பார்கள். அவர்கள் மன மகிழ்ந்து கொடுக்கும் பொருள்களைப் பெற்று வந்து தங்கள் குடும்பத்தைக் காப்பாற்றுவர். வறுமையால் எவ்வளவு வருந்திலும் தங்களை மதிக்காதவரிடம் செல்ல மாட்டார்கள். இக்குணங்களை உடைய ஒரு புலவர் கதையைப் படிப்போம்.

நம் தமிழ் நாட்டிலிருந்த பெரும்புலவர்களில் பெருஞ்சித்திரனர் என்பவர் ஒருவர். அவர் மிக அழகான கவிகளைப் பாடுவதில் வல்லவர். அவர் கவிகள் படிப்பவர் உள்ளத்தை அள்ளத்தக்க ஆற்றலுடையன. புலவர்களுக்கு இயற்கையான வறுமை அவரையும் விடவில்லை.

அவர் காலத்தில் குமணன் என்னும் ஒரு சிற்றரசன் இருந்தான். அவனுக்குத் தன்னிடம் உள்ள

பொருளைக் கேட்பவர்க்கு இல்லையென்று சொல்லத் தெரியாது. யார் எதைக் கேட்டாலும் கொடுத்து விடுவான். அவன் புகழ் எங்கும் பரவி இருந்தது. அக்குமணனது குணங்களைப் பெருஞ்சித்திரனாரும் கேள்விப்பட்டார். அவனிடம் தன் வறுமையைத் தெரிவித்துப் பொருள் பெற்றுவர எண்ணிச் சென்றார்.

பெருஞ்சித்திரனார் குமண வள்ளலைப் பார்த்தார். தமது வறுமையைச் சொல்லத் தொடங்கினார். ''வள்ளலே! என் தாயாருக்குத் தொண்ணூறு வயதுக்கு மேலாகி விட்டது. அவர்க்குச் சரியாகக் கண்கள் தெரியவில்லை. ஒரு கோலை ஊன்றிக் கொள்வர். கால்கள் தள்ளாடுவதால் எடுத்து வைக்க முடிவதில்லை. அதனால் குறுகக் குறுகக் கால்களை வைத்து நடப்பார். இவ்விதம் நடந்தாலும் வீட்டு வாசலை விட்டு வெளியில் போக முடியாது. 'ஐயோ! எனக்கு வயதாகி விட்டதே. இன்னுமா நான் இவ்வறுமையுடன் வாழவேண்டும். என் உயிர் தொலையவில்லையே. பாழும் எமன் என்னை எப்பொழுது கொண்டு போவானோ' என்று வறுமையைத் தாங்க முடியாமல் தன் வாழ்க்கையை வெறுத்துக் கொள்வர். இத்தகைய தாயார் எனக்கு இருக்கின்றார்.

என் மனைவிக்கோ உணவில்லை. உடம்பெல்லாம் வாடிவிட்டது. வீட்டில் அரிசி, பருப்பு முதலிய ஒன்றுமில்லை. அதனால் குப்பையில் தானாகவே முளைத்த இளங்கீரைகளைப் பறித்து வருவாள். அதை உப்பிடாமல் வெறுந்தண்ணீரில் வேகப்போடுவாள். அதைச் சிறிது உண்பாள். அவள் சோற்

றையும், மோரையும் கண்டு பல மாதங்களாயின. இவ்விதம் துன்பப்படும் மனைவியும் எனக்குண்டு.

குமண வள்ளலே! இன்னும் கேள். என் பிள்ளைக்குத் தன் தாயிடம் பால் கிடைக்காமையால் அழுவான். கூழையும், சோற்றையும் கேட்பான். கவிழ்த்து வைத்திருக்கும் வெறும் பாத்திரங்களைத் திறந்து திறந்து பார்ப்பான். அவற்றில் ஒன்று மில்லாமை கண்டு அழுவான். அவன் அழுகையை நிறுத்த என் மனைவி 'புலி வருகின்றது, புலி வருகின்றது' என்று சொல்லிப் பயமுறுத்துவாள். அப்பொழுதும் அவன் அழுகையை நிறுத்தமாட்டான். பிறகு சந்திரனைக்காட்டி, 'அம்புலி பார், அம்புலி பார்' என்று சொல்லுவாள். என்ன சொன்னாலும் அவன் பசி அவன் அழுகையை நிறுத்தவிடாது. இவ்விதம் கஷ்டப்படும் பிள்ளையின் துன்பத்தை என் மனைவியால் தாங்க முடிவதில்லை. அதனால் அவள் பிள்ளையைப் பார்த்து, 'உன் கஷ்டத்தை உன் தந்தையிடம் சொல்' என்று சொல்லிக் கண்ணீர் வடிப்பாள். இவ்விதத் துன்பத்தால் வருந்தும் ஒரு பிள்ளையும் எனக்கு இருக்கின்றான்.

வள்ளலே! இத்துன்பங்களெல்லாம் நீங்கி என் மனைவி மகிழ்ச்சியடையும்படி எனக்கு நிறைந்த செல்வத்தைக் கொடுத்து அனுப்பவேண்டும்" என்றார்.

அதைக்கேட்ட குமணவள்ளலின் மனம் உருகிற்று. மகிழ்ச்சியுடன் அவருக்கு வேண்டிய செல்வத்தைக் கொடுத்து அனுப்பினார். இவ்வளவு வறுமையால் துன்பப்பட்டுச் செல்வத்தைப் பெற்ற பெருஞ்சித்திரனார் செய்ததைப் பாருங்கள். அது ஒரு பெரும் வியப்பைத் தரும்!

அவர் கொணர்ந்த செல்வத்தை மனைவியிடம் கொடுத்தார். "பெண்ணே! இப் பெருஞ்செல்வம் கொடையிற் சிறந்த குமணவள்ளல் கொடுத்தது. 'இதை யாருக்கும் கொடுக்காமல் நாமே வைத்துக் கொள்வோம். அதனால் மகிழ்ச்சியுடன் பல வருடங்கள் இன்பமாக வாழ்வோம்' என்று எண்ணி வைத்திருக்காதே. உன்னிடம் விருப்பமுள்ள பெண்களுக்கும் இதைக் கொடு. உனக்கு எந்தெந்தப் பெண்களிடம் விருப்பமிருக்கின்றதோ அந்தந்தப் பெண்களுக்கும் கொடு. உன் தாய் வழியில் உனக்கு உறவினர்களாக இருக்கும் பெண்களுக்கும் தா. முன்பு நமக்கு யார் யார் கடன் கொடுத்தார்களோ அவர்களுக்கும் கொடு. என்னையொன்றும் யோசனை கேட்காதே. 'இன்னாருக்குத் தான் கொடுப்பது, இன்னாருக்குக் கொடுக்கக்கூடாது' என்று நினைக்காதே. உன் விருப்பப்படி யாருக்கு வேண்டுமானாலும் நீயும் கொடு; நானும் கொடுக்கின்றேன்" என்றார்.

இதனால் பெருஞ்சித்திரனார் மிகமிக வறுமைப் பட்டுச் செல்வத்தைப் பெற்றுவந்தும் அதைவைத்துக் காப்பாற்ற வேண்டுமென்று எண்ணினாரா? யாருக்கும் அதைக் கொடுக்காமல் தாமேவைத்து வாழவேண்டும் என்ற எண்ணமாவது அவருக்கு இருந்ததா? அவர் மனைவிக்காவது அவ்வித எண்ணமிருந்ததா? ஆதலால், புலவர்களுக்குக் கல்வியிலிருக்கும் விருப்பம் பொருள்மீது இல்லையென்பது விளங்குகின்றதல்லவா?

### அரும்பதம்

| | | |
|---|---|---|
| மாணவர் | உடன்பிறப்பு | வல்லவர் |
| இலவசம் | வறுமை | ஆற்றல் |
| அழியாச் செல்வம் | வள்ளல்கள் | குறுகக் குறுக |
| பொருள் | கவிகள் | வியப்பு |
| | | கொடை |

### கேள்விகள்

1. முற்காலப் புலவர்களின் வழக்க மென்ன?

2. குமண வள்ளலைப்பற்றி ஒரு குறிப்பெழுது.

3. பெருஞ்சித்திரனர் தம் தாயாரைப்பற்றி என்ன சொன்னர்?

4. பெருஞ்சித்திரனர் தம் மனைவியைப்பற்றிச் சொல்லியதையாவது அல்லது மகனைப்பற்றிச் சொல்லியதையாவது சொல்.

5. கொணர்ந்த செல்வத்தைப் புலவர் மனைவியிடம் கொடுத்து என்ன சொன்னர்?

### பயிற்சி

I. கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களை எடுத்துச் சொல்லு :—

1. பலர் பொருளைச் சம்பாதிப்பர்.
2. கல்லூரி பெரிது ஆயிற்று.
3. செட்டியார் கல்லூரியை அமைத்தார்.
4. அரசாங்கம் இணங்கியது.
5. நாம் தருமங்களைச் செய்யலாம்.

II. பின்வரும் வாக்கியங்களிலுள்ள வினைச்சொற்களுக்குக் காலங்களைச் சொல்லு.

1. அதிர்ஷ்டம் இருக்கின்றது.
2. அரசாங்கம் இணங்கியது.
3. கல்லூரி நிலைத்து நிற்கும்.
4. ராக்பெல்லர் என்ற வியாபாரி இருந்தார்.
5. கலாசாலை வளர்கின்றது.

# 20. தமிழ்

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணும்
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும் வகை செய்தல் வேண்டும். 1

யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவர்போல், இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை, உண்மை
வெறும் புகழ்ச்சி யில்லை;
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம்; ஒரு சொற் கேளீர்!
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்! 2

—பாரதியார்

## 21. ஏசுநாதரின் நற்போதனை

மக்களுக்கு நல்லொழுக்கத்தைப் போதிக்க வந்த மகான்களுள் ஏசுநாதர் ஒருவர் என்பது உங்களுக்கு முன்பே தெரியும். பல மகான்கள் நல்லொழுக்கத்தை வெறும் புத்திமதிகளாகவே பெரும்பாலும் சொல்லி யிருக்கிறார்கள். கதைகள் மூலம் அதிகம் விளக்கியதில்லை; வெறும் புத்திமதி களாகச் சொல்வதை அறிவாளிகள் தான் அறிய முடியும். கதைகள் மூலமாக விளக்கினாலோ சிறு குழந்தைகள் கூட அவற்றை எளிதில் அறிந்து கொள்ள முடியும். அதனால், ஏசுநாதர் தாம் மக்களுக்குச் சொன்ன உயர்ந்த நீதிகளைப் பெரும் பாலும் கதைகள் மூலமாகவே விளக்கியிருக்கின்றார். அத்தகைய கதைகளில் ஒன்றை இங்குப் பார்ப் போம்.

ஒரு சமயம் ஒரு 'பார்சி' ஏசுநாதரைத் தம் வீட்டிற்கு தம்முடன் விருந்துண்ண வரவேண்டு மென்று வேண்டிக் கொண்டார். அன்பருடைய வேண்டுகோளுக்கு இணங்குவது ஏசுநாதரது இயல்பு. ஆதலால் 'சைமன்' என்ற பெயரை யுடைய அந்தப் பார்சியின் வீட்டிற்கு ஏசுநாதர் விருந்துண்ணச் சென்றார். அப்பொழுது அந்த நகரத்தில் மிகப் பாவியான ஒரு பெண் இருந்தாள். அவளுக்கு ஏசுநாதர் பார்சியின் வீட்டிற்கு விருந் துண்ண வந்திருக்கின்றார் என்பது தெரிந்தது. உடனே அவள் ஏசுநாதரைத் தரிசிக்க வேண்டு மென்று எண்ணினாள்; அப்பார்சியின் வீட்டிற்குச் சென்றாள். சென்றவள் ஏசுநாதரின் முன்பு நின்றாள். தன் கண்ணீரால் அவருடைய பாதங்

களைக் கழுவினுள். பாதங்களில் முத்தமிட்டாள். நல்ல வாசனையுள்ள பொருள்களை அவர் பாதங் களில் தடவினுள்.

இதைக் கண்ட அந்தப் பார்சியானவர் ஏசு நாதர் முக்காலமும் அறியவல்ல ஞானியானுல் இந்தப் பெண் ஒரு பாவி என்பதை அறிவார் என்று தன் மனத்தில் எண்ணினுர். பிறர் மனதை அறிய வல்ல ஏசுநாதர் பார்சியின் எண்ணத்தை அறிந்து கொண்டார். உடனே ஏசுநாதர் அப்பார்சிக்கு ஒரு நீதியைச் சொல்லத் தொடங்கினுர்.

ஏசுதாதர், "சைமனே! ஒருசமயம் ஒரு செல்வன், ஒருவனுக்கு ஐந்நூறு ரூபாயும் மற்ருெரு வனுக்கு ஐம்பது ரூபாயும் கடன் கொடுத்திருந் தான். பலநாள் சென்றும் அவ்விருவராலும் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை. அந்தச் செல்வன் அவ்விருவரின் நிலைமையை யுணர்ந்து 'நீங்கள் உங்கள் கடன்களைத் திரும்பக் கொடுக்கவேண்டாம்' என்று சொல்லி மன்னித்து விட்டான். சைமனே! அவ்விரு கடன்காரர்களில் யார் அச்செல்வனிடம் அதிக நன்றியறிதல் உடையவனுக இருக்கவேண்டும் சொல்" என்று கேட்டார்.

அதைக் கேட்ட சைமன், "ஆண்டவனே! ஐந்நூறு ரூபாய் கடன்தரவேண்டியவன் தான் அச் செல்வனிடம் மிகுந்த நன்றியுடையவனுக இருக்க வேண்டும். ஏனென்ருல் அவன் தான் அதிகமான தொகையைப் பெற்றிருந்தான்" என்ருர்.

இதனுல் சைமன் அதிகமான பாவம் செய்பவர் களை மன்னிப்பதுதான் சிறந்ததென்றும் அப்படி மன்னிக்கப்பட்டவர்கள்தான் அதிக நன்யறிதலை

உடையவர்களாக இருப்பார்களென்றும் அறிந்து கொண்டார்.

ஏசுநாதர் இவ்விதமே பல உயர்ந்த கருத்துக்களைப் பல சிறு கதைகள் மூலம் சாதாரண மக்களும் அறிந்து கொள்ளும்படி சொல்லியிருக்கின்றார். அவை படிக்க மிக இன்பத்தைத் தரும்.

## அருஞ்பதம்

| | | |
|---|---|---|
| போதனை | வேண்டுகோள் | அறியவல்ல |
| புத்திமதி | இணங்குவது | பெரும்பாலும் |
| இயல்பு | எளிதில் | முக்காலம் |

## கேள்விகள்

1. நீதிகளை வெறும் புத்திமதிகளாகச் சொல்வதற்கும் கதைகள் மூலம் விளக்குவதற்குமுள்ள வித்தியாசமென்ன ?

2. பாவியான பெண் ஏசுநாதரை தரிசிக்க வந்ததனால் சைமன் அவரைப்பற்றி என்ன எண்ணினார் ?

3. ஏசுநாதர் அதிகமான பாவம் செய்தவர்களை மன்னிப்பதுதான் சிறந்தது என்பதை எவ்வாறு விளக்கினார் ?

4. ஏசுநாதர் சொன்ன கதையினின்று பார்சி அறிந்ததென்ன ?

5. கீழ்வருபவற்றைக்கொண்டு ஒழுங்கான வாக்கியங்களமைத்துச் சொல்.

| | |
|---|---|
| ராமன் கடைக்குச் சென்று | உயரப் பறக்கும் |
| பறவை ஆகாயத்தில் | புத்தகங்களை வாங்கினான் |
| உபாத்தியாயர் பாடத்தை | கற்றுக் கொண்டார்கள் |
| குதிரை வண்டியை | கற்றுக் கொடுத்தார் |
| பிள்ளைகள் பாடத்தை | இழுக்கும் |
| அண்ணன் நாளைக்கு | வந்தாள் |
| தாயார் நேற்று | வருவான் |
| நாங்கள் ரயிலில் | ஏறினார்கள் |
| அவர்கள் மலையில் | ஏறினோம் |

# 22. மௌன வாசிப்பு–II

## (ராஜாஜி உவமைகள்)

ரோஜாப் புஷ்பம் உயர்வானதா, மல்லிகைப் புஷ்பம் உயர்வானதா என்பது போன்ற வீண் விவாதங்களும் செய்யக்கூடாது. நமக்கு ரோஜா, மல்லிகை எல்லாம் வேண்டியதுதான். சிலர் குழந்தைகளைப் பார்த்து 'உனக்கு அப்பா வேண்டுமா? அம்மா வேண்டுமா?' என்று கேட்பதுண்டு. அப்படிக் கேட்கிறவர்களைக் கன்னத்தில் அறையலாம் என்று எனக்குத் தோன்றும். அதுபோலவே, கவிகளில் எந்தக் கவி உயர்ந்தவர் என்று விவாதிப்பதும் தவறு. 'கம்பர் உயர்ந்தவரா, பாரதி உயர்ந்தவரா?' என்றெல்லாம் விவாதிக்கக்கூடாது. நமக்குக் கம்பரும் வேண்டும்; பாரதியும் வேண்டும். உண்மைக் கவி எது என்று தெரிந்துகொண்டு எல்லாவற்றையும் அனுபவிப்பதற்கு முயற்சிக்க வேண்டும்.

*

ரொம்ப கெட்டிக்காரரர் ஒருவருக்குப் பதவி கிடைக்குமுன்பு பெருமை கொடுக்காமல், பதவி கிடைத்தபின் அவருக்கு மதிப்புக் கொடுப்பது எப்படி என்ருல், ஒருவன் தன் தாயாரை, தன்னைப் பெற்றவள் என்பதற்காக அவளுக்குக் கௌரவம் கொடுக்காமல் லேடீஸ் கிளப் பிரஸிடெண்டான வுடன் அவளுக்கு மதிப்புச் செலுத்துவது போலாகும்.

*

வாழை மரத்தில் பெரும் இலைகள், வளரும் குருத்துக்கு மேலும் நன்ருக வளர நிழல் கொடுக்

கிறது. மாடுகள் குருத்துக்களைக் கடித்துத் தின்று விடாமல் பெரிய இலைகள் தங்களையே தியாகம் செய்து காப்பாற்றுகின்றன. ஆகவே, இளம் குருத்துகள் வளர்ச்சிக்குப் பெரிய இலைகள் தடையாயிருக்குமோ என்று நாம் எண்ணுவது தவறு. அதைப் போல, இளைஞர்கள் வளர்ச்சிக்குப் பெரியவர்கள் தடையாக இருப்பார்களோ என்று எண்ணுவதும் தவறு.

*

டாக்டர் எழுதிக் கொடுக்கும் மருந்தைத் தான் கம்பவுண்டர் நோயாளிகளுக்குக் கொடுக்கவேண் டும். அப்படி இல்லாமல் கம்பவுண்டர் தன் இஷ் டப்படியே மருந்து கொடுக்க முற்பட்டால் நோயாளி பிழைக்கமாட்டார். அதைப் போல, தலைவர்கள் சொல்வதைத்தான் தொண்டர்கள் கேட்கவேண்டும். அப்படி யில்லாமல் தொண்டர் களே தங்கள் இஷ்டப்படி காரியங்களைச் செய்ய ஆரம்பித்தால் தேசம் சீர்குலைந்து விடும்.

*

ஒரு சர்க்காரின் நிர்வாக விஷயங்களில் பொது ஜனங்கள் தலையிடக்கூடாது. என்னுடைய நண் பர்களே சிலர் நான் சென்னை சர்க்காரின் பிரதம மந்திரியாக இருப்பதால் என்னிடம் வந்து, அந்த அதிகாரியை இந்த ஊரைவிட்டு மாற்றுங்கள். இந்த அதிகாரியை அந்த ஊரை விட்டு மாற்றுதீர்கள் என்று எல்லாம் கூறுகிறார்கள். இது விஷயமாக ஒன்று கூற விரும்புகிறேன். ஒருவன் செக்கு ஆட்டிக் கொண்டிருக்கிறான். எண்ணெய் ஆன வுடன், அவனே எல்லோருக்கும் வழங்கிவிடுவான். அவன் கொடுக்கும்வரை காத்திருக்காமல் நீங்களே

அவசரப்பட்டுச் செக்கினுள் கையைவிட்டு எண்ணெயை எடுக்க முயற்சித்தால் என்னவாகும்? உங்கள் கை செக்கில் அகப்பட்டு நசுங்கிவிடும். அதைப் போலச் சர்க்கார் என்ற செக்குக்குள் பொது ஜனங்கள் அவசரப்பட்டுக் கையை விடக் கூடாது. செக்கை ஓட்டிக் கொண்டிருக்கும் நானே உங்களுக்கு எண்ணெயை எடுத்துத் தருவேன்.

*

ஏரியில் நீர் நிறைவது விவசாயிக்குப் பயன் படத்தான். 'இத்தனை தண்ணீரும் என் நன்மைக் காகவே' என்று ஏரி கற்பனை செய்து கொண்டிருக்கலாம். ஆனால், ஏரியில் தண்ணீர் ஏற்ஏற, மடையைத் திறந்து தண்ணீரை வெளியே விட வேண்டியது அவசியமாகிறது. இது இயற்கையின் சட்டம். ஏராளமாய்ப் பணம் குவித்த மனிதனும், ஏரியைப் போலவே, தன் பணத்தை தாராளமாகப் பிறர் உபயோகத்துக்கு வழங்கிவிடுவான். ஆகையால் பணக்காரர்களைப் பார்த்து யாரும் ஆத்திரம் கொள்ளத் தேவையில்லை. நாம் மட்டும் கொஞ்சம் பொறுமையாக இருந்தால், பணக்காரர்கள் தாமாகவே, தங்கள் செல்வத்தைப் பொது நன்மையான காரியங்களுக்கு உதவ முன்வருவார்கள்.



## 23. தமிழ்த் தாத்தா

மிகப் பழைய தமிழ் நூல்களைச் சங்க நூல்கள் என்று சொல்வார்கள். அச்சங்க நூல்கள் நம் நாட்டில் முற்காலத்திலிருந்த அரசர்கள், வள்ளல் கள், புலவர்கள், வீரர்கள் முதலியவர்களுடைய வரலாறுகளை நன்கு எடுத்துக் கூறுபவையாகும். மேலும் நம் தமிழ் நாட்டிலுள்ள மலைகள், ஆறுகள், நகரங்கள் முதலியவற்றையும், நம் பழந் தமிழர்க ளுடைய பழக்க வழக்கங்களையும் இந்நூல்களால் அறியலாம்.

பக்தி நிறைந்த இசைப் பாடல்களும், படிக்க இன்பம் தரும் பல காவியங்களும் நம் தமிழ் நாட்டில் தோன்றின. அதனுல் பழைய சங்க நூல்

களைப் படிப்பவர்கள் குறைந்து விட்டார்கள். ஆகவே நாளடைவில் பல சங்க நூல்கள் மறைந்து விட்டன. இந்நூல்கள் ஓலைச்சுவடியில் எழுதப் பட்டவை. கவனிப்பாரில்லாமையால் இவை செல் லரித்தும், தொளைபட்டும், எழுத்துக்கள் அழிந் தும், வரிகள் மாறியும், பொருள் விளங்காமலும் எங்கோ சிலரிடம் இருந்தன. அவர்களுக்கும் இந் நூல்களின் அருமை பெருமை தெரியவில்லை.

இத்தகைய சங்க நூல்களை மீண்டும் நம் தமிழ் மக்கள் படித்து இன்புறவேண்டும் என்று நம் தமிழ்த் தாய்க்குக் கருணை உண்டாயிற்று. அதனால் கும்பகோணத்திற்குப் பக்கத்திலுள்ள உத்தமதானபுரத்தில் உ. வே. சாமிநாதையர் அவர் கள் தோன்றினர்கள். இவர் தக்க வயதில் உலகம் போற்றும் மகாவித்துவான் மீனட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் முறையாகத் தமிழைக் கற்ருர். அக்காலத்தில் திருவாவடுதுறை மடத்திலிருந்த ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரிடமும் இவர் பாடம் கற்றவர் ஆவர்.

ஸ்ரீ ஐயர் அவர்களுக்குச் சங்க நூல்கள் மறைந்திருக்கின்றன என்பது தெரிந்தது. சங்க நூல்கள் எழுதிய ஓலைச்சுவடிகளைத் தேடுவதற் காகத் தமிழ் நாடு முழுவதும் சுற்றித் திரிந்து படாத பாடு பட்டார். சுவடி உள்ளவர்களிடம் சென்று கேட்டால் எளிதில் கொடுக்கமாட்டார்கள். பலமுறை நடக்கச் செய்வார்கள். சிலர் பொருள் கொடுத்தால்தான் கொடுப்பேன் என்பார்கள். இப் படிக் கஷ்டப்பட்டுச் சுவடியைப் பெற்ருலும் அது சரியாக இராது. அதனல் ஒரு சுவடியைக் கொண்டே ஒரு நூலை ஒழுங்காக அச்சிட முடி

யாது. அதைப் போன்ற பல சுவடிகள் கிடைக்குமிடம் அறிந்து மேலும் தேடவேண்டும்.

இப்படித் தேடிப் பெற்ற சுவடிகளில் உள்ள எழுத்துக்களைச் சாதாரணக் கண்கொண்டு படிக்க முடியாது. விரைவிலும் படிப்பது கஷ்டம். அவ் வேடுகளுக்கு மை பூசிப் பூதக்கண்ணுடி கொண்டு பொறுமையுடன் பல முறை படிக்க வேண்டும். அப்படிப் படித்தும் பொருள் விளங்காமற் போனுலும் தொடர்ச்சி விட்டுப் போனுலும் அதைப் போன்ற வேறு ஏடுகளையும் படித்துப் பார்க்கவேண்டும். இப்படிப் படித்துப் படித்துப் பல வருஷங்கள் உழைத்தால்தான் ஒரு நூலை அச்சிட முடியும்.

இப்படிக் கஷ்டப்பட்டுச் சிந்தாமணி, புறநானூறு, பத்துப்பாட்டு முதலிய பல சங்க நூல்களை ஐயரவர்கள் அச்சிட்டு நம் தமிழ் நாட்டுக்கு உதவிஞர்கள். இவர்கள் புத்தகங்களை அச்சிட்ட முறையைப்போல தமிழ் நாட்டில் வேறெவரும் செய்ததில்லை. மற்ற மொழிகளிலும் இவரைப்போல் பழையநூல்களை அச்சிட்டவர்கள் இல்லையென்றே சொல்லுகிருர்கள். சங்க நூல்களைத் தவிர மற்றும் பல நூல்களையும் மிக அருமையாகவும், அழகாகவும் வெளியிட்டிருக்கிருர்கள். இவ்விதம் ஏறக்குறைய எழுபது நூல்களுக்கு மேல் இவர் அச்சிட்டு வெளியிட்டிருக்கிருர். ஐயரவர்கள் உழைப்பு இல்லையாஞல் சங்க நூல்கள் பல கிடைத்திருக்க மாட்டா. கிடைத்தாலும் நல்ல முறையில் அச்சிடப்பட்டு வெளி வந்திருக்கமாட்டா.

பல வசன நூல்களையும் ஐயரவர்கள் எழுதி வெளியிட்டிருக்கின்ருர்கள். இவர்கள் மிகப் பெரிய படிப்பாளியாக இருந்தும் சிறு பிள்ளைகளும்

எளிதில் அறிந்து கொள்ளும்படி உயர்ந்த கருத்துக்களையெல்லாம் மிக எளிய நடையில் எழுதியிருக்கிறார்கள். இவர்கள் படிக்காத தமிழ் நூல்களே இல்லை யென்னலாம்.

சம்பாஷணையிலும் ஐயரவர்கள் மிகத் திறமையுள்ளவர்கள். கேட்பவர்களுக்கு நேரம் போவதே தெரியாது. உலகம் போற்றும் கவியாகிய தாகூர் அவர்களும் ஒரு சமயம் சென்னைக்கு வந்திருந்த பொழுது ஐயரவர்கள் வீட்டிற்குச் சென்று, அவரையும், அவரது உழைப்பையும், நூல்களையும் கண்டு ஆச்சரியப்பட்டிருக்கிறார். ஆங்கிலேயரும், பிரெஞ்சுக்காரரும் ஐயர் அவர்களை மிகவும் பாராட்டியிருக்கிறார்கள். நம் நாட்டு அரசர்கள், ஜமீன்தார்கள், பெரும் புலவர்கள், மடாதிபதிகள் முதலிய பலரும் ஐயரவர்களைப் பெரிதும் மதித்துப் புகழ்ந்திருக்கிறார்கள். நம் ஞானியார் சுவாமிகளுக்கு ஐயரவர்களிடம் மிகுந்த நட்பும் மதிப்பும் உண்டு.

தமிழ் நாட்டார் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களைப் 'பிள்ளையவர்கள்' என்றும், அவருடைய மாணவராகிய இவரை 'ஐயரவர்கள்' என்றும் பெயரைக் குறிப்பிடாமல் மரியாதையாகச் சொல்வார்கள். இதனால் ஆசிரியரும் மாணவருமாகிய இவ்விருவரது பெருமையை நாம் அறிந்து கொள்ளலாம்.

இவர் முதலில் கும்பகோணம் சர்க்கார் கல்லூரியிலும், பிறகு சென்னையிலுள்ள சர்க்கார் கல்லூரியிலும் தமிழாசிரியராக இருந்து அக்கல்லூரிகளுக்குப் பெருமையை உண்டாக்கினார். அரசாங்கத்தார் இவருக்கு 'மகாமகோபாத்தியாயர்' என்ற பட்டத்தையும் கும்பகோணம் ஸ்ரீலஸ்ரீ சங்கரா

சார்ய சுவாமிகள், 'தாக்ஷிணாத்ய கலாநிதி' என்ற பட்டத்தையும், சென்னை சர்வகலாசாலையார் 'டாக்டர்' என்ற பட்டத்தையும் கொடுத்தார்கள். இவருடைய உருவச்சிலை சென்னையிலுள்ள அரசாங்கக் கல்லூரியில் வைக்கப்படிருக்கிறது. நீங்கள் அங்குச் சென்றால் அவ்வுருவச் சிலையைப் பார்க்கலாம்.

பொறுமை, முயற்சி, உழைப்பு, சுறுசுறுப்பு இந்நான்கும் ஐயரிடம் குடிகொண்டிருந்தன. எவரையும் அலட்சியம் செய்து பேசமாட்டார். இவ்வளவு அரிய பெரிய தொண்டைத் தமிழுக்குச் செய்தும் அவரிடம் தற்புகழ்ச்சி என்பதே கிடையாது.

எண்பத்து நான்கு வயது வரையில் தமிழ்த் தாய்க்கே தொண்டு செய்த ஐயர் இப்பொழுது தமிழ் நூல் வடிவமாகத் தமிழ் மக்களிடையே உலாவிக்கொண்டிருக்கிறார். தமிழைப் போலவே அவரது புகழும் என்றும் நின்று வாழ்க!

### அரும்பதம்

| | |
|---|---|
| சங்க நூல்கள் | காவியங்கள் |
| சிந்தாமணி | வள்ளல் |
| கருணை | புறநானூறு |
| கூறு | தோன்றினர் |
| பத்துப் பாட்டு | பழக்க வழக்கங்கள் |
| தேசிகர் | மகாமகோபாத்தியாயர் |
| தொண்டு; தற்புகழ்ச்சி. | உருவச்சிலை |
| தாக்ஷிணாத்யகலாநிதி | டாக்டர் |

### கேள்விகள்

1. சங்கநூல்கள் என்று எவற்றிற்குப் பெயர்?
2. அந்நூல்களால் நாம் எவைகளை அறியலாம்?

3. ஐயரவர்கள் எவர்களிடம் பாடம் கற்றவர்?

4. ஐயரவர்கள் நம் தமிழுக்குச் செய்த தொண்டு யாது?

5. ஐயரவர்கள் எந்தெந்த இடங்களில் வேலையிலிருந்தார்?

6. ஐயரவர்களின் குணங்களைப் பற்றிச் சொல்.

7. அவர்களின் பட்டப்பெயர்கள் எவை?

8. சென்னைக் கல்லூரியில் அவருக்குச் செய்துள்ள மரியாதை யென்ன?

## பயிற்சி

1. கூறு; கருணை—இச்சொற்களை இரு பொருள்களில் உபயோகித்து வாக்கியங்கள் எழுது.

2. பெயரைக்கொண்டு முடியும் எச்சங்களைப் பற்றி முன்பு படித்தீர்கள்.

அதைப்போல வினையைக் கொண்டுமுடியும் எச்சங்களை 'வினையெச்சம்' என்று சொல்வார்கள்.

எழுதி முடித்தான்; எழுந்துநின்றான்; உண்ண வந்தான்—இவைகளில் 'எழுதி', 'எழுந்து', 'உண்ண' என்ற சொற்கள் எச்சங்கள். இந்த எச்சங்கள் 'முடித்தான்', 'நின்றான்', 'வந்தான்', என்ற வினைகளைக் கொண்டு முடிகின்றன. ஆதலால் இவைகள் 'வினையெச்சங்'களாகும்.

3. பின்வரும் வாக்கியங்களில் உள்ள வினையெச்சங்களை எடுத்துச் சொல்லு:—

(1) பூத்துக் காய்த்தது. (2) முற்றிப் பழுக்கும்.
(3) காண வந்தான். (4) தேடிப் போனான்.
(5) போய்ப் பார்த்தான்.



## 24. யானை

மிருகங்களில் பெரியது யானை. இது காட்டில் வாழும் மிருகங்களில் ஒன்ருக இருப்பினும் நாட்டில் வாழும் மிருகமாகவும் சொல்லலாம். மற்ற மிருகங்களுக்கு இல்லாமல் இதனுடைய மூக்கு தலையிலிருந்து தரைவரையில் தொங்குகிறது. அதற்குத் துதிக்கை என்றும் தும்பிக்கை யென்றும் பெயர். (தும்பி - யானை). அந்தத் துதிக்கையே யானைக்கு மூக்காகவும் இருப்பதால் அதன் நுனியில் மூக்குக்குரிய இரண்டு துவாரங்கள் இருக்கின்றன. அத் துவாரங்களுக்கு இடையில் விரல் போன்ற உறுப்பொன்று உண்டு. அதனுல் அது பூமியில் கிடக்கும் சிறு ஊசியையும் எடுத்துவிடும்.

நம் கைகளில் இருப்பதுபோல் யானையின் துதிக்கையில் எலும்புகள் இல்லாமையால் யானையால் அதைத் தன் விருப்பப்படி வளைக்கமுடியும்.

கையிலுள்ள துவாரங்களால் தண்ணீரை உறிஞ்சி வாயில் வைத்துக் குடிக்கும். சில சமயங்களில் உறிஞ்சிய நீரைத் தன் உடம்பின் மேலேயே வீசிக் கொள்ளும்; வெளியிலும் வீசும். அக்கையாலேயே ஆகாரத்தையும் எடுத்து உண்ணும். பூமியிலுள்ள மண்ணைத் தன் கையால் எடுத்துத் தன் தலையி லேயே போட்டுக் கொள்ளும். அதனால் "யானை தன் தலையில் தானே மண்ணைப் போட்டுக் கொள் வது போல" என்ற பழமொழியும் வழங்குகிறது. விரோதிகளையும் அக்கையால் வளைத்துக் கீழே போட்டுக் காலால் மிதித்துக் கொல்லும். யானை யின் துதிக்கைக்கு கவிகள் பனைமரத்தை உபமான மாகச் சொல்வார்கள்.

யானையின் தலை மிகப் பெரியது. அதனால் அதைத் தாங்குவதற்குத் தக்கபடி கழுத்து குட்டை யாகவும் பருத்தும் இருக்கும். யானை தன் கழுத்தை இஷ்டப்படி திருப்பமுடியாது. தலையைத் திருப்ப வேண்டுமானால் அது தன் உடலையே திருப்பவேண்டியிருக்கிறது. தலையின் மேல் பாகத் தில் இரண்டு பக்கம் மேடாகவும், நடுவில் பள்ள மாகவும் இருக்கும். யானையின் தலைக்கு மத்தகம் என்று பெயர்.

அதன் காதுகள் முறம்போல் பெரியனவாய் இருக்கும். அதன் கன்னங்களில் எப்பொழுதும் ஒருவகையான நீர் பெருகிக்கொண்டே இருக்கும். அதற்கு மதநீர் என்று பெயர். அந்நீர் இனிப்பாக வும், கறுப்பாகவும், ஒருவித மணமுடையதாகவும் இருக்கு மென்பார்கள். அதனால், ஈ எறும்பு முதலி யன அந்நீரில் மொய்க்கவரும். அவைகளை ஓட்டு வதற்காக யானை தன் காதுகளை அடிக்கடி ஆட்டிக்

கொண்டே இருக்கும். யானையின் உருவத்திற்குத் தக்கபடி கண்கள் அமையாமல் சிறியனவாக இருக்கின்றன.

யானையின் உடல் மிகப் பெரியது. அதனால் அதைத் தாங்குவதற்குத் தக்கபடி நான்கு கால்களும் தூண்கள்போல் இருக்கும். கால்களில் விரல்கள் இல்லை. நகங்கள் மட்டும் உண்டு. யானையின் வால் குட்டையாக இருக்கும். வாலின் நுனியில். தடித்த ரோமங்கள் கொஞ்சமாக இருக்கும்.

ஆண் யானைக்குத் தந்தம் உண்டு. பெண் யானைக்கு தந்தம் இல்லை. தந்தம் சுமார் ஐந்து அடி நீளம் வரை வளரும். ஏறக்குறைய ஒன்றரை அடி வரை சுற்றளவு இருக்கும். தந்தம் வளர வளர யானையை வளர்ப்பவர்கள் அதை அறுத்து விடுவார்கள். தந்தம் இருப்பதால் யானைக்குத் தந்தி என்றும் ஒரு பெயர் உண்டு.

யானை ஒரு சாகபட்சிணி. அது தர்ப்பைப் புல்லையும், பலவிதமான தழைகளையும் தின்னும். பழம், தேங்காய்களையும் தின்னும். வெல்லமும், அரிசியும் கலந்து யானைக்கு உணவாகக் கொடுப்பார்கள். கரும்பு தின்பதில் யானைக்குப் பிரியம் அதிகம். அதனால் "யானை வாயில் அகப்பட்ட கரும்பு போல்" என்ற பழமொழியும் வழங்குகிறது. யானை அதிகமான தீனி தின்னும். அதனால் "யானையைக் கட்டித் தீனி போடுவது போல" என்ற ஒரு பழமொழியும் உலகத்தில் உண்டு.

யானை பொதுவாக மலைகளிலும், மலைகளையடுத்த பெருங்காடுகளிலும் வசிக்கும். அவை கூட்டம் கூட்டமாகவே வாழும். நம் தேசத்தில் மலையாளத்திலும், மைசூர் பிரதேசத்திலும் யானை

கள் மிகுதி. பர்மாவிலும், இலங்கையிலும் யானைகள் உண்டு.

மலைகளின் மேலுள்ள தேக்கு முதலிய பெரிய மரங்களை அறுப்பார்கள். அவற்றை யானைகள் உருட்டிக்கொண்டு பக்கத்தில் ஓடும் ஆறுகளில் தள்ளிவிடும். பெரிய மரங்களை ஒன்றின்மேலொன்றாக அடுக்கும். சில இடங்களில் யானைகள் தேரை இழுக்கும். யானைகளைப் பழக்கிச் சர்க்கஸில் பல வேடிக்கைகளைச் செய்யச் சொல்லுவார்கள். கோவில், அரண்மனை, பெரிய மடம் இவைகளில் யானையை வைத்து வளர்ப்பார்கள். திருவிழாக் காலங்களில் சுவாமிக்கு முன்னே யானையை அலங்கரித்துக் கொண்டு போவார்கள். பெரிய ஊர்வலங்களிலும் யானையை முன்னே செல்ல விடுவார்கள்.

முற்காலத்தில் யானையின் மீது அம்பாரி வைத்து அரசர்கள் அதிலிருந்து கொண்டு ஊர் வலம் வருவார்கள். நான்கு வகைப் போர்ப் படைகளில் யானைப்படை சிறந்ததாக முற்காலத்திலிருந்தது. புலி வேட்டையாடுவதற்கு யானையின் மீது ஏறிச் செல்வார்கள். வீதியில் யானை வந்தால் அதன் மேல் கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கும் மணிகள் மாறி மாறி ஒலிக்கும். அதனால் "யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே" என்ற பழமொழியும் வழங்குகிறது.

யானையின் தந்தங்களும், எலும்புகளும் மிக விலை உயர்ந்தவை. அதனால் "யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்" என்று சொல்வார்கள். யானையின் தந்தத்தைக் கொண்டு பொத்தான், அழகிய உருவங்கள், சீப்பு,

கத்திப்பிடி, பெட்டி, பல்லக்கு, கட்டில், தொட்டில் முதலியன செய்கிருர்கள்.

யானை பொதுவாகச் சாதுவான பிராணியே. ஆயினும் அது தனக்குச் செய்த தீமையை மறக்காது. பழிக்குப் பழி வாங்கும். பிள்ளைகளுக்கு யானையைப் பார்ப்பதில் பிரியம் அதிகம். யானையை எவ்வளவு தடவை பார்த்தாலும் வெறுப்பு உண்டாகாது.

தமிழில் ஆண் யானைக்குக் 'களிறு' என்றும் பெண் யானைக்குப் 'பிடி' என்றும் பெயர். சிங்கத்தைப் போலவே யானையைப் பற்றியும் எல்லாக் கவிகளும் வர்ணித்திருக்கிருர்கள். அது படிக்க இன்பம் தரும்.

### அரும்பதம்

| | | |
|---|---|---|
| துதிக்கை | மதநீர் | போர்ப்படை |
| தும்பி | தந்தி | ஒலிக்கும் |
| உறுப்பு | சாகபட்சிணி | பழிக்குப்பழி |
| உவமை | தர்ப்பைப்புல் | களிறு |
| மத்தகம் | அம்பாரி | பிடி |

### கேள்விகள்

1. தும்பிக்கையினுல் யானை என்னென்ன செய்யும்?
2. யானை, தன் காதுகளை ஏன் அடிக்கடி ஆட்டிக் கொண்டிருக்கிறது?
3. யானை எவைகளை உண்ணும்?
4. யானைகள் எங்கு மிகுதியாக வசிக்கும்?
5. யானைகள் மனிதருக்கு எந்தெந்த வகைகளில் உபயோகப்படுகின்றன.
6. யானையின் தந்தத்திலை என்னென்ன பொருள்களைச் செய்கின்ருர்கள்?
7. யானையைப் பற்றிய பழமொழிகளைச் சொல்.

## 25. பழமொழிகள்

1. கரும்பு கட்டோடு இருந்தால் எறும்பு தானே வரும்.

2. பலாப்பழத்திற்கு ஈயைப் பிடித்தா விட வேண்டும் ?

3. தாயைப்போலப் பிள்ளை, நூலைப்போலச் சேலை.

4. தாயும் பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறு.

5. ஈட்டி எட்டினவரை பாயும், பணம் பாதாளம் வரை பாயும்.

6. இல்லாதவன் பொல்லாதவன்.

7. ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்.

8. சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும் ?

9. கோழி மிதித்துக் குஞ்சு முடமாகுமா ?

10. குயவனுக்குப் பலநாள் வேலை, தண்டக்காரனுக்கு ஒரு நாள் வேலை.

11. உழுகிற மாடானால் உள்ளூரிலேயே விலை போகாதா ?

12. நல்ல பிள்ளைக்கு ஒரு சொல், நல்ல மாட்டிற்கு ஒரு அடி.

13. சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்.

14. எருதுநோய் காக்கைக்குத் தெரியுமா ?

15. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.

16. பாடுபட்டவன் பலனடைவான்.



# 26. பழையதும் காப்பியும்

**பழையது** :—அடே காப்பிப் பயலே! நீ என் பக்கத்தில் வராதே. எட்டி நில். உன் சூடு எனக்குப் பொறுக்க முடியவில்லை. எரிச்சலாக இருக்கிறது. 'குபுகுபு' என்று உன் ஆவி மேலே கிளம்புவது எனக்குப் பயமாக இருக்கிறது.

**காப்பி** :—பழையது தாத்தா! ஏன் என்னைக் கண்டால் உங்களுக்கு இவ்வளவு கோபம்? மக்கள் தூங்கி விழிக்கும்பொழுதே என்னைத் தியானம் செய்து கொண்டு தானே எழுந்திருக்கிறார்கள். ஆதலால் நான்தானே இக்காலத்தில் 'கண்கண்ட தெய்வமாக' விளங்குகிறேன். எழுந்தவுடன்

என்னைச் சேவிக்கவில்லை என்றால் அவர்களுக்கு ஒரு வேலையும் ஓடாதே. தலைவலி, சோம்பல், மந்த புத்தி இவையெல்லாம் அவர்களை வாட்டுமே. இப்படி எல்லோரும் விரும்புகின்ற என்னை நீங்கள் வெறுப்பானேன்?

**பழையது** :—அடே அற்பப் பயலே! நேற்று முளைத்த உனக்கு இவ்வளவு பெருமையா? புதிதாக ஒன்று வந்தால் மக்கள் அதை நல்லதா கெட்டதா என்று ஆராய்வதே இல்லை. பொருள் எதுவாக இருந்தாலும் புதிதென்றால் அதில் ஒரு மதிப்புக் கொள்ளுகிறார்கள். புதியது என்பதனால் ஒரு பொருளுக்கு உயர்வும், பழையது என்பதனால் ஒரு பொருளுக்குத் தாழ்வும் உண்டா என்ன? பொருள்களுக்குக் குணமல்லவோ முக்கியம்.

**காப்பி** :—தாத்தா! இக்காலத்தில் மக்களுடைய விருப்பத்திற்கல்லவோ மதிப்பு! பொருள்களின் உயர்வும் தாழ்வும் எதற்கு? நீங்கள் நகரங்களை எடுத்துக் கொண்டாலும் சரி, கிராமங்களை எடுத்துக் கொண்டாலும் சரி, எங்கேயாவது 'பழையது கடை' என்று ஒன்று இருக்கிறதா? எங்குப் பார்த்தாலும் என் பெயருள்ள கடைகள் தானே நிறைந்திருக்கின்றன. தாத்தா! இன்னொரு செய்தியையும் நீங்கள் நுட்பமாகக் கவனியுங்கள். என்னுடன் இட்லி, தோசை, அல்வா, ஜாங்கிரி, பஜ்ஜி, பகோடா முதலிய எத்தனையோ புதுப் புதுப் பொருள்கள் இருந்தாலும் என் ஆதரவிலல்லவோ அவைகள் வாழ வேண்டியிருக்கின்றன? ஆதலால் அக் கடைக்குக் 'காப்பிக் கிளப்' என்று என் பெயரை வைத்துத்தானே அழைக்கிறார்கள். இதனால் மற்றைய உணவுப்

பொருள்களுக்கு நானில்லையென்றால் பெருமை யேது? அவைகள் விலையாவதும் கஷ்டம்.

**பழையது**:—அடே சின்னப் பயலே! உன்னைத் தயார் செய்வதற்கு அடுப்பு, கெட்டில், காப்பிப் பொடி, பில்டர், பால், சர்க்கரை, அதிலும் அஸ்கா சர்க்கரை இவைகள் எல்லாம் வேண்டும். இவற்றைக்கொண்டு உன்னைத் தயார் செய்ய ஏறக்குறைய அரைமணி நேரமாவது வேண்டும். இவ்வளவும் ஆனபிறகு உன்னை உடனே சாப்பிட முடியுமா? நீ கொதி கொதி என்று கொதிப்பாய். உன்னை டபராடம்ளரில் ஊற்றிக் கைகளை மேலும் கீழுமாகத் தூக்கித் தூக்கி ஆற்றவேண்டும். உன்னைச் சாப்பிடுவதற்கு எவ்வளவு பாடு!

ஆனால் என்னையோ, பல் துலக்கின உடன் இலையையோ தட்டையோ எடுத்து வைத்துக் கொண்டு, அதில் என்னைப் பிழிந்து எடுத்துப் போட்டு, வேண்டிய அளவு உப்பையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். பிறகு ஆடைத்தயிரை அப்படியே ஊற்றிப் பிசைந்து சாப்பிடவேண்டியது தான். வேண்டுமானால் அருமையான எலுமிச்சை, கடாரங்காய், மாங்காய் முதலிய ஊறுகாய்களைத் தொட்டுக்கொள்ளலாம். உன்னைச் சாப்பிட்ட உடனே வேர்ப்பதுபோல் என்னைச் சாப்பிட்டவுடன் வேர்க்காது. ஜில்லென்று குளிர்ச்சியாக இருப்பேன். சாப்பிடுகிறவர்கள் உடலும் பருத்து வளரும்; திடமாகவும் இருக்கும். கஷ்டமான வேலைகளையும் செய்யமுடியும். முற்கால மனிதர் திடமாகவும் அமைதியாகவும், மகிழ்ச்சியுடனும் இருந்ததற்குக் காரணம் நான்தான் என்பதைத் தெரிந்து கொள். மேலும் கம்பன், காளிதாசன், தமிழ்த்

தாத்தா உ. வே. சாமிநாதையர் முதலிய பலர் என்னைச் சாப்பிட்டுத்தான் கல்வியில் தேர்ச்சி யடைந்தார்களா, உன்னைச் சாப்பிட்டுத் தேர்ச்சி அடைந்தார்களா ?

**காப்பி** :—அதெல்லாம் சரிதான் தாத்தா, என்னைச் சாப்பிட்டால்தான் இக்காலத்தில் சுறுசுறுப்பும், யோசனையும் உண்டாகிறதென்று சொல்லுகிறார்கள். உங்களைச் சாப்பிட்டால் மந்தமாகவும், சோம்பலாகவும் இருக்கிறதென்றும், தூக்கம் வருகிறதென்றும் சொல்லுகிறார்கள்,

**பழையது** :—அடே பொடிப் பயலே! நீ இந்த நாட்டானே இல்லையே! நீ வந்த பிறகு வரவர மக்கள் மெலிந்துபோகிறார்கள். என்புருக்கி, க்ஷயம், நீரிழிவு முதலிய நோய்கள் வருகின்றன என்று வைத்தியர்கள் சொல்லுகிறார்களே. உன்னிடத்தில் 'காபீன்' என்ற விஷமும் இருக்கிறதாம். இதனால் நீ மக்களுடைய உயிரையும் நாளடைவில் சிறிது சிறிதாகத் தின்று, அவர்கள் பணத்தையும் ஒழித்து விடுகிறாய். இதனால்தான் காந்திஜீ முதலிய பலர் உன் முகத்திலேயே விழித்ததில்லை.

இதுமட்டுமா ? உன்னால் எனக்குத் தொல்லைகள் பல. முற்காலத்தில் பகலில் பாற்செலவு அதிகமில்லை. அதனால் நாட்டில் பாலும், தயிரும், வெண்ணெயும், நெய்யும் நிரம்பக்கிடைத்தன. பிள்ளைகள் அவற்றை நிரம்பச் சாப்பிட்டுத் திடமாக வளர்ந்தார்கள். எனக்கும் நல்ல ஆடைத்தயிர் கிடைத்தது. கன்றுகளும் தாய்ப்பாலை உண்டு திடமாக இருந்தன. இப்பொழுது உள்ள கன்றுகளைப் பார். அவை உயிரில்லாதவைகளாக அல்லவோ காணப்படுகின்றன ! இதனால்தான்,

" கன்றுக்குப் பாலை விட்டுக் கறந்தது அந்தக்காலம்—
அது அந்தக்காலம்—பொல்லாக்
காப்பிக்குப் பாலை ஒட்டக் கறப்பது இந்தக்காலம்—
இது இந்தக்காலம் "

என்று பாடுகிருர்கள். உன் தொல்லைமட்டுமா? உன் தோழர்களான டீ, கோகோ, ஓவல்டின் முதலியவர்களும் உன்னுடன் கூடச்சேர்ந்து பாலைக் கொள்ளையடித்துக்கொண்டு போகிருர்கள்.

கன்றுகளுக்கு நல்ல பாலில்லாமையால் நிலத்தை உழத் திடமான எருதுகளில்லை. அதனுல் நல்ல விளைவு இல்லை. விளைவில்லாததால் மக்களுக்குப் போதுமான உணவு கிடைப்பதில்லை. நல்ல உணவில்லாமையால் கண் குழிந்து, முதுகு வளைந்து மக்கள் காணப்படுகிருர்கள். தவிர என்னை ஒரு நாளில் ஒருதரம்தான் உண்பார்கள். உன்னையோ தண்ணீர் குடிப்பதுபோல் பலர் அடிக்கடி சாப்பிடுகிருர்கள். நீ இருக்குமிடத்திற்குக் 'காப்பி கிளப்பு' என்று முதலில் பெயர் வைத்தவன் அறிவாளி யென்றே நினைக்கின்றேன். 'கிளப்பு' என்ற சொல்லைத் தமிழாக வைத்துப் படித்தால் 'இத்தேசத்தை விட்டுக் காப்பியை கிளப்பு' என்று பொருள்படுவது போலல்லவோ இருக்கிறது! அதனுல் இவ்வளவு தொல்லையைத் தருகின்ற உன்னை உஷ்ண தேசமாகிய இதை விட்டுக் கிளப்பத்தான் வேண்டும்.

காப்பி :—தாத்தா நீங்கள் சொல்வதெல்லாம் பாரததேசத்துக்குப் பொருத்தமானதாக இருக்கலாம். ஆனுலும், எனக்குப் பெரும்பான்மையான மக்களுடைய ஆதரவு நிரம்ப இருக்கிறது. அதனுல் என்னை விரட்ட உங்களால் முடியாது.

# 27. யானையின் கண்ணீர்

புதுக்கோட்டை ஸமஸ்தானத்தில் திவான் ரீஜண்டாக இருந்து பல அரிய செயல்களைச் செய்த பெரியாராகிய ஸ்ரீமான் அமராவதி சேஷையா சாஸ்திரிகள் தமிழ் நாட்டிற்குப் புகழ் உண்டாக்கிய வர்களுள் ஒருவர். புதுக்கோட்டை வாசிகள் இப் பொழுது பலவிதமான நன்மைகளை அனுபவிப் பதற்கு முக்கியமான காரணம் அப்பெரியாருடைய அரும் பெருஞ் செயல்களேயன்று சொல்ல வேண்டும். சாஸ்திரியாருடைய பேராற்றலை மேல் நாட்டாரும் பலபடியாகப் பாராட்டியிருக்கிறார்கள். ஒரு தமிழரசை உலகம் முழுதும் மதிக்கும்படி செய்த அவருடைய வரலாறுகள் பலரால் எழுதப் பட்டிருக்கின்றன.

சாஸ்திரிகளுடைய சமயோசித புத்தியும், நிர் வாகத் திறமையும், ஊகமும் ஒப்புயர்வற்றன. ஜனங்களுடைய இயல்புகளை நன்றாக அறிந்து அவர்களுடைய குறைகளைத் தீர்ப்பதில் அவருக்கு இருந்த ஊக்கம் அதிகம்; வாயில்லாப் பிராணிக ளுடைய இயல்புகளையுணர்ந்து அவற்றின் துன்பங் களை நீக்குவதில் பின்னும் மிக்க கவனமுடைய வராக அவர் இருந்தார்.

அவர் புதுக்கோட்டையில் உத்தியோகம் பார்த்த பின்பும் கும்பகோணத்தில் சுகஜீவியாக இருந்து காலங்கழிக்கலானார். அக்காலத்தில் நான் அவரை அடிக்கடிப் பார்த்துப் பேசி மகிழ்வதுண்டு. தாம் புதுக்கோட்டையில் இருந்த காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை உத்ஸாகத்தோடு அவர் கூறுவார். அவருடைய வாய்மொழியால் அறிந்த

பல வரலாறுகள் அவருடைய பேராற்றலை எனக்கு விளக்கின. அவர் மிகவும் ஸ்தூலமான சரீர முடையவர். ஆதலின் பெரும்பாலும் புறத்தே செல்லாமல் இருந்த இடத்திலேயே யிருந்து தம்மு டைய அதிகாரத்தைச் செலுத்தி வந்தது வியத்தற் குரியது. அரசாங்கத்தில் நடைபெறும் ஒவ்வொரு விஷயத்தையும் அவர் நன்றாக அறிந்திருந்தார்.

அவரைப் பார்த்தால் யானையொன்று உட் கார்ந்திருப்பது போலவே தோன்றும். உண்மை யில் அவர் புதுக்கோட்டை அரசாங்கத்தில் மிக்க கம்பீரமான வாழ்க்கையை நடத்தி யானையைப் போலவே விளங்கினர். அந்த யானை சொன்னவற் றுள் புதுக்கோட்டை யரசர்க்குரிய பட்டத்து யானையைப்பற்றிய செய்தி ஒன்று. அவர் கூறிய படியே அதனை எழுதுகிறேன்.

“ஒரு சமயம் பட்டத்து யானைக்கு மதம் பிடித்ததாகச் சிலர் என்னிடம் சொன்னார்கள். சில காலமாக அது தனக்குக் கொடுக்கும் தீனியை உண்பதில்லையென்றும், ஏதாவது, கொடுத்தால் அதை எறிந்துவிடுகிறதென்றும், காலிற்போட்டு மிதித்துவிடுகிறதென்றும், அதனருகே ஒருவரும் நெருங்கமுடியவில்லை யென்றும் சொன்னார்கள். யானை அடிக்கடி பிளிறிக்கொண்டேயிருந்தது. ஆகாரம் இல்லாமல் எவ்வளவு நாள்தான் இருக்க முடியும்?

உடனே அந்த யானையின் பாகனை வரு வித்து விசாரித்தேன். அவன் மிக்க பயத்தோடு என்னிடம் வந்தான். பழைய பாகன் சில நாட் களுக்கு முன்பு இறந்து விட்டதாகவும், தன்னை அந்த யானைக்குப் பாகனாக அதிகாரிகள் நியமித்

திருப்பதாகவும் சொன்னுன். ‘ நான் என்ன செய்வேன் ! என்னுல் ஆன தந்திரங்களை யெல்லாம் செய்து பார்த்தேன். அது வழிக்கு வரவில்லை. இப்பொழுதுதான் மதம் பிடிக்க ஆரம்பம். இப்படியே இருந்தால் மிஞ்சி விடும். என்னுடைய துரதிர்ஷ்டம் இப்படி வந்து சேர்ந்தது !' என்ருன். நான், ‘ இப்பொழுது எங்கே இருக்கிறது அது?' என்று கேட்டேன். அவன் இடத்தைக் கூறிவிட்டு ‘ அதன் நிலை பயங்கரமாக இருந்தமையால் நான்கு கால்களிலும் சங்கிலியிட்டு ஜாக்கிரதையாகக் கட்டியிருக்கிறேன் ' என்ருன்.

நானே ஒரு முறை அந்த யானையைப் பார்க்க விரும்பினேன். ஒரு நாள் அந்த யானை இருந்த இடத்துக்குப் போனேன். கரும்பு, அரிசி, அச்சு வெல்லம் முதலியவைகளை ஆட்களிடம் சொல்லி எடுத்துவரச் செய்தேன். கரும்பை அதனிடம் போடச் சொன்னேன். அதை யானை எடுத்து மறுபடியும் கீழேபோட்டு விட்டது. அப்பால் பயங்கரமான குரலோடு அது முழங்கியது. அதனுடைய கண்களிலிருந்து நீர் தாரை தாரையாகப் பெருகி வழிந்தது.

இந்த நிலையில், அந்த யானையைச் சுற்றி வேடிக்கைப் பார்க்க அங்கே வந்து சிலர் கூடினுர்கள். சில நிமிஷங்கள் சென்றன. யானை கூட்டத்தைப் பார்த்தது. திடீரென்று எதையோ புதிதாகக் கண்டதுபோலக் கூட்டத்தின் ஒரு பக்கமாக நோக்கித் தன் துதிக்கையை நீட்டி நீட்டிக் கத்தத் தொடங்கிற்று.

அது தன் துதிக்கையை நீட்டிய பக்கத்தில் ஒரு மாது நின்றுகொண்டிருந்தாள். அவள் விம்மி

விம்மி அழுதாள். அவளுடைய கண்ணீருக்குக் காரணம் புலப்படவில்லை. யானையின் கண்ணீருக்கும் அவளுடைய கண்ணீருக்கும் ஏதோ சம்பந்தம் இருக்க வேண்டுமென்று நான் ஊகித்தேன். உடனே அவளை அழைத்து, 'நீ யார்? எதற்காக அழுகிறாய்?' என்று கேட்டேன்.

அவள், "சாமி! இந்த யானைக்குப் பாகராயிருந்தவர் என் புருஷர். அவர் இரண்டு வாரத்துக்கு முன் இறந்துபோனார். இந்த யானையை அவர் சொந்தப் பிள்ளையைப் போலவே காப்பாற்றி வந்தார். அவர் இறந்துபோன துக்கத்தால் நான் வெளியிலே வரவில்லை. இதற்கு மதம் பிடித்திருக்கிறதென்று சிலபேர் சொன்னார்கள். எங்கள் வீட்டுப் பிள்ளையைப்போல வளர்த்த இதைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன். எத்தனை தடவை என் கையால் இதற்குத் தீனி கொடுத்திருக்கிறேன்! இதைப் பார்க்கிறபோது என் புருஷருடைய ஞாபகம் வந்தது; அதனால் துக்கம் தாங்க முடியவில்லை. அவர் இருந்தால் இந்த யானைக்கு இப்படித் துன்பம் வரப் பார்த்துக் கொண்டிருப்பாரா?" என்று சொல்லிவிட்டு மீண்டும் அழுதாள்.

நான் அவளைச் சமாதானப்படுத்தி, 'நீ வருத்தப்பட வேண்டாம். இந்த யானைக்கு உன் கையால் ஏதாவது கொடு; வாங்கிக் கொள்கிறதா பார்ப்போம்' என்றேன்.

அவள் ஒரு கரும்பையெடுத்து யானையினுடைய துதிக்கை எட்டும் தூரத்திற்குச் சென்று பயந்துகொண்டே அதை நீட்டினாள். யானை மிக்க ஆவலோடு அதை வாங்கிக் கொண்டது. அதனால்

மேலெல்லாம் தடவிக்கொண்டது. பிறகு தன் வாய்க்குள் வைத்துக்கொண்டு தின்ன ஆரம்பித்தது. அங்கிருந்த யாவரும் ஆச்சரியமடைந்து சந்தோஷத்தால் ஆரவாரம் செய்தார்கள்.

அவள் பின்னும் சில கரும்புகளை யானைக்குக் கொடுத்தாள். எல்லாவற்றையும் அது தின்றது. அதற்குத் தன் பழைய பாகனிடத்தில் இருந்த அன்பின் உறுதி இதனால் தெரிந்தது. அவனுடைய மரணமே அந்த யானைக்கும் அவன் மனைவிக்கும் கண்ணீரை உண்டாக்கக் காரணமாயிற்றென்பதை நான் உணர்ந்தபோது என் கண்ணிலும் நீர்த்துளி உண்டாயிற்று.

விஷயம் எனக்கு நன்றாக விளங்கியது. யானையின் நோய்க்குப் பரிகாரமும் தெரிந்தது. நேரில் பார்க்காமல் விஷயத்தைக் கேள்வியுற்று யானையின் மதநீரைப் பார்க்க எண்ணிச் சென்றேன். அது கண்ணீரால் தன் துக்கத்தைத் தெரிவித்தது. அன்று முதல் அந்த யானைக்குப் பழைய பாகன் மனைவியே கவளம் ஊட்டிவந்தாள். அவள் வீட்டுப் பிள்ளையைப்போல வளர்ந்த அதற்கு அவள் உணவளித்தல் தானே நியாயமாகும்! புதிய பாகனும் நாளடைவில் அவள் மூலமாக யானையின் பழக்கத்தைப் பெற்றான். அந்த யானையால், தன் கணவன் இறந்த பின்பும் அவளுக்கு ஸமஸ்தானத்தின் உதவி கிடைத்தது. புருஷனுக்குப் பின்பு பிள்ளை தாயைக் காப்பாற்றும் முறைக்கு இது பொருத்தமாக இருந்தது.

மகாமகோபாத்தியாய
தாக்ஷிணாத்திய கலாநிதி
**டாக்டர் உ. வே. சாமிநாதையர்**

## அருஞ்பதம்

| | | |
|---|---|---|
| திவான்ரீஜண்டு | நிர்வாகம் | புறத்தே |
| சமஸ்தானம் | ஊகம் | வியத்தற்குரியது |
| பேராற்றல் | ஒப்புயர்வற்றன | பிளிறிக்கொண்டே |
| பலபடியாக | சுகஜீவி | முழங்கியது |
| வரலாறு | நிகழ்ச்சிகளை | கவளம் |
| | ஸ்தூலமான | |

## கேள்விகள்

1. புதுக்கோட்டை சமஸ்தானம் யாரால் நன்மை பெற்றது?
2. சேஷய்யா சாஸ்திரிகளைப் பற்றி ஒரு குறிப்பு எழுது.
3. யானைக்கு என்ன நோய் வந்ததாகப் பாகன் சொன்னான்?
4. திவான் யானையின் நோயை நீக்க எவ்வாறு முயன்றார்?
5. யானைக்கு வந்த நோய் யாது?
6. யானையின் நோய் எவ்வாறு நீங்கிற்று?

# 28. நபி நாயகம்

மக்களை நல்வழிப் படுத்துவதற்காகத் தோன்றிய மகான்கள் பலர். மக்களிடம் கடவுள் நம்பிக்கை, பிறருக்கு உதவுதல், நல்லொழுக்கம் முதலியவைகள் குறைகின்ற காலத்தில்தான் இத்தகைய பெரியவர்கள் தோன்றுவார்கள். அப்படித் தோன்றியவர்கள் புத்தர், சங்கரர், ஏசுநாதர், முகம்மது நபி, ராமகிருஷ்ண பரமஹம்ஸர், காந்தி மகான் முதலியவர்கள் ஆவார்கள். இம்மகான்களில் நபி நாயகத்தைப் பற்றிச் சிறிது அறிந்து கொள்வோம்.

நபி நாயகத்தை 'முகம்மது நபி' என்று சொல்வார்கள். இவர் நம் பரதகண்டத்திற்கு மேற்கிலுள்ள 'அரேபியா' என்னும் தேசத்தில் 'மெக்கா' என்னும் நகரில் சுமார் 1400 ஆண்டுகளுக்கு முன் தோன்றியவர். இவர் தோன்றுதற்கு முன்னமேயே இவர் தந்தையார் இறந்துவிட்டார். தாயையும் ஆறுவது வயதில் இழந்தார். ஆதலால் நபிநாயகம் ஒரு சிறிய வர்த்தகராகிய தமது சிறிய தந்தையாரின் பாதுகாப்பில் வளர்ந்து வந்தார். அத் தந்தையாருடன் பல ஊர்களுக்குச் சென்று சரக்குகளை வாங்கி வியாபாரம் செய்து வாழ்ந்து வந்தார். இவ்விதம் சில வருடங்கள் சென்றபின், அவர் செல்வச் சீமாட்டியாகிய 'கதீஜா' என்னும் அம்மையாரிடம் வேலையில் அமர்ந்தார். சிலகாலம் சென்றபின் அவ்வம்மையாரையே மணந்து கொண்டார்.

முகம்மது நபி நுட்பமான அறிவுடையவர். எவற்றையும் ஆழ்ந்து ஆராயும் திறமையுடையவர்.

# அகஸ்தியர் தமிழ் வாசகம்

## ஐந்தாம் வகுப்பு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 NOV. 1955
MADRAS

ஆக்கியோர் :
வித்துவான் R. துரைசாமி
தலைமைத் தமிழாசிரியர், பிஷப் ஹீபர் உயர்நிலைப்பள்ளி,
தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி.
V. ராமுடு அய்யர்
ஆசிரியர், E. R. உயர்நிலைப்பள்ளி, திருச்சி.

அகஸ்தியர் புத்தகசாலை
தெப்பக்குளம் : : திருச்சிராப்பள்ளி
1955

பதிப்புரிமை]

[விலை அணா 10

முதல் பதிப்பு—1950
நான்காம் பதிப்பு—அக்டோபர் 1955

TB
031(5)
N55

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
[*Fort St. George Gazette of* 19-5-54
*Supplement to Part I-B, Page* 22]

சென்னை-600 008.
13992

Kabeer Printing Works, Madras (3037)

13/9/92
TB
03/157
NSS

இயற்கையிலேயே இவருக்குக் கடவுள் பக்தி அதிகம். இரக்கம், உண்மை, பெருந்தன்மை முதலிய நற்குணங்களும் இவரிடம் நிறைந்திருந்தன.

அக்காலத்தில் அரேபியா நாட்டில் இருந்த மக்களிடம் நியாயம், நல்லொழுக்கம் முதலியன குறைந்திருந்தன. மேலும் அம்மக்கள் மதுபானம் செய்வதும், திருடுவதும், ஏழைகளை வருத்துவதுமாக இருந்தனர். கடவுளைப் பற்றியோ, புண்ணிய பாவங்களைப் பற்றியோ கவலைப்படுவதில்லை. இவர்களது நிலைமையைக் கண்ட நபியவர்கள் மிகவும் மனம் வருந்தினர். அவர்களை நல்வழிப் படுத்தவேண்டு மென்று எண்ணினர்.

ஒரு நாள் முகம்மது நபி கடவுளைத் தொழுது கொண்டிருந்தார். அப்பொழுது கடவுள் அவர்முன் தோன்றி ‘‘நபியே! இந்நாட்டிலுள்ள மக்களுக்கு நம்மைப் பற்றிய ஞானத்தை உபதேசம் செய்’’ என்று அருள் செய்தார். நபியவர்களும் ஆண்டவன் இட்ட கட்டளையைச் சிரமேற் கொண்டார்.

பின்னர், அம்மக்களுக்கு ஆண்டவனைப் பற்றி உபதேசம் செய்யத் தொடங்கினர். ‘கடவுள் ஒருவரே. நாம் அவரை நாள்தோறும் தொழவேண்டும். அவரே நம் அனைவரையும் படைத்துக் காக்கின்றார். நமக்கு வேண்டிய நன்மைகளைத் தருபவரும் அவரே. நாம் எல்லோரும் அவருடைய பிள்ளைகளே. ஆகையால் நாமெல்லோரும் சகோதரர் ஆவோம். நமக்குள் உயர்வு, தாழ்வு, பணக்காரர், ஏழை என்ற வேறுபாடு கூடாது. பெண்கள், பிள்ளைகள், ஏழைகள் முதலிய யாவர்க்கும் எவ்வித தொந்தரையும் நாம் செய்யக் கூடாது. அன்புட

னும், ஒற்றுமையுடனும் நாம் வாழவேண்டும். மதுபானம் செய்தல், திருடுதல், பொய் சொல்லுதல் முதலிய தீய செயல்களை அறவே ஒழிக்கவேண்டும்' என்று உபதேசித்தார். முகம்மது நபியினுடைய இந்த உபதேசங்களை ஏற்று அதன்படி நடந்த வர்கள் முகம்மதியர் ஆயினர்.

முகம்மது நபியவர்களின் கொள்கைகளும் உபதேசங்களும் அடங்கிய நூலுக்குக் 'குரான்' என்பது பெயர். அது முகம்மதியர்களது வேத மாகும். முதலில் அது அரபி பாஷையில் எழுதப் பட்டது.

நபியவர்களின் கொள்கைகள் அரேபியா நாட்டு மக்களுக்கு என்று சொல்லப்பட்டவை. ஆயினும் அவை எல்லா மதங்களுக்கும் பொதுவான கொள் கைகளேயாகும்.

ஒரு சிற்றுண்டி விடுதியில் பலவிதமான உணவுப் பொருள்கள் இருக்கின்றன. அங்குச் செல்லும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பொரு ளில் விருப்பம் உண்டாகிறது. எல்லோரும் ஒரே பொருளையே விரும்புவதில்லை. இதனால் மக்க ளுடைய மனநிலை ஒரேவிதமாக இருப்பதில்லை என்பது தெரிகிறது. ஆயினும் அங்குச் செல்லு கின்ற ஒவ்வொருவருடைய நோக்கமும் பசியடங்க உண்ணவேண்டு மென்பது ஒன்றே. அதுபோல மக்களுடைய மனநிலை, இடம், காலம் முதலிய வற்றிற்குத் தக்கபடி மதங்கள் பலவாக இருக் கின்றன. ஆயினும் அம்மதங்களின் நோக்கமெல் லாம் 'மக்கள் நல்வழியில் வாழவேண்டும். எங்கும் நிறைந்துள்ள ஒரே கடவுளை அடையவேண்டு' மென்பதே. ஆதலால் இவ்வுண்மையை யுணர்ந்து

எல்லா மதத்தினரும் ஒற்றுமையுடனும், அன்புடனும், சகோதரத் தன்மையுடனும் வாழ்வது தான் முறையாகும். அப்பொழுதுதான் உலகமும் நன்மை யடையும். ஆண்டவன் அருளையும் பெறலாம்.

## அரும்பதம்

| | | |
|---|---|---|
| மகான்கள் | நுட்பமான | சிற்றுண்டி விடுதி |
| சரக்குக்கள் | சிரமேற்கொண்டார் | நோக்கம் |
| சீமாட்டி | அறவே | மனநிலை |
| அமர்ந்தார் | கொள்கை | மதம் |

## கேள்விகள்

1. மகான்கள் எப்பொழுது தோன்றுவார்கள் ?
2. மகான்களில் நால்வரைச் சொல்லு.
3. நபிநாயகம் எங்கே தோன்றினர் ?
4. அவர் தோன்றிய காலத்தில் அந்நாட்டு மக்கள் எப்படியிருந்தனர் ?
5. நபிநாயகத்திற்கு ஆண்டவனிட்ட கட்டளை என்ன ?
6. நபிநாயகம் மக்களுக்கு என்ன உபதேசம் செய்தார் ?
7. ‘குரான்’ என்பது என்ன ?
8. மதங்கள் பலவாக இருப்பினும் நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதை விளக்கு.

## பயிற்சி

1. இரக்கம்—இறக்கம் இவற்றின் பொருள் வேறுபாடு விளங்க ஒவ்வொரு வாக்கியம் எழுது.
2. ‘மதம்’ இச்சொல்லை இருபொருளில் எழுது.
3. எதிர்ப்பதங் கூறு: பெண்கள்; ஒற்றுமை; விருப்பம்.
4. பின்வரும் பதங்களைச் சேர்த்து எழுது :—

   எள் + நெய்; வெண்மை + நெய்; அ + குதிரை; இ + ஊர்; வேறு + வேறு; பாதி + பாதி.

# 29. மூடச் சீடர்கள்

## (நாடகம்)

### அங்கம் 1. காட்சி 1.

இடம் :—குருவின் குடிசைக்குச் சற்று தூரத்தில் உள்ள கிணறு.

காலம் :—இரவு சுமார் 8 மணி.

பாத்திரர் :—குரு, மூடன், முட்டாள், மட்டி, மடையன் ஆகியோர்.

[குரு மூடன் என்ற சீடனைப் பார்த்து கிணற்றிலிருந்து ஒரு வாளி தண்ணீர் கொண்டுவரச் சொல்லுகிறார்.]

குரு :—ஏ மூடா! கிணற்றிலிருந்து ஒரு வாளி தண்ணீர் கொண்டுவா.

மூடன் :—(கிணற்றுக்குச் சென்று உள்ளே எட்டிப் பார்த்து) ஐயையோ! சந்திரன் கிணற்றில் விழுந்து விட்டானே! ஒரு சமயம் தாகம் தாங்காமல் தண்ணீர் குடிக்க வந்தவன் விழுந்து விட்டானோ என்னவோ! ஐயோ பாவம்! இவனை எப்படியாவது காப்பாற்ற வேண்டும். வாளியைக் கிணற்றில் விட்டால் அதில் அவன் உட்கார்ந்து கொள்வான். அப்படியே மெள்ள மேலே தூக்கி விட்டுவிடுவோம்.

[வாளியைக் கிணற்றில் விடுகிறான். அதனால் கிணற்று நீர் அலைகிறது. சந்திர பிம்பமும் அசைகிறது.]

ஐயையோ! சந்திரன் துடிக்கிறானே! செத்துப் போய் விடுவான் போலிருக்கிறதே!

அடே சந்திரா! சந்திரா! வாளியில் உட்கார்ந்து கொள்ளடா. உன்னை மெள்ளத் தூக்கி வெளியில் விட்டு விடுகிறேன்.

[வாளியின் காது கிணற்றில் ஒரு பக்கத்தில் கல் லிடுக்கில் அகப்பட்டுக் கொள்கிறது. இழுக்க முடியவில்லை ]

அடேயப்பா! சந்திரன் எவ்வளவு கனமாக இருக் கிருன்! தூக்க முடியவில்லையே! (உரத்த குரலில்) அடே முட்டாள்! ஓடி வாடா! ஓடி வாடா! சந்திரன் வாளியில் உட்கார்ந்துகொண்டு விட்டான். என் ஒருவனுல் தூக்க முடியவில்லை. வாடா சீக்கிரம்.

குரு :—அடே முட்டாள்! மூடன் தண்ணீர் கொண்டுவரப்போனுன். எவ்வளவு நேரமாயிற்று! ஒரு வேளை கிணற்றில் விழுந்து விட்டானே என்னவோ தெரியவில்லையே. நீ ஓடிப்போய்ப் பார்.

**முட்டாள்** :—(மூடன் குரல் கேட்டு) குருவே! அதோ கூப்பிடுகிருன் மூடன். நான் ஓடிப்போய்ப் பார்க்கிறேன். (கிணற்றண்டை மூடனைக் கண்டு) ஏண்டா மூடா! ஒரு வாளி தண்ணீர் கொண்டுவர இவ்வளவு நேரமா! குரு கோபித்துக் கொள்ளு கிருர்.

**மூடன்** :—அடே போடா முட்டாள்! சந்திரன் கிணற்றில் விழுந்து விட்டான். நான் வாளியை விட்டேன். அவன் துடியாய்த் துடித்தான். பிறகு வாளியில் வந்து உட்கார்ந்து விட்டான். நிரம்ப கன மாக இருக்கிருன். தூக்க முடியவில்லை. அவன் செத்தாலும் சாகட்டும். குருவுக்குத் தண்ணீர் கொண்டு போகலாம் என்ருலோ வாளியையும்

விடமாட்டேன் என்கிருன். நீயும் வாடா. கயிற்றைப் பிடித்து இழுடா.

[இருவரும் சேர்ந்து இழுக்கிருர்கள். முடியவில்லை. இருவரும் சேர்ந்து]

அடே! மட்டியையும் கூப்பிடுவோமாடா! மூன்று பேருமாகத் தூக்கி விடலாம். பாவம்! சந்திரனும் பிழைத்துப் போகட்டும். அடே! மட்டீ! ஓடிவா! ஓடிவா.

குரு :-ஏ மட்டீ! இந்த முட்டாளும் போய் நேரமாகி விட்டதே. ஒரு வாளி தண்ணீருக்கு இரண்டு பேர் போயும் இவ்வளவு நேரமா? நீ போ. சீக்கிரம் தண்ணீர் கொண்டுவா.

மட்டி :—சாமி! சாமி! அதோ கூப்பிடுகிருர்கள் இரண்டு பேருமாக. அவர்களுக்கு என்னவோ ஆபத்து வந்துவிட்டது போலிருக்கிறது. நான் ஓடிப்போய்ப் பார்க்கிறேன்.

(ஓடுகிருன்)

மட்டி :—ஏண்டா மூடப்பயல்களா! இரண்டு பேருமாக வந்தும் தண்ணீருக்கு இந்நேரமா? குரு 'போடு, போடு' என்று அங்கே சண்டை போடுகிருர்.

முதலிருவரும் :—போடா மட்டீ! உனக்கு என்னடா தெரியும்! சந்திரன் கிணற்றில் விழுந்துவிட்டான். பாவம்! அவனை வாளியை விட்டு எடுக்கப் போனேம். அவன் அதிலே உட்கார்ந்து கொண்டு வாளியையும் விடமாட்டேன் என்கிருன். பாராங் கல்லாட்டம் கனக்கிருன். தூக்க முடியவில்லை. நீயும் வந்து தூக்கு. மெள்ள அவனை வெளியில் எடுத்து விடுவோம்.

[மூவருமாக கயிற்றைப் பிடித்து இழுக்கின்றனர்.]

**மூவரும்** :—அடேயப்பா மூன்று பேரும் சேர்ந்தும் தூக்கமுடியவில்லையே! சந்திரன் எவ்வளவு கனமடா! அடே! இப்போ என்னடா செய்கிறது? (யோசித்து) சரி, நாலு பேரும் சேர்ந்தால் தூக்கி விடலாம். மடையனையும் கூப்பிடுவோம். ஏ மடையா! மடையா! ஓடி வாடா! சீக்கிரம் ஓடி வாடா!

குரு :—ஏ மடையா! என்னடா இந்த மூன்று பேரும் போய் எவ்வளவு நேரமாகிறது? ஒரு வாளி தண்ணீர் கொண்டுவர இவ்வளவு நேரமா? கிணற்றில் தண்ணீர் இல்லையா என்ன?

**மடையன்** :—சாமி! சாமீ! ஏதோ கூச்சல் கேட்கிறது. இந்தப் பயல்களுடைய கூச்சல் மாதிரித்தான் தோன்றுகிறது. இதோ ஓடிப்போய்ப் பார்த்து வருகிறேன்? [ஓடுகிருன்]

(அவர்களைக் கிட்டி) அடேய்! உப்புப் போட்டு சோறு தின்கிறீர்களா இல்லையா? குருவோ அங்கே தொண்டைத் தண்ணீர் போகக் கத்துகிருர். ஒரு வாளித் தண்ணீர் கொண்டுவரத் திறமையில்லையா? இதற்கு மூன்றுபேரா? ஏதோ கயிற்றைப் பிடித்து இழுத்துக் கொண்டு நிற்கிறீர்களே! தேரா என்ன?

**மூவரும்** :—அடே போடா! மடையா. நாங்கள் என்ன செய்கிருேமென்று உனக்குத் தெரியுமா? பாவம் சந்திரன் கிணற்றில் விழுந்து விட்டான். உயிருக்குத் துடிக்கிருன். நாங்கள் அவன் உயிரைக் காப்பாற்றப் பார்க்கிருேம். அவனே வாளியிலே உட்கார்ந்து விட்டான்; நிரம்பக் கனக்கிருன். பயந்துகொண்டு வாளியையும் பிடித்துக்கொண்டு விட்டான். மூன்று பேரும் மூச்சைப் பிடித்துக் கொண்டு இழுக்கின்ருேம். வாளி, தண்ணீரை

விட்டே கிளம்பவில்லை. நீ யென்னமோ விரட்டு கிருயே. சரி, நீயும் வாடா; வந்து பிடி. உனக்கும் ஒரு உயிரைக் காப்பாற்றிய புண்ணியம் வரட்டும். சட்டென்றுவா.

[நால்வரும் பிடித்திழுக்கின்றனர்.]

**நால்வரும்** :—அடே! நாலு பேருமாகப் பிடித்துத் இழுக்கின்ருேம். வாளி இன்னும் வரமாட்டேன் என்கிறதே. என்னடா செய்வோம்!

**மூடன்** :—அடே! நான் எவ்வளவு நேரமா இந்த வாளிக்குள்ளே இருக்கிற சந்திரனைத் தூக்கப் பாடு படுகிறேன். இன்னும் அவன் வாளியை விட மாட்டேன் என்கிருனே! நான் சொல்வதைக் கேளுங்கள். எல்லோரும் ஒருவர்பின் ஒருவராகக் கயிற்றைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்வோம். மூச்சுக் கட்டுவோம். ஒரே மூச்சில் பிடித்திழுப்போம். இதுதான் கடைசித் தடவை.

**முட்டாள்** :—ஆமாமடா! அவன் சொல்வது தான் சரி. எல்லோருமாக ஒரு பிடி பிடிப்போமடா.

**மட்டி** :—சரிடா! இவ்வளவு நேரமாக இழுத்தும் முடியவில்லையே! இப்பவும் முடியாமற் போனல்?

**மடையன்** :—உடனே குருவினிடம் சென்று விஷயத்தையாவது சீக்கிரம் தெரிவித்து விடுவோம். ஜலமில்லாமற் போனலும் போகிறது. குருவோ அங்கே கோபித்துக் கொண்டிருக்கிருர்.

**மற்றவர்கள்** :—சரிசரி. இழுப்போம்.

## அங்கம் 1. காட்சி 2.

**இடம் :** கிணற்றங்கரை.

**காலம் :** இரவு சுமார் 9 மணி.

**பாத்திரர் :** நான்கு சீடர்கள், குரு ஆகியோர்.

[நால்வருமாக கயிற்றைப் பிடித்து வலுவாக இழுக்கின்றனர். கயிறு பட்டென்று அறுகிறது. சீடர்கள் ஒருவர்மேல் ஒருவராய் விழுகின்றனர். ஒருவரிருவருக்கு அடியும் படுகிறது. சத்தத்தைக் கேட்டு குரு திடுக்கிடுகிறார்.]

**குரு :**—(தமக்குள்) என்னடா இது ! இந்த அறிவில்லாதவர்களுடன் மாரடிக்க வேண்டியிருக்கிறது. இவர்களை, என்னைவிட்டுத் தொலையுங்களடா என்றாலும் தொலையவும் மாட்டேன் என்கிறார்கள். ஏதோ சத்தம் கேட்கிறது. இந்த மடையர்கள் என்ன தான் ஆனார்கள் என்பதைப் போயாவது பார்த்து வருவோம். இவர்களிடத்தில் ஒரு வேலையைச் சொல்வதும் போதும், நாம் திண்டாடுவதும் போதும்.

[கிணற்றண்டை போகிறார்.]

ஏ மடையர்களா ! என்னடா செய்கிறீர்களங்கு நால்வருமாக ? கிணறு ஏதாவது வெட்டுகிறீர்களா என்ன ? ஒரு வாளி தண்ணீர் கொண்டுவர இவ்வளவு நேரமா ? (இதற்குள்)

**மூடன் :**—(இடுப்பைப் பிடித்துக் கொண்டு) ஐயையோ ! இடுப்பில் அடிபட்டு விட்டதடா. வலிக்கிறதே. ஐயோ ! எழுந்திருக்கவே முடியவில்லையடா !

முட்டாள்:—(முழங்காலைப் பிடித்துகொண்டு) அடேயப்பா! கால் சருக்கிக் கொண்டே போய் விட்டதடா. முழங்காலை மடக்கவே முடிய வில்லையே! எப்படியடா எழுந்திருப்பேன்?

மட்டி :—நல்லவேளையடா. நான் கீழே விழ வில்லை. ஆனாலும், என் மண்டையில் பின்புறம் (முட்டாளைக் காட்டி) இவன் பல் 'டணர்' என்று இடித்துவிட்டது. நிரம்ப வலிக்கிறது. ஏ மடையா! நீ சற்றுப் பாரடா (தலையின் பின்புறம் காட்டி) ஏதாவது காயம் பட்டு ரத்தம் வருகிறதா என்று.

மடையன் :—(தலையை திருப்பிப் பார்த்து), ரத்தம் வரவில்லையடா. நல்லவேளை எனக்கு அடி ஒன்றும் இல்லை. கீழேயும் விழவில்லை. கால் மட்டும் தான் கொஞ்சம் வழுக்கிவிட்டது.

[நால்வரும் குரு தம்மைக் கிட்டிவிட்டதை அறிந்து பரபரப்புடன் தமது துன்பங்களையும் கவனியாமல் எழுந்து பயத்தால் நடுங்கி மரியாதையாக ஒரு புறமாக ஒதுங்கி நின்று கொண்டு ஒருவரை யொருவர் பார்க்கின்றனர்.]

குரு :—(கோபத்துடன்) என்னடா! பரமானந்த சீடர்களே! என்ன செய்கிறீர்களடா இங்கு இவ்வளவு நேரமாக? நன்ருக அனுப்பினேன் நான் மூடனைத் தண்ணீர் கொண்டுவர! என்ன சத்தம் இங்கு?

[சீடர்கள் நால்வரும் ஒருவரையொருவர் பார்த்து விழிக்கின்றனர். ஒருவரும் பேசவில்லை.]

என்னடா விழிக்கிறீர்கள்? நடந்ததென்ன? சொல்லுங்கள். ஏ மூடா! உன்னைத்தானே நான்

முதலில் அனுப்பினேன். என்ன நடந்தது ? தைரிய மாகச் சொல். பயப்படாதே.

[மூடன் முட்டாளையும், முட்டாள் மட்டியையும் பயத்தால் ஒருவரையொருவர் பார்த்து ஏதோ பேச ஆரம்பிக்கின்றனர். பேச நா எழவில்லை.]

**குரு** :—என்னடா விழிக்கிறீர்கள் ? விஷய மென்ன ! ஏ மடையா ! நீதான் சொல்லேன் ? கடைசியில் வந்தவனுயிற்றே. என்ன அறிந்தாய் ?

**மடையன்** :—குருவே ! நான் சொல்லி விடு கிறேன். மூடன் முதலில் தண்ணீர் இறைக்க வாளி யைக் கிணற்றில் விட்டான். கிணற்றில் சந்திரன் விழுந்து விட்டதைப் பார்த்தான். அவனை வெளியே எடுத்து அவன் உயிரைக் காப்பாற்ற நினைத் தான் ; வாளியை இழுத்தான். சந்திரனே வாளியில் உட்கார்ந்து விட்டான். பயத்தினுல் வாளியை யும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கிருன். நாங்கள் நாலு பேருமாகப் பிடித்து இழுத்துப் பார்த்தோம். சந்திரன் எங்களைக் கீழே தள்ளி விட்டுக் கிணற்றுக்குள் ஒளிந்து கொண்டிருக் கிருன். மூடனுக்கு நல்ல அடி சுவாமி இடுப்பில். முட்டாளுக்குக் கால் போச்சு. எனக்கோ மண்டை யிலே பல்லடி.

**மற்றமூவரும்** :—சுவாமி ! நீங்கள் வேண்டு மானுல் கிணற்றில் வந்து பாருங்கள். நாங்கள் சொல்வது பொய்யா, மெய்யா என்பது தெரியும்.

[இதற்குள் ஆகாயத்தில் பெரிய மேகம் ஒன்று சந்திரனை மறைத்துக் கொள்கிறது.]

**குரு** :—(குலுங்கக் குலுங்க நகைத்து) அடே மடையர்களா ! சந்திரன் கிணற்றிலா விழுந்து விட்

டான்? அதை நான் வேறேவந்து பார்க்க வேண்டுமா? பேஷ்! உங்கள் மடத்தனத்திற்குத் தகுந்தாற்போல் நான் வைத்த மூடன், முட்டாள், மட்டி, மடையன் என்ற பேர்கள் உங்களுக்குப் பொருத்தமாகத் தானிருக்கின்றன.

**நால்வரும்** :—சுவாமி, நாங்கள் சத்தியமாகச் சொல்லுகிருேம். நாங்கள் சொல்வதற்காகவாவது நீங்கள் கிணற்றில் வந்து பாருங்கள்.

[வணங்குகிருர்கள்.]

[குரு சீடர்களுடன் கிணற்றை எட்டிப் பார்க்கிருர்.]

**குரு** :—[கிணற்றிற்குள் சுட்டிக்காட்டி] ஏ மடையர்களா! எங்கேயடா உங்கள் சந்திரன்?

[சீடர்கள் எல்லோரும் சந்திரனைக் காணுமல்]

**நால்வரும்** :—ஐயையோ சாமி! அவன் எங்களுக்குத் தெரியாமல் எப்படியோ கிணற்றிலிருந்து தப்பிக் கொண்டு போய் விட்டான்.

**மூடன்** :—போனல் போகட்டும். அவன் எப்படியோ உயிர் தப்பினனே அதுவே போதும்.

**மற்றவரும்** :—ஆமாம். மூடன் சொல்வது சரிதான். நாம் அடிபட்டாலும், கயிறு, வாளி இவைகள் போனலும், சந்திரனுடைய உயிரைக் காப்பாற்றினேமே, அதுதான் பெரிது.

**குரு** :—(சிரிப்பும் திருப்தியையும் காண்பித்து) ஏ அறிவீனர்களே! சந்திரன் கிணற்றில் விழவில்லையடா, அவன் பிரகாசிக்கும்பொழுது அவனுடைய பிம்பம்தான் நீரில் தெரியும். அதைத்தான் நீங்கள் முதலில் பார்த்திருக்கிறீர்கள்.

**மூடன்**:—அப்படியானல், இப்பொழுது அவன் எங்கே சுவாமி?

குரு :—அடேமடையா? அதோ பார். ஆகாயத்தில் மேகம் சந்திரனை மறைத்து விட்டது. அதனுல் எங்கும் சந்திர வெளிச்சம் மங்கலாக இருக்கிறது. கிணற்றிலும் சந்திர பிம்பம் தெரியவில்லை. இதோ பார், இப்பொழுது கிணற்றில் சந்திரன் தெரியும்.

[மேகத்தை விட்டுச் சந்திரன் வெளிவருகிருன்.]

**நால்வரும்** :—(கிணற்றுள் எட்டிப் பார்த்து) ஆமாம் சுவாமீ! ஆமாமடா அதோ சந்திரன்! குரு சொன்னது மெய்தான் போலிருக்கிறது.

**மடையன்** :—ஆமாம் சுவாமீ! வாளியையும் கயிற்றையும் யார் இழுத்துப் பிடித்துக் கொண்டது?

குரு :—அடே புத்தியில்லாதவர்களே! வாளி கிணற்றுக்குள் அடியில் ஏதோ ஓர் கல்லில் சிக்கிக் கொண்டு விட்டது. அதை நீங்கள் அறியாமல் முட்டாள்தனமாக இழுத்ததால் கயிறும் அறுந்தது. நீங்களும் அடிபட்டீர்கள். வாளியும் கிணற்றில் விழுந்து விட்டது.

**நால்வரும்** :—(குருவை வணங்கி) சுவாமீ! இப்பொழுதுதான் எங்களுக்கு விஷயம் தெரிந்தது. புத்தி வந்தது. எங்கள் மடத்தனத்தை எப்படியாவது தாங்கள்தான் போக்கி அருள்புரிய வேண்டும். எங்களைத் 'தொலையுங்கள்' என்று விரட்டக்கூடாது. தாங்கள் நாங்கள் இப்பொழுது செய்த குற்றத்தையும் மன்னிக்க வேண்டும்.

குரு:—சரி தொலையுங்கள். ஏ மடையா! அந்த மூடன், முட்டாள் இவர்களுக்கு நம்மிடமிருக்கும் மருந்தைப் போடு.

[எல்லோரும் போகின்றனர்.]

திரை விழுகிறது

# செய்யுள்—I

## குமரேச சதகம்

### வணிகரியல்பு

கொண்டபடி போலும் விலைபேசி லாபஞ்சிறிது
கூடிவர நய முரைப்பார்
கொள்ளுமொரு முதலுக்கு மோசம் வராதபடி
குறுகவே செலவு செய்வார்.

வண்டப் புரட்டர்தா முறிதந்து பொன்னடகு
வைக்கினுங் கடன் ஈந்திடார்
மருவு நாணயமுளோர் கேட்டனுப்புகினு மவர்
வார்த்தையி லெலாங் கொடுப்பார்.

கண்டெழுது பற்று வரவினின் மயிர்பிளந்தே
கணக்கி லணுவாகிலும் விடார்.
காசு வீணிற் செலவிடா ருசிதமானதிற்
கன திரவியங்கள் விடுவார்.

மண்டலத்தூடு கனவர்த்தகம் செய்கின்ற
வணிகர்க்கு முறைமை யிவைகாண்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

குறிப்பு :—முறிதந்து - பத்திரம் எழுதித்தந்து.
வார்த்தையில் - வார்த்தையில் நம்பிக்கைவைத்து.

# செய்யுள்—II

## விவேக சிந்தாமணி

பிள்ளைதான் வயதில் மூத்தாற்
பிதாவின் சொற் புத்தி கேளான்
கள்ளின் நல் குழலாள் மூத்தால்
கணவனைக் கருதிப் பாராள்
தெள்ளுற வித்தை கற்றால்
சீடனும் குருவைத் தேடான்
உள்ள நோய்ப் பிணிகள் தீர்ந்தால்
உலகர் பண்டிதரைத் தேடார்.

(கள்ளின் - தேனையுடைய)

அரும்பு கோணிடில் அது மணங்குன்றுமோ
கரும்பு கோணிடில் கட்டியும் பாகுமாம்
இரும்பு கோணிடில் யானையை வெல்லலாம்
நரம்பு கோணிடில் நாமதற்கென் செய்வோம்.

(கட்டி - வெல்லம்)

கதிர்பெறு செந்நெல்வாடக் கார்க்குலங் கண்டுசென்றே
கொதிதிரைக் கடலிற்பெய்யுங் கொள்கைபோல் குவலயத்தே
மதிதனம் படைத்தபேர்கள் வாடினோர் முகத்தைப்பாரார்
நிதிமிகப் படைத்தோர்க் கீவார் நிலையிலார்க் கீயமாட்டார்.

கார்க்குலம் - மேகக்கூட்டம்; கொதிதிரை - உக்கிரமான அலை; மதிதனம் - மதிக்கத்தக்க செல்வம்.

சங்குவெண் தாமரைக்குத் தந்தைதாய்
இரவிதண்ணீர்
அங்கதைக் கொய்துவிட்டால் அழுகச் செய்து
அந்நீர் கொல்லும்

துங்கவன் கரையில் போட்டால் சூரியன்
காய்ந்து கொல்வான்.
தங்களின் நிலைமை கெட்டால் இப்படித்
தயங்குவாரோ.

குறிப்பு—சங்கு வெண்தாமரை - சங்குபோன்ற வெண்மை யான தாமரை.

துங்கம் - உயர்ந்த. வன்கரை - வல் + கரை - பலமான கரை.

ஆரம்பூண்ட மணிமார்பா அயோத்திக்
கரசே அண்ணுகேள்
ஈரம் இருக்க மரமிருக்க இலைகள்
உதிர்ந்த வாறேது
வாரம் கொண்டு வழக்குரைத்து மண்மேல்
நின்று வலிய பேசி
ஒரஞ் சொன்ன குடியதுபோல் உதிர்ந்து
கிடைக்கும் தம்பியரே.

வாரம் - ஒரு பக்கத்தில் அன்பு; ஓரம் - பட்சபாதம்.

# செய்யுள்—III

## 1. நல்வழி

1. வருந்தி யழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்ருற் போகா—இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணுக நெடுந்தூரம் தாநினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்.

2. ஈட்டும் பொருண்முயற்சி யெண்ணிறந்தவாயினுமூழ்
கூட்டும் படியன்றிக் கூடாவாம்—தேட்டம்
மரியாதை காணு மகிதலத்தீர் கேண்மின்
தரியாது காணுந் தனம்.

3. ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர்—வேண்டா
நமக்கும் அதுவழியே நாம்போ மளவும்
எமக்கென்னென்று இட்டுண் டிரும்.

4. பூவாதே காய்க்கும் மரமுமுள மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே—தூவா
விரைத்தாலும் நன்ருகா வித்தெனவே பேதைக்(கு)
உரைத்தாலுந் தோன்ரு துணர்வு.

5. செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம்—வையத்து
அறும்பாவ மென்னவறிந் தன்றிடார்க் கின்று
வெறும்பானை பொங்குமோ மேல்?

6. நீரு நிழலும் நிலம்பொதியும் நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும்—ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்றும்
தரும்சிவந்த தாமரையாள் தான்.

7. பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்கு
ஆவிதான் போயினபின்பு ஆரே யனுபவிப்பார்
பாவிகா ளந்தப் பணம்?

8. ஆன முதலில் அதிகஞ் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்குங் கள்ளனா யேழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு.

9. ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளு மீசன் செயல்.

10. கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற்று ஈன்றெடுத்த தாய்
செல்லாது அவன் வாயிற் சொல். [வேண்டாள்

## 2. வாக்குண்டாம்

1. நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்.

2. அட்டாலும் பால்சுவையில் குன்றாது அளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

3. அடுத்து முயன்றாலும் ஆகுநாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா—தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா.

4. உற்ற இடத்தில் உயிர்வழங்குந் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ—கற்றூண்
பிளந்திறுவ தல்லால் பெரும்பாரந் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான்?

5. நீரளவே ஆகுமாம் நீர் ஆம்பல் தான்கற்ற
நூலளவே ஆகுமாம் நுண்அறிவு—மேலைத்
தவத்தளவே ஆகுமாம் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே ஆகும் குணம்.

6. நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று.

7. நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை.

8. கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சபை நடுவே
நீட்டோலை வாசியா நின்ருன் குறிப்பறிய
மாட்டா தவன் நன் மரம்.

9. கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாக பாவித்துத்—தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினுற் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

10. அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர்—அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு.

11. சீரியர் கெட்டாலும் சீரியரே சீரியர்மற்று
அல்லாதார் கெட்டாலங் கென்ணுகும்—சீரிய [ணுகும்
பொன்னின் குடமுடைந்தாற் பொன்ணுகும்; என்
மண்ணின் குடைமுடைந்தக் கால்.

12. உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா
உடன்பிறந்தே கொல்லும் வியாதி—உடன்பிறவா
மாமலையில் உள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரும் உண்டு.

13. கற்பிளவோடு ஒப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோடு ஒப்பாரும் போல்வாரே-விற்பிடித்து
நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்.

14. நற்று மரைக்கயத்தில் நல்அன்னம் சேர்ந்தாற்போல்
கற்றுரைக் கற்றுரே காமுறுவர்—கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம்.

15. நஞ்சுடைமை தானறிந்து நாகங் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு—நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர்.

16. மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்,
மன்னனில் கற்றோன் சிறப்புடையன்—மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாஞ் சிறப்பு.

17. கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்
அல்லாத மாந்தர்க்கு அறங்கூற்றம்—மெல்லிய
வாழைக்குத் தான்ஈன்ற காய்கூற்றம்; கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண்.

18. சந்தன மென்குறடு தான்தேய்ந்த காலத்தும்
கந்தம் குறைபடாது ஆதலால்—தம்தம்
தனம்சிறியர் ஆயினும் தார்வேந்தர் கெட்டால்
மனம்சிறியர் ஆவரோ மற்று.

TB
031(5)
N85

1. நம் தேசம் பாரததேசம்.
2. நம் நாடு தமிழ் நாடு.
3. நம் மொழி தமிழ்மொழி.
4. தமிழுக்கு இலக்கணம் செய்தவர் அகஸ்தியர்.

131992

# AGASTHIAR TAMIL VACHAKAM

## BOOK V

BY
Vidwan R. DORAISWAMY
AND
V. RAMUDOO IYER

AGASTHIAR BOOK DEPOT.
TEPPAKULAM :: TIRUCHIRAPALLI

*Copyright*]

[*Price As.* 10